


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2053*

*மலர் - 14 இதழ் - 03 - ஜுன் 2022*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ். சண்முகநாதன்*
*தி.ரத்தினசபாபதி*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி.சரவணன்*

இதழ் வடிவமைப்பு

*கா. குணசேகரன்*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 45.00, ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*


உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.


**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


1 படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன்........................................04

2 தமிழ்வழிக் கல்விக்கு முதல் எதிரி தனியார் பள்ளிகளே!
டாக்டர். சு.நரேந்திரன்........................................11

3 நாட்டார் மரபில் விஷ்ணுவிற்கும் உரிமை உண்டு
அ.கா.பெருமாள்........................................19

4 தமிழ் - பிராகிருத மொழிகளில் புறப் பாடல்கள் ஒப்பீடு
ஆ.கார்த்திகேயன்........................................25

5 மனிதகுல வரலாற்றின் நீண்ட பயணம்
ப.கு.ராஜன்........................................30

6 புறக்கணிப்பு பெற்றோர்கள்
மருத்துவர். ப.வைத்திலிங்கம்........................................43

7 வானவில் எழுத்து: தமிழ் நாவல்களின் செல்நெறி
இரா.காமராசு........................................47

8 எக்காலத்திற்குமான நீதியின் போக்கு
சுப்ரபாரதிமணியன்........................................55

9 கலை இலக்கியப் பெருமன்ற வைரவிழா மாநாடு
தொகுப்பு: இசைக்கும் மணி........................................57

10 நாம் தேடும் புது அரசியல்
க.பழனித்துரை........................................60

11 கானகன் நாவல் கட்டமைக்கும் பளியர்களின் வாழ்வியல்
ந. இரத்தினக்குமார்........................................64

12 நன்னூல் ஓர் இன்னூல்
மு.சத்யா ........................................69

13 கவி கா.மு.ஷெரீபின் களப்பாட்டு
பேராசிரியர் உ. அலிபாவா........................................72




# தென்கலை வைணவர்கள்

**காதரின் யங்:**
**(2021) கிளர்ந்தெழுந்த மாற்றங்கள்**

(தமிழ்நாட்டின் சமயம், சாதி, அரசியலில் பிராமணர் அல்லாத தென்கலை வைணவர்களின் பங்களிப்பு).

*katherine Young (2021)Turbulent Transformations. Non Brahmin srivaisnavas on Religion, Caste And Politics in Tamil Nadu. Orient Black Swan, Hyderabad. 500 029*

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

தென்கலை வைணவத்தின் பிராமணர்கள் பல்வேறு சாதிப்பிரிவினரையும் வைணவர் என்ற பொது அடையாளத்திற்குள் ஏற்றுக்கொண்டதுடன் வழிபாட்டிற்காக அவர்களைக் கோயிலினுள் அனுமதித்தார்கள். ஆனால் திருக்குலத்தாரை மட்டும் கோயில் நுழைவுச் சட்டம் வரும் வரை அனுமதிக்கவில்லை. அதே நேரத்தில் திவ்விய பிரபந்தம் பாடுவதற்கு மட்டும் பிராமணர் அல்லாதாரை அனுமதிக்கவில்லை. இது குறித்துப் பின்வரும் கருத்துக்களை ஆசிரியர் முன்வைக்கிறார்.

- 1930களில் நீதிக் கட்சியின் வளர்ச்சி குறிப்பிடத் தக்க அளவுக்கு உருப்பெற்றுவிட்டது. அத்துடன் பெரியாரின் செல்வாக்கும் வளர்ச்சி பெற்றுவிட்டது.
- வேத நிபுணர்கள் குறைந்து போனார்கள்.
- திவ்விய பிரபந்தத்தைப் பாடும் உரிமை தமக்கே இருக்க வேண்டும் என்று விரும்பும் பிராமணர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

- ஏற்கெனவே நம்மாழ்வார் இயற்றிய 'திருவாய்மொழி'யைப் பாடும் உரிமை அவர்களுக்கே உரித்தாய் இருந்தது.
- திவ்விய பிரபந்தம் பாடுவது வைணவர்களின் கடமையாகவும் மரியாதைக்குரியதாகவும் விளங்கிவந்தது.
- ஏற்கெனவே இராமானுஜ நாயகர் என்ற வன்னியர் சமூக வைணவ அடியார் கோயிலின் பிராமணப் பூசகர்களுடன் கோயிலிலும் புதுச்சேரியைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் திவ்விய பிரபந்தம் பாடுவது தொடர்பாகப் போராடியுள்ளார்.

**பூசை செய்யும் உரிமை**


தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறையானது கோயில்களில் வழிபாடு நடத்துவிக்கும் அர்ச்சகர்களுக்குப் பயிற்சி அளிக்கும் உரிமையைத் தன்னகத்தே கொண்டிருந்தது. இது குறித்த சட்டம் 1959இல் இயற்றப்பட்டிருந்தது. இச் சட்டத்தின் அடிப்படையில் 2006 ஆவது ஆண்டில் அர்ச்சகர்கள் நியமனம் தொடர்பான ஆணை ஒன்றை வெளியிட்டது. இதன்படி உரிய தகுதியும் பயிற்சியும் உடைய எந்த இந்துவும் இந்துக் கோயில்களில் அர்ச்சகராக நியமிக்கப் படலாம். இந்த ஆணையானது சாதி அடிப்படையிலான தகுதியைப் புறந்தள்ளிவிட்டது.

இந்த ஆணையை எதிர்த்து சில பிராமண அர்ச்சகர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். தங்களின் பாரம்பரிய உரிமையில் இது குறுக்கிடுவதாக அவர்கள் தம் மனுவில் குறிப்பிட்டிருந்தனர். இவ் வழக்கின் தீர்ப்புக்காக அவர்கள் காத்திருந்த வேளையில் பிராமணர் அல்லாதாருக்குப் பயிற்சி அளிக்கும் நோக்கில் அர்ச்சகராகப் பயிற்சி தரும் பள்ளிகளை அரசு திறந்தது. இவற்றில் வடமொழியில் உள்ள பஞ்சாரத்திரப் பனுவல்களின் அடிப்படையில் சமயச் சடங்குகள் நிகழ்த்துவதும்கூடக் கற்றுக் கொடுக்கப்பட்டது. என்ன காரணத்தாலோ இப் பள்ளிகள் திடீரென்று மூடப்பட்டன. தலித்துகளுக்கு உரிமையான கோயில் ஒன்றில் பரம்பரையாக வழிபாடு நடத்திவந்த குடும்பத்தைச் சேர்ந்த கேசவன் என்பவர் இப் பள்ளியில் சேர்ந்து பயிற்சி பெற்றிருந்தார். பயிற்சி முடித்து நான்காண்டுகள் ஆகியும் அர்ச்சகர் பணி அவருக்கு வழங்கப்படவில்லை. உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் தீர்ப்பு வழங்கப்படாமையே இதற்குக் காரணம். இதற்குப் பின்னால் சாதி வேறுபாட்டை விரும்புவோர் இருப்பதாக அவர் குற்றம் சாட்டியதாக நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பல கோயில்களில் அர்ச்சகர்கள் தேவைப்படும் நிலையில் முறையாகப் பயிற்சி பெற்றோரை நியமிக்காத நிலை உள்ளது. இது குறித்து இப் பயிற்சி பெற்ற தலித் மாணவர்களிடம் உரையாடல் வழி நூலாசிரியர் கேட்டறிந்த செய்திகள் வருமாறு:

- ஆகம விதிமுறைகளில் முறையாகப் பயிற்சி பெற்ற தலித் மாணவர்களை நியமிக்காமைக்கான உண்மைக் காரணம் இவர்களுடன் பணத்தை அல்லது அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள விரும்பாமையே.
- மந்திரங்களையும், ஆசிர்வாதங்களையும் வடமொழியில் கூறும் மரபிற்கு மாறாக தமிழில் கூற வேண்டும். வடமொழியைப் பயன்படுத்துதல் என்பது பிராமணர்களின் அதிகாரத்தைப் பாதுகாப்பதாக உள்ளது.

தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் பொதுச் செயலாளரான திரு.ஜகந்நாதன் என்பவர் 'தலித்துகள் தூய்மையற்றவர்கள் அல்லர். ஆனால் பிராமணர்களைப் போன்று தூய்மையானவர்கள் அல்லர்' என்று குறிப்பிட்டதுடன் அவர்கள் புகை பிடிப்பவர்களாகவும் மது அருந்துபவர்களாகவும் அழுக்கான ஆடைகளை அணிபவர்களாகவும் இருப்பதாகக் குறை பட்டுள்ளதையும் குறிப்பிட்டுள்ளார்.



தலித்துகளிடம் பாகுபாடு காட்டும் போக்கு பிராமணர்களிடம் மட்டுமின்றி பிராமணர் அல்லாதாரிடமும் நிலவுவதை இந்நூலாசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார். பிராமணர் அல்லாத பூசாரிகள் பணிபுரியும் கிராமப்புறக் கோயில்களில் வழிபாடு செய்ய தலித்துகளை அனுமதிப்பதில்லை. இது குறித்து சட்டமன்ற உறுப்பினராக இருந்த (தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்) திரு ரவிக்குமார், பிராமணர் அல்லாதார் அர்ச்சகராவதை பிராமணர்கள் எதிர்க்கிறார்கள் என்றால் தலித்துகள் அர்ச்சகராவதை முன்னாள் பிற்படுத்தப்பட்ட சாதியினர் எதிர்ப்பதாகக் கூறியுள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ளது குறிப்பிடத் தக்கது. கேரளத்தில் சனாதன இந்து அமைப்புக்களின் ஆதரவுடன் பிராமணர் அல்லாதார் அர்ச்சகர்களானதாகக் குறிப்பிட்டு அப்போது ஆட்சியில் இருந்த தி.மு.க.வின் இந்து எதிர்ப்பு, பிராமண எதிர்ப்புக் கொள்கைகளின் காரணமாக இது போல் இணக்கம் நிகழவில்லை என்கிறார். அத்துடன் பிராமணர் அல்லாதாருக்கு அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் நிறுவுவதில் ஆர்.எஸ்.எஸ் ஆதரவு காட்டுவதாகக் கூறும் மேற்கோள் ஒன்றையும் எடுத்துக்காட்டுகிறார். ஆனால் இவர்கள் பணிபுரிந்தது ஆகம விதிமுறைகளுக்கு உட்பட்ட கோயில்களிலா? உட்படாத கோயில்களிலா? என்பதை விளக்கவில்லை.

தமிழ்நாட்டின் முக்கிய கோயில்களைத் தம் கட்டுப்பாட்டில் கொண்டுவர விரும்பும் தென்கலை பிராமணர்கள், அர்ச்சகர் பணியைத் தமக்குரியதாக ஆக்கிக்கொள்வதை அதற்கான முக்கிய வழிமுறையாகக் கருதுகிறார்கள் என்பது ஆசிரியரின் முடிந்த கருத்தாக உள்ளது.

**உச்ச நீதிமன்றத் தீர்ப்பு**

இந்துக் கோயில்களின் அர்ச்சகர்களாக யார் இருக்க முடியும் என்று 2006ஆவது ஆண்டில் தொடங்கிய சிக்கலுக்கான தீர்வை 2015ஆவது ஆண்டில் தன் தீர்ப்பின் வழி உச்ச நீதிமன்றம் வழங்கியது. இத் தீர்ப்பில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 25, 26 ஆவது பிரிவுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் 25 ஆவது பிரிவு சமயங்களின் அடிப்படை இயல்புகளைப் பாதுகாப்பதை மையமாகக் கொண்டது. 26ஆவது பிரிவு சமயங்கள் தங்களது உள்விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமையைப் பாதுகாப்பதை மையமாகக் கொண்டது. இருப்பினும் 26ஆவது பிரிவு சில விதிவிலக்குகளைத் தன்னுள் கொண்டிருந்தது. இதன்படி பொது ஒழுங்கு, ஒழுக்கமுறை, உடல்நலம், சமய நோக்கில் முக்கியத்துவமற்ற நடைமுறைகள் ஒழிப்பு என்பனவற்றை நோக்கமாகக் கொண்ட சமூக சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் உரிமை வழங்கப்பட்டிருந்தது. தேவதாசி முறை ஒழிப்பு, அனைத்து சாதிப் பிரிவினரும் கோயிலில் நுழைந்து வழிபடும் உரிமை என்பனவற்றை நோக்கமாகக் கொண்ட சீர்திருத்தங்கள் நிகழ இவ் விதிவிலக்குகளே துணை நின்றுள்ளன.

தமிழ்நாட்டின் சைவ சமயக் கோயில்களிலும் வைணவக் கோயில்களிலும் தனித்தனியான ஆகம நெறிமுறைகள் நடைமுறையில் இருந்தன. சைவ ஆகம முறைப்படி தீட்சை பெற்றவரே சைவக் கோயில்களில் அர்ச்சகராக முடியும். ஆனால் சில தொடக்க நிலைச் சடங்குகளை மேற்கொண்டோர் மட்டுமே வைணவக் கோயில்களில் அர்ச்சகராக முடியும். இவற்றைக் குறிப்பிட்டதுடன் இறுதியாக உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு இவ்வாறு அமைந்தது. சாதியின் அடிப்படையில் ஒருவர் அர்ச்சகராக முடியாது என்று ஆகமங்களில் தெளிவாக வரையறுக்கப் படாத நிலையில் தமிழ்நாடு அரசின் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டம் அரசியல் அமைப்புச் சட்டத்துடன் முரண்படவில்லை.

**நூலின் முக்கியத்துவம்**

தமிழ் வைணவத்தில் இடம்பெற்றுள்ள வடகலை, தென்கலை என்ற இரு பிரிவுகள் பரவலாக அறிமுகமான ஒன்றுதான். ஒரு சமயத்திற்குள் இத்தகைய பிரிவுகள் உருவாகி தனித்தனி சமயங்கள் போன்று காட்சியளிப்பது சமயங்களின் வரலாற்றில் புதிதல்ல.

இந்தியாவில் தோன்றிய சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களிலும் இது போன்று பிரிவுகள் உருவாகியுள்ளன. கிறித்தவத்தில் நிலவும் பிரிவுகள் பரவலாக அறிமுகமானவைதான். இப் பிரிவுகள் உருவானமைக்கான மூலகாரணங்கள் சமயங்களுக்குள் மட்டுமின்றி அதற்குப் புறத்தேயும் காணப்படுகின்றன. கிறித்தவத்தில் சீர்திருத்தக் கிறித்தவப் பிரிவு (பிராட்டஸ்டண்ட் கிறித்தவம்) உருவானதற்கு மார்ட்டின் லூதரின் பங்களிப்பும் விவிலியத்தை அவர் செர்மானிய மொழியில் மொழிபெயர்த்தமையும், பாதிரியார்களின் பாவமன்னிப்புச் சீட்டு விற்பனையும் பரவலாகக் கூறப்படும் செய்திகளாகும்.

ஆனால், எங்கல்ஸ் எழுதிய செர்மனியில் குடியானவர் போர் (The peasant War in Germany) கிறித்தவ சமய எல்லைக்குள் இருந்த அகக் காரணங்களை மட்டுமின்றி செர்மனியின் குடியானவர்கள், நிலப்பிரபுக்கள், கத்தோலிக்கத் திருச்சபையின் நிர்வாகிகள் என்போருக்கு இடையிலான உறவு வகித்த பங்கினையும் வெளிப்படுத்துகிறது. இவ்

வகையில் பண்பாடு என்ற பரந்த களத்திற்குள் (Domains) அடங்கும் சமயம் என்ற நிறுவனத்தை வர்க்கப்பார்வையில் மிக நுட்பமாக எங்கல்ஸ் ஆராய்ந்துள்ளார். எங்கல்ஸ் எழுதிய இந்நூலானது ஒரு சமயத்திற்குள் நிகழ்ந்த மாற்றங்களை ஆராய்வோருக்கு வழிகாட்டும் தன்மையது.

இந்தியாவில் சமயங்கள், சமயப்பிரிவுகள் குறித்து ஆராயும்போது வர்க்கங்களுடன் நின்றுவிடாமல் சாதியையும் இணைத்தே பார்க்கவேண்டும். தென்கலை வைணவத்தில் பிராமணர்களைவிட பிராமணர் அல்லாதாரே மிகுதி. இது குறித்து திரு.கே.கே. வெங்கடாச்சாரி என்ற பிராமணர் நூலாசிரியரிடம் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

“தென் இந்தியாவில் மூன்று விழுக்காட்டினரே பிராமணர்களாக உள்ளனர். இவர்களுள் ஒரு விழுக்காட்டினரே வைணவப் பிராமணர்கள். நாங்கள் பிராமணர் அல்லாதாரை வைணவர்களாக ஏற்றுக்கொண்டிராவிட்டால் ஒரு சிறிய குழுவாக. இருந்திருப்போம். எனவே அவர்களை எங்களுடன், சேர்ந்துக்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டது. எப்படி இருந்தாலும் இது தென்கலை மரபு.” எண்ணிக்கை அதிகரிப்பு என்பது ஒரு சாதி அல்லது சமயத்திற்கு வலிமை ஊட்டுவதாக அமைகிறதை இக் கூற்று வெளிப்படுத்துகிறது.

எண்ணிக்கை அதிகரிப்பு என்பது ஒரு வகையில் அளவு மாறுபாடாகும். இங்கு பிராமணர் அல்லாதாரை வைணவத்தில் இணைத்துக் கொள்வதன் மூலம் வைணவம் தன் வலிமையை உயர்த்திக் கொண்டுள்ளது. வைணவ ஆச்சாரியரான இராமானுஜர் வைணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பிற்காக இடைநிலை சாதியினரையும் தீண்டாமைக் கொடுமைக்கு ஆளாகி இருந்த மக்கள் பிரிவினரையும் வைணவர்களாக்கினார் என்பது பரவலாக அறியப்பட்ட வரலாற்று உண்மை. திருஅரங்கம் அரங்கநாதர் கோயிலில் ‘கொத்து’ என்ற பெயரில் அவர் உருவாக்கிய ஊழியமுறையில் பிராமணர் அல்லாத பல்வேறு சாதிப்பிரிவினர் இடம் பெற்றுள்ளனர்.

மேலும் தமிழகத்தின் முக்கிய சைவ வைணவக் கோயில்கள் மன்னர்கள், வணிகர்கள், பெருநிலக்கிழார்கள் ஆகியோரிடமிருந்து நிலமானியங்களையும், கால்நடைகளையும், பொன்னையும் பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்பட்ட அணிகலன்களையும் கொடையாகப் பெற்று வளம் மிக்க நிறுவனங்களாக விளங்கின. சில நேரங்களில் கடன் வழங்கி வட்டி வாங்கி வந்தன. இவ்வகையில் ஒரு பொருளாதார நிறுவனமாகவே இடைக் காலத் தமிழகத்தில் கோயில் காட்சி அளித்தது.



நிலமானியச் சமூகமாக இடைக்காலத் தமிழகத்தில் சோழராட்சி விளங்கியபோது பிரம்மதேயம் என்ற பெயரில் பிராமணர்களுக்கு நிலக்கொடைகள் வழங்கப்பட்டன. சில நேரங்களில் ஒரு கிராமமே பிரம்மதேயமாக வழங்கப்பட்டது. தமிழ்ப் பிராமணர்கள் மட்டுமின்றி வடபுலத்தில் இருந்தும் கோதாவரி ஆற்றுப் பகுதியில் இருந்து அழைத்து வரப்பட்ட பிராமணர்களும் பிரம்மதேயக் கொடையினைப் பெற்றனர். இடைக்காலத் தமிழகத்தில் நிலவிய சமூக நிலை குறித்து எழுதும் போது, வரலாற்றறிஞர் கே.கே.பிள்ளை இந்நிலை குறித்துப் பின்வருமாறு விரிவாக எழுதியுள்ளார்:

“தமிழகத்து வேந்தர்கள் தமிழகத்து அந்தணரிடம் எக்குறைபாடுகளைக் கண்டார்கள் என்பது விளங்கவில்லை... வடவரின் இலக்கியமும் சமயக் கருத்துக்களும் பண்பாடுகளும் தமிழ்நாட்டில் பெருக்கெடுத்துப் பாயவே அவற்றை வளர்ப்பதற்கும், மேற்கொண்டு பல புதுமைகளைப் பெருக்கிக் கொள்வதற்கும், மன்னர்கள் ஆயிரக்கணக்கில் அயல்நாட்டுப் பிராமணரை இறக்குமதி செய்து கோயில்களிலும் மடங்களிலும், கல்வி நிறுவனங்களிலும் அவர்களை அருச்சகர்களாகவும், புரோகிதர்களாகவும் வேத பாராயணம் செய்வோராகவும் ஆங்காங்கு அமர்த்தினர். வேதநெறி தழைத்தோங்குவதற்காக மன்னரும் மக்களும் புதிதாகக் குடிபுகுந்த பிராமணருக்குப் பொன்னையும் பொருளையும் குடியுரிமைகளையும் வாரி வழங்கினர்.



பிராமணர்களுக்குத் தனி நிலங்களும் முழுமுழுக் கிராமங்களும் தானமாக வழங்கப்பட்டன.அக் கிராமங்கள் அக்கிரகாரம், அகரம், சதுர்வேதிமங்கலம், பிரம்மதேயம் எனப் பல பெயரில் வழங்கின. இக்குடியிருப்புகள் அனைத்தும் பிராமணரின் நிர்வாகத்துக்கே விடப்பட்டன. அரசனுடைய ஆணைகள் அவற்றினுள் செயல்படா.

அக் கிராமங்களுக்கு எல்லாவிதமான வரிகள், கட்டணங்கள், கடமைகள், ஆயங்கள். முதலியவற்றினின்றும் முழு விலக்கு அளிக்கப்பட்டன. ஒவ்வொரு கிராமத்தின் உள்ளாட்சிக்கும் ஒரு மகாசபை அமைத்துக் கொண்டு பிராமணர்கள் தத்தம் கிராமத்தின் நிருவாகத்துக்குப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். பிராமணர் தமிழகம் முழுவதும் பரவிக் குடியமர்ந்தார்கள். உளநிறைவுடன் நல்வாழ்க்கையில் நின்று வேதம் ஓதி, இறைப்பணி புரிந்து, அறம் ஓம்பி, மக்களிடையே கல்வியறிவையும் ஆன்மீக விழிப்பையும் தோற்றுவிப்பதற்காகவே மன்னரும் மக்களும் அவர்கட்குத் துணை நின்றார்கள். ஆனால் விளைவோ வேறுவிதமாயிற்று. தமிழ் மன்னரும் தமிழ் மக்களும் வரையாது வழங்கிய வாழ்க்கை நலன்களைப் பெற்ற பிராமணர்கள் தனித்து வாழ்ந்து, மக்களிடையே குல வேறுபாடுகளைப் பெருக்கித் தமிழர் அனைவரையுமே சூத்திரர் என்ற இழிகுலத்தினராகக் கருதிக் கோயில்களிலும் மடங்களிலும் ஏனைய பொது அறச்சாலைகளிலும் ஒதுக்கி வைத்துவிட்டார்கள். ஒரு கோயிலைக் கட்டி குடமுழுக்கு செய்விக்கும் தமிழன் ஒருவன் தான் கட்டிய கோயிலிலேயே தொலைவில் ஒதுங்கி நிற்கவும் பின்னின்று கோயில் பிரசாதங்களைப் பெறவும் ஒப்புக்கொண்டுவிட்டான்... தேவார ஆசிரியர்கள் காலத்தில் தமிழர் கருவறைக்குட் செல்லும் உரிமை பெற்றிருந்தும் சோழர், பாண்டியர் காலத்தில் அவ்வுரிமையை அவன் இழந்துவிட்டான்."

இவ்வளவு விரிவான மேற்கோளை இங்கு எடுத்துக் காட்டியதற்குக் காரணம் இடைக்காலத் தமிழகத்தில் வைதீக மரபைப் பேணிய பிராமணியம் பெற்றிருந்த ஏற்றத்தை அறியச் செய்யத்தான். பல்லவர் காலம் தொட்டு பிற்காலச் சோழர் காலம் பாண்டியர் காலம் வரை வைதீக சமயங்களான சைவம், வைணவம் என்பனவும் அவைதீக சமயங்களான பௌத்தம். சமணம் என்பனவும் தம்மை நிலை நிறுத்திக்கொள்ள ஒன்றுடன் ஒன்று முரண்பட்டு நின்றன. இச் சூழலில்தான் வைணவமும் சைவமும் தம் சமய எல்லைக்கு வெளியில் நின்ற இனக்குழுச் சாதிகளை தம்முள் இணைக்கும் செயலை மேற்கொண்டு வந்தன. இவற்றுள் சைவம் வேளாளரியம் சார்ந்தும் வைணவம் வேதமரபு சார்ந்த வைதீகப் பிராமணியம் சார்ந்தும் இயங்கின.

மேலே குறிப்பிட்ட எண்ணிக்கை அதிகரிப்பை வைணவம் மேற்கொண்டபோது பல்வேறு இனக்குழுச் சாதிகள் அதைத் தழுவின. இப்புதிய வைணவர்களின் வரவு தென்கலை வைணவம் என்ற புதிய வைணவப் பிரிவைத் தோற்றுவித்தது. இப் பிரிவில் பல்வேறு பிராமணர் அல்லாத சாதியினர் இணைந்திருந்த போதிலும் கோயில் என்ற நிறுவனத்திற்குள் அவர்களால் அதிகாரம் செலுத்த இயலவில்லை. இதற்கான இரண்டு காரணங்களை இந் நூலின் வழி உய்த்துணர முடிகிறது. முதலாவது வழிபாட்டை நடத்தும் உரிமை (அர்ச்சகராதல்). இரண்டாவது, திவ்விய பிரபந்தம் என்ற வைணவ சமயப் புனித நூலின் பாடல்களைக் கோயிலிலும், சமய ஊர்வலங்களிலும் ஓதும் உரிமை.

இவ்விரண்டு உரிமைகளும் சமயப் பண்பாடு சார்ந்த உரிமைகள்.

என்றாலும் இவ்வுரிமை மறுக்கப்பட்ட மக்களுக்கோ இவை சமூகத் தகவு (social value) சார்ந்த

உரிமைகள். ஏன் எனில் ஒரு சமூக இனக்குழுவின் சமூக மதிப்பென்பது வழிபாட்டுத் தலமான கோயிலுடன் தொடர்பு கொண்டதாக இருந்தது. (இன்றும்கூட இக்கருத்து நம் சமூக வாழ்வில் நிலைபெற்றுள்ளது). ஆங்கிலக் காலனிய ஆட்சியில் பெற்ற நவீனக் கல்வி, அதன் துணையால் பெற்ற புதிய வேலைவாய்ப்புகள், நிலவுடைமைச் சிந்தனைகளில் இருந்து விடுபடத் தொடங்கியமை,மக்களாட்சிக் கோட்பாடுகள், சமூக சீர்திருத்தச் சிந்தனைகள் ஆகியனவற்றின் தாக்கம் என்பனவற்றால் கோயில்களில் சமத்துவம் வேண்டும் போக்கு உருவானது. அவர்களின் எண்ணிக்கை உயர்வும் ஒரு சிலர் பொருளியல் நிலையில் பெற்றிருந்த ஏற்றமும் இதற்குத் துணைநின்றன. நாடு விடுதலை பெற்றமையும் பெரியாரின் சமூக சீர்திருத்தச் சிந்தனைப் பரப்புரைகளும், பொதுவுடைமை இயக்கத்தின் வளர்ச்சியும் ஒடுக்கப்பட்ட மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தின. எனவே அரசியல் விடுதலை, பொருளாதார விடுதலை குறித்த சிந்தனைகளுடன் சமூகச் சீர்திருத்தச் சிந்தனைகளும் வளர்ச்சியுற்றன.

இவற்றின் விளைவாகவே வைணவக் கோயில்களில் சமத்துவம் வேண்டும் என்ற சிந்தனை பிராமணர் அல்லாத தென்கலை வைணவர்களிடம் உருவாகியது.மற்றொரு பக்கம் சமத்துவத்தை ஏற்றுக்கொள்ளாத நிலமானிய காலத்தின் சிந்தனைகளை இறுகப் பற்றிக்கொண்டு ஆகமங்களின் துணையுடனும் நீதி மன்றங்களின் துணையுடனும் சமத்துவ மறுப்பை நிலைநிறுத்த தென்கலை வைணவத்தின் பிராமணர்கள் முயன்றனர். நகரமயமாதலுக்கு ஆட்பட்டு, நவீனக் கல்வி கற்று, அதன் துணையுடன் வழக்கறிஞர், மருத்துவர், ஆசிரியர், அரசு ஊழியர், பொறியாளர், தணிக்கையாளர், தொழில்முனைவோர் என இன்ன பிற பணிகளை மேற்கொண்டு வாழ்ந்தாலும் அவர்களில் பலரிடம் மன்னராட்சிக்காலத்தின் சிந்தனைப் போக்கே மேலோங்கி இருந்தது. இவ்விரு முரண்பட்ட சிந்தனைகளும் கோயிலை மையமாகக் கொண்டே உருவாகி நீதிமன்ற வழக்குகளுக்கு வழி வகுத்தன. இச் சிந்தனைப் போக்கு பிராமணர்களிடம் மட்டுமின்றி சாதியப் படிநிலையில் இவர்களை அடுத்திருந்த வேளாளர்களிடமும் நிலவியது. இதன் வளர்ச்சி நிலையாக இடைநிலைச் சாதிகள் சிலவும் இதன் தாக்கத்திற்கு ஆட்பட்டுள்ளன.

கோயிலில் வழிபாட்டை நடத்திவைக்கும் அர்ச்சகராதல், சமயப் புனித நூலை ஓதுதல் அல்லது பாடுதல் என்ற வேட்கையானது சமய எல்லைக்கு உட்பட்டதாகக் காட்சியளித்தாலும் அதற்குள் பண்பாட்டு சமத்துவ மறுப்பிற்கு எதிரான குரல் மறைந்துள்ளது. இவ்வகையில் இதுவும் பண்பாட்டு அடையாளப் போராட்டத்தின் ஒரு வடிவம்தான்.

பண்பாட்டு அடையாளப் போராட்டமானது இரு வழிமுறைகளைக் கொண்டது. இவ் வழிமுறைகளை வகுத்ததில் ஆதிக்க வகுப்பினருக்கும் பங்கு உண்டு. எவ்வாறெனில் பண்பாட்டு ஒடுக்குமுறையை இவர்கள் இரு வகையில் வெளிப்படுத்தி வந்தனர். முதலாவது, சில பண்பாட்டு அடையாளங்களைத் தமக்கு மட்டுமே உரியதாக உரிமை கொண்டாடி பிறருக்கு அவற்றை மறுத்தல். இரண்டாவது, சில இழிவான பண்பாட்டு அடையாளங்களை அவர்கள்மீது திணித்தல். இவை இரண்டிற்கும் எதிரான போராட்டங்களே பண்பாட்டு அடையாளப் போராட்டங்கள் ஆகும். பிராமணர் அல்லாத தென்கலை வைணவர்கள் தமக்கு மறுக்கப்பட்ட பண்பாட்டு அடையாளங்களைப் பெற சட்டத்தின் துணையுடன் போராடிய வரலாற்றுச் செய்திகளை இந்நூல் வெளிப்படுத்தி உள்ளது.

கடவுள் மறுப்பு, பிராமணிய எதிர்ப்பு என்ற இரண்டு எதிர்ப்புக்களை மட்டுமே கருவிகளாகக் கொண்டு மத அடிப்படைவாதத்திற்கு எதிராகப் போராட முடியாது என்ற உண்மையை இந்துத்துவா அமைப்புகளின் செயல்பாடுகளைக் குறிப்பிடுவதன் வாயிலாக வெளிப்படுத்தி உள்ளார். சிறுபான்மைச் சமய எதிர்ப்பு, பசுவதை எதிர்ப்பு என்ற எதிர்ப்புகளுடன் மட்டும் அவர்கள் நின்றுவிடவில்லை. சராசரி மக்களுடன் தொடர்பு கொள்ளும் வகையில் அவர்கள் மேற்கொண்டுள்ள பணிகள் சிலவற்றையும் தொகுத்தளித்துள்ளார். இவற்றை மேற்கொள்ள நிதி ஆதாரம் அவர்களிடம் வலுவாக உள்ளது என்புது உண்மைதான். இருப்பினும் முற்போக்கு சக்திகளால் அவற்றில் சிலவற்றை மேற்கொள்ள முடியும். மாறாக எதிர்ப்பு என்ற ஒன்றை மட்டும் மையமாகக் கொண்டு இயங்குவது பயன்தருமா என்பதை ஆராயவேண்டிய கட்டத்தில் முற்போக்கு இயக்கங்கள் உள்ளன.


நூலின் இறுதியில் இடம் பெற்றுள்ள ஆறு பின் இணைப்புகளும் ஆய்வு நோக்கில் அமைந்துள்ளன. இந்நூலின் ஆய்வுக்களம் தமிழ்நாட்டின் வடமாவட்டங்களை மையமிட்டுள்ளது. தென்மாவட்டங்களிலும் பிராமணர் அல்லாத தென்கலையினர் குறித்த ஆய்வு மேற்கொள்ள ஒரு பரந்த களம் உள்ளது.

கட்டுரையாளர், தமிழர் சமூக வரலாற்று ஆய்வாளர்,
மார்க்சிய சிந்தனையாளர்



2-06-2022 அன்று நிலக்கோட்டை நாடார் உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்ற 37 ஆவது தேசியப் புத்தகக் கண்காட்சியை சட்டமன்ற உறுப்பினர் S. தேன்மொழி சேகர் அவர்கள் திறந்து வைத்தார். இதில் ஒ.ச.மு.அ.சுசீந்திரன், M.V.M. பிரபாகர், பி.வினேஷ்பிரபு, என்சிபிஎச் மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி மற்றும் திண்டுக்கல் கிளை மேலாளர் வீ. பண்டரிநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.


## விரைவில்
## நியூ செஞ்சுரி புத்தக நிறுவன வெளியீடாக...




₹ 350

**ப.க.பொன்னுசாமியின் படைப்புலகம்**

*சொற்சித்திரங்கள் - திறனாய்வுகள்*

தொகுப்பாசிரியர்
**சுப்ரபாரதிமணியன்**

‘இவருடைய கட்டுரைகள் அறிவியல் சிற்பி ஒருவர் தம் சொல்திறன் கொண்டு செதுக்கிய இலக்கியக் கலைச் சிற்பங்களாகுமெனில் மிகையாகாது.’

***- தமிழண்ணல்***

‘பொன்னுசாமி கல்வித்துறைக்குச் செல்லாதிருந்தால் நல்ல கட்டுரையாளனாக விளங்கியிருக்கக் கூடும். இவருடைய விஞ்ஞான அறிவு ஏட்டுச்சுரைக்காய் அல்ல என ஒவ்வொரு கட்டுரையும் தெளிவு படுத்துகிறது.’

***- அசோகமித்திரன்***

# தமிழ்வழிக் கல்விக்கு முதல் எதிரி தனியார் பள்ளிகளே!

டாக்டர் சு. நரேந்திரன்

தமிழகத்தில் 1980களில் தனியார் பள்ளிகளின் எண்ணிக்கை அதிக எண்ணிக்கையில் உயர்ந்தது. தமிழகம் முழுவதும் இந்நிலை மேலும் அதிகரித்தது. தமிழகத்தில் தமிழ்வழியில் கற்கும் குழந்தைகளின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்தது. இந்த அவலநிலைக்கு ‘மாநில அரசின் கல்விக் கொள்கையின் அடிப்படையில்லான சிக்கலான நடவடிக்கைகள்’, ‘அரசுப் பள்ளிகளைப் புதியதாகத் தொடங்காத நிலை’, ‘தரமற்ற கல்வி’, ‘பெற்றோர்களின் ஆங்கில ஆர்வம்’, ‘தனியார் பள்ளிகளின் வரவு’ ஆகியவற்றைச் சுட்டலாம். தமிழ்வழியில் முதல் வகுப்பு முதல், பன்னிரண்டாம் வகுப்பு வரை தமிழ்வழிக் கல்வி வகுப்புகள் அரசுப் பள்ளிகளில் இருந்த நிலையிலும், ஆங்கிலக் கல்வி மோகம் பெற்றோர்களிடம் இருந்தது என்பதை விளக்கும் புள்ளி விவரம் வருமாறு:



| ஆண்டு | உயர்நிலைப் பள்ளிகளிலும் மேல்நிலைப் பள்ளிகளிலும் கல்வி கற்கும் மாணவர்கள் | |
|---|---|---|
| | மாநிலக் கல்வி வாரியம் | மையக் கல்வி வாரியம், மெட்ரிகுலேசன், ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் |
| | விழுக்காடு | விழுக்காடு |
| 80-81 | 92.2 | 7.8 |
| 90-91 | 87.6 | 12.4 |
| 94-95 | 85.0 | 15.0 |

**கட்டாயத் தமிழ்வழிக்கல்விப் போராட்டம்**

பள்ளிகளில் ஆங்கிலவழிக்கல்வி ஆர்வம் அதிகரித்து வருவதைக் கண்டு கவலையுற்ற தமிழகக் கல்வியாளர்கள், தமிழாசிரியர்கள், பல்வேறு தமிழ் அமைப்புகள் தமிழ்வழிக் கல்விக்கான மக்கள் அமைப்புகளைத் தொடங்கி 1998ஆம் ஆண்டு முதல், பிரச்சாரம் செய்து வந்தனர். தமிழ் அமைப்புகள் ஒன்று கூடி 1999ஆம் ஆண்டு தமிழ்ச் சான்றோர் பேரவை என்ற அமைப்பின் கீழ் போராடுவதென முடிவெடுத்தனர். இதற்காக 1999 ஏப்ரல் மாத இறுதியில் நூறு தமிழறிஞர்கள், சாகும் வரை உண்ணாநோன்பு மேற்கொள்ள முடிவெடுத்தனர். தமிழறிஞர் தமிழண்ணல் தலைமையிலான போராட்டக்குழு அரசுக்கு வைத்த கோரிக்கைகள் வருமாறு:

1. தமிழ் நாட்டில் உள்ள அனைத்துக் கல்விக் கூடங்களில் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் மட்டுமே பாடமொழியாகவும் பயிற்று மொழியாகவும் இருக்க வேண்டும். ஆறாம் வகுப்பு முதல் அனைத்து நிலையிலும் ஆங்கிலம் ஒரு பாடமொழியாகக் கற்பிக்கப்படலாம்.

2. பொறியியல், மருத்துவம், சட்டம், தொழில் நுட்பங்கள் உள்ளிட்ட உயர்கல்வித் துறைகள் அனைத்திலும் முன்னரே தமிழ்வழிப் பாட நூல்கள் தயாராகவும் அறிமுக நிலையில் இருப்பதால் வரும் கல்வி ஆண்டிலேயே அவ்வுயர் கல்வித்துறைகள் அனைத்திலும் தமிழ்வழிக்கல்வியை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும்.

3. தமிழக அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகள் அனைத்திலும் தமிழ்வழிக்கல்வி பயின்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை தரவேண்டும். (தமிழ்ச் சான்றோர் பேரவை தீர்மானங்கள் 1999)

தமிழறிஞர்களின் இக்கோரிக்கைகளை விரைவில் நடை முறைப்படுத்தப்போவதாக உண்ணாநோன்பை நிறைவு செய்து உரையாற்றிய அமைச்சர் மு.தமிழ்க்குடிமகன் அறிவித்து ஒரு அறிக்கையை வாசித்தார். இதைத் தொடர்ந்து நீதிபதி மோகன் தலைமையில் பயிற்றுமொழி குறித்து ஆராய குழு அமைக்கப்பட்டது.

**மோகன் குழு**

தமிழை மழலையர் பள்ளிகளில் நடைமுறைப்படுத்துவது, தொழிற் கல்வியில் தமிழ்வழிக் கல்வி பயின்றோருக்கு வேலைவாய்ப்பு முன்னுரிமை ஆகிய மூன்று கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் உள்ள சட்டச்சிக்கல்கள் என்ன? இதனால் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு பாதிப்பு உண்டா, என்பதைக் கண்டயறிய ஓய்வுபெற்ற நீதிபதி எஸ். மோகன் தலைமையில் ஒரு குழுவைத் தமிழக அரசு அமைத்தது. இக்குழுவில் வா.செ.குழந்தைசாமி (முன்னாள் துணைவேந்தர்). ச.முத்துக்குமரன் (முன்னாள் துணைவேந்தர்), தமிழண்ணல், இரா. இளங்குமரன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இக்குழு 31.05.1999க்குள் அறிக்கையை அரசுக்கு அளிக்க ஆணை வெளியிடப்பட்டது (27.11.1998).

**இக்குழு எப்படிச் செயற்பட்டது என்பதைக் கவனியுங்கள்.**

"இக்குழு 15.5.1999 தொடங்கி, பல்வேறு நிலைகளில் இப்பிரச்சினைகளை ஆராய்ந்தது. பொதுமக்கள் கருத்தை வாய்மொழி மூலமாக மூன்று நாட்கள் கேட்டறிந்தது; எழுத்து மூலமாகவும் கருத்துகள் பெற்றது. குழுவிடம் தொடர்பு கொண்டவர்கள் எண்ணிக்கை பின்வருமாறு: தனிநபர்கள் 423; ஆசிரியர் கழகங்கள் 5; வழக்கறிஞர்கள் 3 பள்ளி நிர்வாகங்கள் 40; பள்ளி நிர்வாகக் கழகங்கள் 22; ஆசிரியர் பெற்றோர் சங்கங்கள் 8; தமிழ்ச் சங்கங்கள் உட்பட மற்ற சங்கங்கள் 87; அரசியல் கட்சி சார்பான நிறுவனங்கள் 8; சிறுபான்மையினரும் அவர்தம் சங்கங்களும் 9. அயல் மாநிலங்களில் உள்ள நடைமுறைகளை அறிவதற்காக அதிகாரிகளை அனுப்பி உரிய ஆணை விவரங்களைப் பெற்றுவரச் செய்தது. கல்வி தொடர்புடைய தமிழக அரசின் உயர் அதிகாரிகளையும், பள்ளிக் கல்வித் துறை இயக்குநர்களையும், மருத்துவம், பொறியியல் உட்படப் பல்வேறு உயர்கல்வித்துறை இயக்குநர்களையும், அழைத்து விவரம் கேட்டறிந்தது. இவை தொடர்பான சிக்கல்களையும் தீர்வுகளையும் தொடர்ந்து ஆராய்ந்து, இவ்வறிக்கையை அரசிடம் அளிக்கின்றது."

இக்குழு எந்த அளவுக்கு எல்லாருடைய கருத்துகளையும் கேட்டிருக்கிறது என்பதை உணரமுடியும்.

1968இல் அண்ணா சட்டமன்றத்தில் பின்வரும் கருத்துகளை வைத்தார்.

"ஒரு நாட்டின் பயிற்று மொழி, ஆட்சிமொழி ஆவதற்குத் தாய்மொழி என்னும் தகுதிக்கு ஈடாக வேறு எந்தத் தகுதியும் ஒரு மொழி பெற்றிடத்

தேவையில்லை. தமிழ்நாட்டில் கல்விக் கூடங்கள் அனைத்திலும் பயிற்சி மொழியைப் பொறுத்தவரை முதல் மொழி தமிழே; இரண்டாம் மொழியே ஆங்கிலம்" என்று தெளிவுபடக் கூறியுள்ளார்.

ஆங்கில மொழியுடன் எவ்விதப் பகையும் இருத்தல் கூடாது. அதன் இனிமை, மனத்தை ஈர்க்கும் திறன், தகுதியுடைமை போல்வன பல்வேறு வகைகளில் பயன்படும். ஆனால், அதன் சிறப்புக்களைக் கருதி, நம் சொந்த மொழிகளை எவ்வித எழுச்சியும் இன்றித் தேங்க விடுவது என்பது முறையாகுமா?

மேலும், தனக்குத் தெரிந்த மொழிவழி ஒரு துறை அறிவைப் பெறுவது மகிழ்ச்சி தரும்; சரிவரத் தெரியாத மொழியில் துறை அறிவைப் பெற முயல்வது தண்டனையாகவே அமையும். ஆகவேதான் உலகின் பல நாடுகளிலும் தாய்மொழி மூலமே கல்வி கற்பிக்கப் படுகிறது. மேலும், தாய்மொழி வழிக் கல்வியே முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைகிறது.

**மேன்மையான கல்விக்கு ஆங்கிலம்**

"ஆங்கிலத்தில் மிக உயர்ந்த கல்வித் திறன் பெறுதற்கு வாய்ப்புள்ளது" என்று ஒரு கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், அவ்விதம் உயர்ந்த ஆங்கிலக் கல்வித்திறம் பெற்ற மேதகு வி.எஸ். சீனிவாச சாத்திரியார், சக்கரவர்த்தி சி.இராசகோபாலாச்சாரியார் போன்றோர் ஆங்கிலமொழியும் மேலைநாட்டார் பண்பாடும் மேன்மேலும் வளர்ந்து, கல்வி கற்காத நம் நாட்டு ஏழை எளிய மக்களிடமிருந்து மிகவும் விலகிச் சென்று விடுதல் கூடாது எனக் கூறியுள்ளனர். எனவேதான், தங்கள் வாழ்நாளில் மிகுந்த ஆர்வத்துடன் தமிழில் கட்டுரைகளும் நுல்களும் எழுதியுள்ளனர்.

மேலும், ஆங்கிலவழிக் கல்விப் பள்ளிகளில், வழிவழியாகக் கல்வி கற்ற பெற்றோர்களின் குழந்தைகளே பெரும்பாலும் கல்வி கற்கின்றனர். அப்பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர், அவர்தம் சமுதாயப் பின்னணியின் பயனாக நன்கு கல்வி கற்றுத் தேறுகின்றனர். இதற்கெதிராக தமிழ்வழிப் பள்ளிகளில் ஏழை மாணவரும் நடுத்தரக் குடிமக்களின் குழந்தைகளுமே கல்வி கற்கின்றனர். இவர்களது பின்னணியாலும் குடும்பச் சூழலாலும் இவர்களது திறமைகளை வளர்க்க முடிவதில்லை. இவர்கள் குறைந்த அளவு தேர்ச்சி பெறுவதற்கும் வாழ்க்கையில் வெற்றி பெறாததற்கும் குடும்பச் சூழலே காரணம்.

**இளமையிலே ஆங்கில வழிக்கல்வி**

ஆங்கிலவழிக்கல்வி இளமை முதலாக அமைய வேண்டும் என்றும் அதனால் குழந்தைப் பருவத்திலேயே ஆங்கில மொழிக் கல்வியைத் தொடங்கிவிட வேண்டும் என்றும் பலர் கருதுகின்றனர். ஆனால், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே சாட்லர் கமிஷனும் (Sadler Commission), கார்டாக் குழுவும் (Hartog Committee), அபோட் மற்றும் வுட் (Abbot and Wood) என்பார் அறிக்கையும் தாய்மொழி வழிக் கல்வியை மிக வற்புறுத்தி எழுதியுள்ளன. மிக விரிவாக விவாதிக்கப்பட்ட சார்ஜண்ட் திட்டம் (Sargent Scheme) கல்வியாளர் பலருடனும் விவாதித்து, மகாத்மா காந்தியின் வார்தாத் திட்டத்தையும் மேற்கோள் காட்டி அனைத்து உயர்நிலைப்பள்ளிகளிலும் தாய்மொழியே பயிற்றுமொழியாக இருக்க வேண்டும் என்று முடிவு கூறியிருக்கிறது.

**பயிற்றுமொழி; இலக்கணம்**

பொதுவாக ஒரு மொழி உண்மையாகவும், முழுமையாகவும் பயிற்று மொழியாவதற்குக் கீழ்க்கண்ட தகுதிகள் தேவை:

தேவையான அளவு மாணவருக்கு அம்மொழி தெரிந்து இருக்க வேண்டும். அம்மொழியில் ஆசிரியருக்கு நல்ல தேர்ச்சி இருக்க வேண்டும். மாணவனின் குடும்பத்திற்கும் பள்ளிக்கும் நெருக்கமான உறவு அமைய அப்பயிற்று மொழி இளம் மாணவரின் பெற்றோருக்குத் தெரிந்து இருக்கவேண்டும்.

அம்மொழியில் தரமான பாட நூல்கள் கிடைக்க வேண்டும்.

அம்மொழியில் பாடநூல்கள் தவிர துணை நுல்களும், துணை ஆதார நூல்களும் கிடைக்க வேண்டும்.

இந்தத் தகுதிகளின் அடிப்படையில் பார்த்தால் பயிற்று மொழி தாய்மொழியாகத்தான் இருக்க வேண்டும் என்பது தெளிவு. இதை நாம் நடைமுறையில் காண்கிறோம்.

ஆங்கிலவழிக் கல்வி கற்பிக்கும் பள்ளிகள் யாவும் மேலான கல்வி நிறுவனங்கள் என்று சொல்வதற்கில்லை. அவற்றுள் ஒன்றுக்கொன்று மிகுந்த வேறுபாடுகள் உண்டு. வீட்டில் பெற்றோர் உதவியுடன் ஓரளவு ஆங்கிலம் தெரிந்த குழந்தைகள் ஆங்கில வழிப் பள்ளிகளில் பயன் பெறும் வாய்ப்புண்டு. ஆனால், ஆங்கிலமே தெரியாத அல்லது சரிவர ஆங்கிலம் தெரியாத குழந்தைகளே பெரும்பாலும் கல்வி கற்கும் பள்ளிகள் பல உண்டு. இவற்றில் கல்வி கற்கும் குழந்தைகள் மிகுந்த முயற்சிக்குப்பின், பல ஒலிகளைத் தெரிந்து கொள்கின்றனர்; ஆனால் அவற்றின் உட்பொருள்களைத் தெரிந்து கொள்வதில்லை. ஆகவே அவர்கள் வெற்றி பெறுவதில்லை. இவ்வகைப் பள்ளிகளில் ஆங்கிலம் ஒரு பயிற்று மொழியாக அமைந்து மற்ற பாடங்களைக் கற்கப் பயன்படவில்லை; துறைப் பாடங்கள் கற்பது ஆங்கிலமொழி கற்க ஒரு வாய்ப்பாகப் பயன்படுகிறது. மற்ற பாட வகுப்புகள் ஆங்கிலம் கற்பிக்கும் வகுப்புகளாக மாறிவிடுவதால் அறிவைப்

பெறுவது தடை பெறுகிறது. ஆகவே, இவ்வகை ஆங்கில வழிப் பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர் பொதுவாக மேன்மையாகக் கல்வியைப் பெறாதது மட்டுமல்ல; அயல்நாட்டு மொழிவழிக் கல்வி அவர்களின் முழுத்திறமையை வெளிக்கொணரும் வாய்ப்பையும் தடை செய்துவிடுகிறது.

அடுத்து, புதியனவற்றைக் கற்ற குழந்தை அவற்றைத் தனது பெற்றோரிடம் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றனர். பெற்றோரும் தமது குழந்தையின் ஆர்வத்தில் பங்கு கொண்டு குழந்தையின் சிந்தனையைத் தூண்ட விரும்புவார்கள். ஆனால் குழந்தையின் பயிற்று மொழி பெற்றோருக்குத் தெரியவில்லை எனில், வீட்டில் குழந்தை பெறக்கூடிய மகிழ்ச்சியும், ஆதரவும் பெறும் வாய்ப்பில்லை. ஆகவேதான் குழந்தைப் பருவத்தில் தாய்மொழியே சிறந்த பயிற்று மொழி என்று முடிந்த முடிவாக சொல்லப்படுகிறது.

**தாய்மொழி வழிக் கல்வியின் பயன்**

தாய்மொழி வழிக்கல்வி கற்றால் சிறு வயதிலேயே மற்ற பாடங்களைக் கற்கும் வாய்ப்பு மிகுதியாகிறது. வேற்று மொழி வழிக் கற்பதற்கு அம்மொழியை முதலில் கற்க வேண்டியிருப்பதால், இளம் வயதில் மற்ற பாடங்களைக் கற்று அறிவைப் பெறும் வாய்ப்பு குறைகிறது. இளம் வயதில் அவசியமின்றி மொழிச் சுமை ஏற்றப்படுவதால் அறிவைப் பெறுவது தள்ளிப் போடப்படுகிறது. தாய்மொழி வழிக் கல்வி பெறுவதால் அறிவை வளர்த்துக் கொள்ள இயலாது என்று யாரும் சொல்ல முடியாது. அறிவு எந்த மொழிக்கும் தனிப்பட்ட சொத்து அல்ல. அறிவை எந்த மொழி வழியும் பெற முடியும். தாய்மொழி வழிப் பெறுவது இயற்கை, எளிதும் கூட.

**கற்பிப்பதில் இடர்ப்பாடு**

பள்ளிக் கல்வியைத் தமிழ் வழிக் கல்விக்கு மாற்றினால் ஆசிரியர் இடர்ப்படுவர்; பாடத்திட்டத்தை மாற்றுவதிலும், பாட வேளைகளைப் பகுப்பதிலும் சிக்கல் உண்டாகும். ஆசிரியர்கள் சிலர் வேலை இழக்க நேரும்; பள்ளிகளை மூடவும் நேரும் எனக் கூறுகின்றனர். நடைமுறைப் படி இக்கூற்றில் உண்மை இல்லை. பள்ளிக் கல்வியைத் தாய்மொழி வழியாகவே கற்பிப்பது என அனைத்துப் பள்ளிகளுக்கும் விதி வகுக்கும்போது, மேற்கூறிய நிலைமைகள் ஏற்பட வாய்ப்பு இல்லை. அயன்மொழிக்கு மாறுவது என்பதுதான் ஆசிரியர், மாணவர்களுக்குக் கடினமாகுமே தவிர தாய்மொழிக்கு மாறுவது என்பது எவ்வகையிலும் கடினமாகாது.

**புதிய கண்டுபிடிப்புகள்**

ஆங்கில மொழி வழியே கற்கவில்லை என்றால் புதிய புதிய உலகச் சிந்தனைகள் உடனுக்குடன் பெறுதல் இயலாது; உலகளாவிய நிலையில் வேலைவாய்ப்புப் பெறுதல் இயலாது என்றும் கூறப்படுகிறது. ஆனால், இன்றைய சூழலில் அறிவியல் என்பது ஆங்கில மொழிக்கு மட்டுமே உரியதென்று கூறுவது சரியன்று. அறிவியல் சிந்தனைகள் உலகப் பொதுவுடைமை ஆகும். அவற்றை உடனுக்குடன் மொழியாக்கம் செய்ய வழியுண்டு. இந்நூற்றாண்டில் அறிவியல் வளர்ச்சியால் உலகம் மிகமிகச் சுருங்கிய குடும்பமாகி வருகின்றது. இந்நிலையில் எவரொருவர் எம்மொழியில் தம் கண்டுபிடிப்பைக் கூறினாலும், அதனால் பயனடைய விரும்புவோர் அதனைத் தம் மொழியில் பெற்றுக் கொள்ள வாய்ப்பு உள்ளது.

**அயல்மொழியில் தேர்ச்சி**

தாய்மொழி வழிக்கல்வியைக் கொண்டு வருவதால் ஆங்கில மொழிக் கல்வித்தரம் குறையும் என்று கூறப்படுகிறது. உண்மையில் தாய்மொழி மூலம் பாடங்களைப் படிப்பது என்பது வேறு; ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாகக் கற்பது என்பது வேறு. "ஆங்கில மொழிக் கல்வியை எல்லா வகையாலும் மேன்மேலும் தரப்படுத்த வேண்டும் என்பதில் எவருக்கும் கருத்துவேறுபாடு இருத்தல் இயலாது" என்கிறது அறிக்கை.

ஆங்கில மொழி வழிப் படிப்பது வேறு; ஆங்கில மொழியைப் படிப்பது வேறு என்று பல பெற்றோர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை.

மொழிவழிக் கல்வியும் பண்பாடும், எப்படிப் பின்னிப் பிணைந்திருக்கின்றன என்பதை அறிக்கை உணர்த்துகின்றது.

"மொழியும் பண்பாடும் ஒன்றோடு ஒன்று இணைந்தவை. ஒரு மக்களின் பண்பாடு அவர்களது மொழி வழியே வளர்கிறது. நமது பண்பாடு நம் முன்னோர் நமக்கு விட்டுச் சென்ற சொத்து. அதைப் பேணிக் காப்பது நமது கடமை. தமிழ்நாட்டுக் குழந்தைகள் தமிழ் இலக்கியங்களைக் கற்றால்தான் அவர்களால் தமிழ்ப் பண்பாட்டைப் புரிந்து கொள்ள இயலும். வளர்க்க இயலும். நமது பண்பாட்டைப் புரிந்து கொள்ளாது ஆங்கிலவழிப் படித்து பட்டம் பெற்று வெளிநாட்டில் பணியாற்றச் சென்றால் அங்கு அந்நாட்டு மக்கள் நல்ல பண்பாட்டுடன் வாழ்வதையும் தாம் பண்பாடில்லாமல் குறையுடன் இருப்பதையும் உணர முடியும். தனது குறை அவனுக்குத் தெரிவதுடன் அந்நாட்டு மக்களும் இவனை மதிக்க மாட்டார்கள். ஆகவே தமிழை ஆழமாகக் கற்பதும் தமிழ் இலக்கியங்கள் கற்பதும் இன்றியமையாதது. அதாவது தமிழ் மொழியைப் பல ஆண்டுகள் கற்பது தேவையான ஒன்று."

இது தொடர்பாகக் குழு தன் பரிந்துரைகளை அழுத்தம் திருத்தமாகச் செய்கின்றது.

"அரசு மிக விரைவாகவும் தெளிவாகவும் இது தொடர்பான சட்டமியற்ற வேண்டுமென்று இக்குழு பரிந்துரைக்கிறது."

குழு மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கான அடிப்படை குறித்தே பரிந்துரை செய்து தன் அறிக்கையில் தெளிவு படுத்தியுள்ளது.

"இன்றைய மெட்ரிகுலேசன் பள்ளிகளில் ஆங்கிலம்தான் பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்ற விதியுளது. தமிழ் அல்லது தாய்மொழியைப் பயிற்று மொழியாக ஏற்றுக்கொண்ட பின்னர் அவ்வாறிருத்தல் ஆகாது. ஆகவே அவ்வாறிருக்கும் விதி, ஆங்கிலம் அல்லது தமிழ்/தாய்மொழி பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்று திருத்தப்படவேண்டும்".

இந்த அடிப்படையில் குழு பின்வரும் பரிந்துரைகளைச் செய்தது.

1. மழலையர் மற்றும் 5-ஆம் வகுப்பு (E. S.) வரை அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் அல்லது தாய்மொழி மட்டுமே பயிற்று மொழியாக அமைய வேண்டும். 3-ஆம் வகுப்பு தொடங்கி ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாக பயிற்றுவிக்கப்படவேண்டும்.
2. 6 ஆம் வகுப்பில் சேர்ப்பதற்கு 5ஆம் வகுப்புத் தகுதி நிலையில் கல்வி மாவட்ட அளவில் மாவட்டக் கல்வி அதிகாரி தலைமையில் ஒரு குழு அமைத்து ஒரே நாளில் ஒவ்வொரு பள்ளியிலும் (ஒரு பொதுவான) தேர்வு நடத்தி, தேர்வு பெற்றவர்களைச் சேர்த்துக் கொள்ளலாம்.
3. பயிற்று மொழிக் கொள்கையைப் பின்பற்றாத பள்ளிகள் ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் (3 ஆண்டுகள்) மாற்றியமைத்துக் கொள்ள வேண்டுமென்று அரசு அறிவிக்க வேண்டும். இதனை ஏற்காத பள்ளிகட்கு ஏற்பு வழங்கக் கூடாது.
4. மெட்ரிகுலேசன் பள்ளிகளில் ஆங்கிலம்தான் பயிற்றுமொழி என்றிருப்பதை, ஆங்கிலம் அல்லது தமிழ்/தாய்மொழி பயிற்று மொழி என்று திருத்தப்பட வேண்டும். இதனால் 6 ஆம் வகுப்பு தொடங்கி தமிழ் வழி கற்பிக்கும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் அரசின் ஏற்புப் பெற வாய்ப்பு ஏற்படும்.
5. அரசுப் பள்ளிகளில் ஆங்கிலம் பயிற்றுமொழியாக இருக்கும் பிரிவுகளை, 6-ஆம் வகுப்பிலிருந்து ஒவ்வொரு வகுப்பாக (படிப்படியாக) நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
6. ஆங்கிலத்தை முறையாகக் கற்பிக்க 6-ஆம் வகுப்பு முதல் ஆங்கிலத்தில் பட்டம் பெற்று நன்கு தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை அரசு நியமிக்க வேண்டும். மாணவர்கள் பேசவும், எழுதவும் திறம் பெறும் வகையில், ஆங்கில மொழியைக் கற்பிக்கும் முறையில் மாற்றம் செய்ய வேண்டும்.
7. ஆறாம் வகுப்பு முதல் முதற்பிரிவில் வட்டாரமொழி அல்லது தாய்மொழி படிக்க வேண்டும் என்னும் விதியை (அரசு ஆணை எண்.105, கல்வி, நாள் 24.1.68) தமிழ் அல்லது தாய்மொழி என்று திருத்தம் செய்ய வேண்டும்.
8. உயர்கல்வி : கலைச்சொல் பட்டியல்கள் தயாரித்தல்; பாடநூல் தயாரித்தல்; தொழிற்கல்வியை தமிழ்வழி கற்பித்தலைத் தொடங்குதல்.

I. சட்டத்தின் வாயிலாக தன்னாட்சி அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும். (A Statutory Autonomous Body). பதவி வழிப்பட்ட தலைவராக முதல்வர் C.M. இருக்க வேண்டும். செயல் தலைவராகக் கல்வித் துறையில் சிறந்த ஒருவர் இருப்பார். துறைதோறும் அத்துறை நிபுணர்களைத் துறைத் துணைத் தலைவர்களாகக் கொண்டு துறைசார் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

II. கைவினைஞர் நிலையில் (I.T.I.) தமிழ் பயிற்றுமொழி ஆக்குவதைத் தொடர்ந்து, தொழில்நுட்பப் பயிலகமும் (Polytechinic) பின்னர் பொறியியல் கல்லூரியும் (Engineering College) தமிழைப் பயிற்று மொழியாக்க வேண்டும். இம்மூன்று நிலைகளிலும் தேவையான ஆயத்தப் பணிகளை ஒரே சமயத்தில் தொடங்க வேண்டும்.

9. சித்த மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் போன்ற துறைகளில் தமிழ்வழியில் கற்பிப்பதற்கான வாய்ப்பினை அரசு உருவாக்கவேண்டும்.
10. வேலைவாய்ப்பில் முன்னுரிமை:- மற்ற அனைத்துக் கூறுகளிலும் சம தகுதி பெற்றவர்களுக் கிடையில் தமிழ்வழிப் பயின்றவர்களுக்கு முன் வாய்ப்பு நல்குவது தமிழ்வழிக் கற்பவர்களை ஊக்குவிப்பதாக அமையும். (அவர்கள் அரசுப் பணியாளர்களாக நியமிக்கப்படுவதால் தாய்மொழி வழியில் ஆட்சி செலுத்துவது நல்ல முறையில் அமைய உதவும்.)

"இப்பரிந்துரைகள் அமைச்சரவைக் கூட்டத்தில், விவாதிக்கப்பட்டு, மேற்கொள்ளப்படும் முடிவுகள் நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த பின்னர் அறிவிக்கப்படும்."

இக்குழு பலரது கருத்துகளையும் கேட்டு மட்டும் பரிந்துரை செய்யவில்லை.

ஒருசில மாநிலங்களுக்கும் சென்று, தக்கவர்களிடம் கலந்து பேசி உண்மைகளை அறிந்து, அவர்கள் பிறப்பித்துள்ள ஆணைகளையும் இங்கே இணைத்துக் காட்டியிருக்கிறார்கள்.

கர்நாடகத்தைப் பொறுத்த வரையில் ஒன்று முதல் நான்கு வரை தொடக்கக் கல்வி. இங்கு ஒன்று முதல் நான்கு வகுப்புகளில் ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாகக் கட்டாயமாகக் கற்பிக்கவோ அல்லது பயிற்றுமொழியாகப் பயன்படுத்தவோ கூடாது என்பதுதான் விதி. உச்சநீதி மன்றத்தில் ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது என்றாலும் கர்நாடகம் இதில் தெளிவாக உள்ளது.

மொழிப்பாடம் மற்றும் பயிற்றுமொழி தொடர்பாகச் சிறுபான்மையர் நடத்தும் நிறுவனங்களுக்கு விதிவிலக்கு ஏதுமில்லை. ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு மட்டும் இப்போது அங்கீகாரம் பெற்றுள்ள ஆங்கில வழிப் பள்ளிகளில் 1 முதல் 4 வகுப்புகளில் ஆங்கில வழிக் கல்வி கற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**மேல்நிலை**

இரண்டு மொழிகள் கற்க வேண்டும்; ஒன்று கன்னடம் (அ) தாய்மொழி, மற்றொன்று ஆங்கிலம். நான்கு பாடங்கள் கற்க வேண்டும். ஆங்கிலம் (அ) தாய்மொழியில் கற்கலாம்; வினாத் தாள்கள் ஆங்கிலம் மற்றும் கன்னடத்தில் மட்டுமே இருக்கும்; விடைகளை கன்னடம் (அ) ஆங்கிலத்தில் மட்டுமே எழுதவேண்டும்.

**மேற்கு வங்க நிலைமை**

"கடந்த ஆண்டு வரை ஆரம்பக் கல்வி அனைத்தும் அந்தந்த பகுதியினுடைய தாய்மொழியிலேயே இருந்ததாகவும், மேற்கு வங்காளத்தில் பெங்காலி மொழியே பெரும்பாலான மக்களின் தாய்மொழியாக இருப்பதால் பெங்காலி மொழியிலேயே பாட போதனை நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார்.

மேலும், மேற்கு வங்காளத்தில் சற்றேறக்குறைய 55,000 தொடக்கப் பள்ளிகள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

3ஆம் வகுப்பு முதல் ஆங்கிலம் ஒரு பாடமாகப் பயிற்றுவிக்கப் படுகிறது. (1999-2000க்குப்பின் இந்த நிலை).

**ஆந்திர மாநில நிலைமை**

ஆங்கிலம் இரண்டாவது மொழிப்பாடமாக ஐந்தாம் வகுப்பு முதல் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

தெலுங்கு மொழி அல்லது சிறுபான்மை மொழி. - மொழிப் பாடம். பிற பாடங்கள், இந்தப் பாடங்கள் தெலுங்கு மொழியிலோ அல்லது சிறுபான்மை இனத்தவர் அவர்களது தாய்மொழியிலோ பயில வசதி உள்ளது. ஆங்கில வழிக் கற்பவர்கள், ஆங்கில மொழி வாயிலாக இந்தப் பாடங்களை பயிலுவதற்கும் வாய்ப்புகள் உள்ளன.

ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் நர்சரி பள்ளிக்கு அங்கீகாரம் மற்றும் ஒப்புதல் போன்ற நடைமுறைகள் ஏதுமில்லை. இதற்கென தனியாக வரைமுறைப்படுத்தும் சட்டதிட்டம் எதுவும் இல்லாத காரணத்தால், எத்தனை பள்ளிகள் உள்ளன என்ற விவரம் முழுமையாக இல்லை.

மெட்ரிக் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் என்ற எந்த நிலையிலும் பள்ளிகள் இல்லை என்ற கருத்தும் அறியப்பட்டது.

**ஆந்திராவில் உள்ள பள்ளிகள் விவரம்:**

| | | |
|---|---|---|
| தெலுங்கு மொழிப் பள்ளி | - | 61166 |
| ஆங்கில வழியில் நடப்பவை | - | 3004 |
| உருது | - | 1265 |
| தமிழ் | - | 73 |
| ஒரியா, கன்னடம், இந்தி, மராத்திய மொழி வழிப் பள்ளிகள் | - | 234. |

தெலுங்கு, உருது, ஆங்கிலத்துடன் தமிழையும் இணைப்பயிற்சி மொழியாகக் கொண்டுள்ள கல்வி நிறுவனம் : ஒன்று (HAJC)

தெலுங்கு, தமிழ் மட்டுமே இணைப் பயிற்றுமொழியாகக் கொண்டுள்ள

| | | |
|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | - | 16 |
| நடுநிலைப் பள்ளிகள் | - | 6 |
| உயர் நிலைப்பள்ளிகள் | - | 9 |
| (HAJC) | - | 1 |

ஆந்திராவில் மொழிப்பாடம் எப்படி அமைந்துள்ளது? 6ஆம் வகுப்பு முதல் மும்மொழிக் கொள்கைதான். ஆனால், 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை ஒரே மொழிதான் : தெலுங்கு மொழி அல்லது தாய்மொழி 5ஆம் வகுப்பில் ஆங்கிலமும் பாடமாகிறது.

எனவே, நீதியரசர் மோகன் தலைமையிலான குழு ஆந்திரா, கர்நாடகம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களின் தொடக்கக் கல்வி நிலைகளையும், அங்கு பயிற்றுவிக்கப்படும் மொழிகளையும் உணர்ந்தே தக்க பரிந்துரைகளைச் செய்திருக்கின்றது என்பதனைக் கவனிக்க வேண்டும்.

⋆ ⋆ ⋆

இப்பரிந்துரைகளுடன், தமிழக அரசு மெட்ரிகுலேசன் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளின் கருத்துக்களையும் பரிசீலித்து தமிழக அரசு ஆணை வெளியிட்டது.

**தமிழக அரசு ஆணை**

மோகன் குழுவின் அறிக்கையை முழுமையாக ஏற்றுக்கொண்ட தமிழக அரசு மழலையர் பள்ளிகளில் தமிழைப் பயிற்றுமொழியாக்கும் திட்டத்தை அறிவித்தது. அரசு வெளியிட்ட ஆணை வருமாறு:

1. பயிற்சி மொழிக் கொள்கை பற்றி வெளியிடப்படும் அரசாணைகள் செல்லும் என நீதிமன்றம் கூறியுள்ளது. இதற்காகச் சட்டம் எதுவும் இயற்றப்பட வேண்டியதில்லை என அரசாங்கம் கருதுகிறது. எனவே அரசாங்கத்தில் மொழிக் கொள்கை பற்றிய உத்தரவுகள் அரசாணை மூலம் வெளியிடப்படுவது தொடரும்.
2. மெட்ரிகுலேசன் பள்ளிகள், அரசுப்பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், பெறாத பள்ளிகள் உட்பட எல்லாப் பள்ளிகளிலும் தமிழ் அல்லது தாய்மொழியே முதல் மொழியாக இருக்கும்.

3. மெட்ரிகுலேசன் மற்றும் அரசுப் பாடத்திட்டம் வழக்கில் உள்ள பள்ளிகளிலும் முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் அல்லது தாய்மொழியே பயிற்சிமொழியாக இருக்கும்.

4. தமிழ் அல்லது தாய்மொழிப் பயிற்சிக்கு மாறும் பணி மூன்றாண்டுகளில் நிறைவுபெறும். 2000 - 2001 ஆம் ஆண்டு முதல் வகுப்பில் பயிற்சிமொழி ஆகும். பின்னர் அது படிப்படியாக உயர் வகுப்புகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

5. அனுமதி பெறாத அல்லது அங்கீகாரம் பெறாத பள்ளிகளிலோ தனிப்பட்ட முறையில் பயின்ற மாணவர்கள் 6 ஆவது வகுப்பு வரை, பள்ளியினால் நடத்தப்படும் நுழைவுத் தேர்வின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

6. தமிழ் அல்லது தாய்மொழியே பயிற்சிமொழி என மெட்ரிக்குலேசன் பள்ளி போர்டு விதிகளில் தெளிவாக்கப்படும். இத்தகைய திருத்தத்தை மெட்ரிகுலேசன் பள்ளிகளில் ஆறாவது வகுப்பிலிருந்து செயல்படுத்தத் தனியாக ஆணை பிறப்பிக்கப்படும்.

அரசாங்க உதவி பெற்ற, பெறாத, அனுமதி பெற்ற மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆகிய எல்லாப் பள்ளிகளிலும் முதன்மை மொழி தமிழ் அல்லது தாய்மொழி எனத் தெளிவுபடுத்தப்படும்.

**தனியார் பள்ளிகள் எதிர்ப்பு (மெட்ரிகுலேசன் கூட்டமைப்பு)**

அரசு வெளியிட்ட ஆணையை தனியார் பள்ளிகளின் நிர்வாகிகளும், பெற்றோர்களும் எதிர்த்தனர். இந்த அரசு ஆணை மாணவர்கள், பெற்றோர்களின் உரிமையைப் பறிப்பதாக ஆங்கிலவழிப் பள்ளி நிர்வாகிகளின் கூட்டமைப்பு உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. ஆங்கிலப் பள்ளிகளின் சங்கத்தின் சார்பில் அதன் செயலர் பி.டி.குமார் இந்த வழக்கில் முதல் வாதியாக சேர்க்கப்பட்டார். 31 தனியார் பள்ளிகளின் நிர்வாகிகள் வழக்கில் வாதிகளாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

உயர்நீதி மன்றத்தில் ஆங்கிலப் பள்ளி நிர்வாகத்தினர் சார்பில் வழக்குத் தொடரப்பட்டது.

**உயர்நீதிமன்றத்தில் முறையீடு**

உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசின் பயிற்றுமொழிக் கொள்கைக்கு ஆதரவாக அரசின் பள்ளிக்கல்வித்துறைச் செயலாளர், பள்ளிக்கல்வி இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்குநர் ஆகியோர் பிரதிவாதிகளாகச் சேர்க்கப்பட்டனர். தமிழ்ச்சான்றோர் பேரவையின் நிறுவனர் அருணாச்சலம், வலம்புரிஜான், வழக்கறிஞர் காந்தி, வழக்கறிஞர் அரிபரந்தாமன் ஆகியோர் தங்களையும் வழக்கின் பிரதிவாதியாகச் சேர்த்துக்கொள்ளக் கோரி மனு செய்தனர். தனியார் பள்ளிகள் சார்பில் பலரை வாதிகளாக ஏற்றுக்கொண்ட உச்சநீதிமன்றம் தமிழ்வழிக் கல்விக்கு ஆதரவாக மனு செய்தவர்களின் மனுக்களை நிராகரித்துவிட்டது.

வழக்கு விசாரணையின்போது தமிழ்வழிக் கல்விக்கு எதிரான பேரணியை சென்னையில் நடத்தப்போவதாக பி.டி.குமார் அறிவித்தார். தமிழ்வழிக் கல்விக்கு ஆதரவான பல தமிழ், தமிழர் அமைப்புகள் தமிழ்வழிக் கல்விக்கு ஆதரவுப் பிரச்சாரத்தில் இறங்கின. இதன் விளைவாகத் தமிழ்வழிக் கல்வி குறித்தான பலத்த விவாதங்கள் தமிழக மின்னணு ஊடகங்களில் எழுந்தன. இதன் விளைவாக அன்றைய தி.மு.க. அரசு தமிழ்வழிக் கல்விக்கு ஆதரவான கூட்டங்களைத் தமிழகமெங்கும் நடத்தப்போவதாக அறிவித்தது. இதனை எதிர்த்து பி.டி.குமார் (மெட்ரிகுலேசன் கூட்டமைப்பு செயலர்) வழக்கு முடியும் வரை, தமிழ்வழிக் கல்வித் திட்டத்தினை ஆதரித்து கூட்டங்களைத் தமிழக முதல்வர் உள்ளிட்ட யாரும் நடத்த தடைவிதிக்க வேண்டும் என நீதிமன்றத்தில் மனு செய்தார். இதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் தமிழ்வழிக்கல்விக்கு ஆதரவான, எதிர்ப்பான கூட்டங்கள் நடத்துவதைத் தடை செய்தது.

நீதியரசர்கள் ஏ.எஸ் வெங்கடாசல மூர்த்தி, எஸ்.ஜெகதீசன், என்.தினகர் ஆகியோர் அடங்கிய மூவர் குழு இவ்வழக்கை விசாரித்தது.

**தமிழக அரசின் சார்பில் மூத்த வழக்கறிஞர் சாந்தி பூஷண் வாதாடினார்.**

“அரசு வெளியிட்ட உத்தரவு முக்கியமான கொள்கை முடிவாகும். குழந்தைகள் தாய்மொழி மூலமாகத்தான் பாடங்களைத் தானாகப் புரிந்து கொள்ள முடியும். குழந்தைகளுக்கு எவ்விதம் கல்வி அமைய வேண்டும் என்பதை பெற்றோர் அறிந்திருந்தாலும், அவர்களை விட கல்வியாளர்களுக்குத்தான், குழந்தைகளின் கல்வி குறித்தும் அதிகம் தெரியும். தாய்மொழியில் படிப்பதுதான் குழந்தைகளுக்கு நல்லது என்று கல்வியாளர்கள் தொடர்ந்து கூறி வருகின்றனர்" என்றார் சாந்திபூஷண்.

“The Government can impose reasonable restrictions on provision of primary education to children in a State especially on medium of instruction as this was an important matter of policy for the State.

The language of instruction at a primary level was an important part of policy of the Government. Education had to be imparted in the mother tongue, in which the child was most familiar with,” என்றும் வாதாடினார் அவர்.

இதன்பிறகு வழக்கு தமிழக அரசின் ஆணையை இலதாக்குவதில் (இரத்துச் செய்வதில்) முடிந்தது. ‘தமிழக அரசின் ஆணை செல்லாது என்பது தீர்ப்பு.’

இதன்படி கலைஞர் கருணாநிதியின் தமிழ்வழிக் கல்வியின் கனவு தகர்ந்தது.


அன்றைய நிலையில் தமிழ் உணர்வாளர்களும் இத்தீர்ப்புக்கு பெரிய கண்டனங்களை தெரிவிக்கவில்லை.

கட்டுரையாளர், சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக சிறப்புநிலைப் பேராசிரியர்.



27.05.2022 அன்று சேலம் அரூரில் 37வது தேசிய புத்தகக் கண்காட்சியை அரூர் மாவட்டத் துணைக்கண்காணிப்பாளர் திருமதி எஸ்.பெனாஷீர் பாத்திமா அவர்கள் திறந்து வைத்தார். இதில் அரூர் சட்டமன்ற உறுப்பினர் வே.சம்பத்குமார், அரூர் வட்டாட்சியர் சி.கனிமொழி, கவிஞர் ரவிந்தரபாரதி, இரா. சிசுபாலன், இ.தங்கமணி, கோவை என்.சி.பி.எச் கோவை மண்டல மேலாளர் ஆர்.ரங்கராஜன் மற்றும் சேலம் கிளை மேலாளர் டி.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## விரைவில்
## நியூ செஞ்சுரி புத்தக நிறுவன வெளியீடாக...




### அறியப்படாத இந்து மதம்
**(முதல் பாகம்)**

### செ.தி.ஞானகுரு

இந்து மதம் நிறுவனமயமாக்கப்பட்ட மற்ற மதம் போன்று செயல்பட்டதில்லை. அதனால் தான் இது மதமல்ல, வாழ்க்கை முறை என்றார்கள்.

வைதிக சனாதன நூல்கள் வாயிலாக உள்ள கருத்துக்களுக்கும், தங்களை இந்துக்கள் என நம்பிக்கொண்டிருக்கும் பெருவாரியான மக்களின் நம்பிக்கைகளுக்கும் உள்ள விசயங்களில், மலைக்கும் மடுவிற்குமான வித்தியாசங்கள் உள்ளது. காரணம் வைதிக சனாதன நூல்களை ஆழ்ந்து ஊன்றிப் படிக்கிறவர்கள் இல்லை. நூல்களின் எண்ணிக்கையும் ஆயிரக்கணக்கில் இருப்பது ஒரு காரணமாய் இருக்கலாம்.

எந்த ஒரு முன் முடிவும் இல்லாமல் வைதிக சனாதன நூல்களை வாசிக்கிறவர்களுக்கு, இந்த நூல் மூலம் பல விடயங்கள் எளிதில் விளங்கும்.




கட்டுரை

# நாட்டார் மரபில் விஷ்ணுவிற்கும் உரிமை உண்டு

அ.கா.பெருமாள்

தமிழக நாட்டார் தெய்வங்கள், வழிபாடு, நாட்டார் சடங்குகள் பற்றி ஆராய்ந்தவர்களில் பெரும்பாலோர் இவற்றைச் சைவச்சார்புடன் தொடர்புபடுத்திப் பேசுவது வழக்கமாக உள்ளது. நாட்டார் தெய்வங்களின் வழிபாட்டு மரபில் சிவன், பார்வதி தொடர்பான கதைகளே அதிகம் உள்ளன. சைவத்தை ஒப்பிடும் போது வைணவம் அல்லது விஷ்ணு, தொடர்பான கதைகள், தெய்வங்கள் வழிபாட்டு முறைகள் மிகக் குறைவாகவே கிடைத்துள்ளன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இராமாயண, பாரதக் கதைகள் தமிழகத்தில் வழக்கிலிருந்தன. இவை பற்றிய குறைவான சான்றுகள் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன. இராமாயணத்தின் முழுக்கதையும் அல்லது வான்மீகியின் மூலவடிவமும் சங்க காலத்தில் வந்து சேர்ந்ததா என்பதைச் சரியாகச் சொல்ல முடியவில்லை. அதே சமயத்தில் சங்கப் பாடல்களில் காணப்படுகின்ற இராமாயணத் துணுக்குகள் வாய்மொழியாகப் பேசப்பட்டவற்றின் அறுபட்ட துண்டுகளும் அல்ல.



ஆரம்ப காலத்தில் தமிழ் மக்கள் வழங்கிய இராமாயணக்கதை உவமை, உருவகத்திற்குப் பயன்படும் அளவுக்கு பரவலாக அறியப்பட்டிருக்கிறது. சிலப்பதிகாரம், பரிபாடல் போன்ற இலக்கியங்களின் காலத்தில் பாகவதக் கதைகள் பரவலாகிவிட்டன. இவ்விரு இலக்கியங்கள் மட்டுமல்ல, பெரும்பாணாற்றுப்படை, தொல்காப்பியம் போன்றவற்றிலும் குறிப்பிடப்படும் மாயோனும்-விஷ்ணுதான் என்று கூறுவது மரபாகிவிட்டது. ஐங்குறுநூறு கடறு கூறும் விண்டு விஷ்ணுவே என்பார் உரையாசிரியர்கள்.

உரையாசிரியர்களின் கணக்குப்படி சங்ககால விஷ்ணு வைதீகக் கடவுளாகவே காட்டப்படுகின்றான். இவன் ஆயிரம் தலைகளை உடைய பாம்பின் மேல் பள்ளி கொண்டவன். இவனது மகன் மன்மதன், இரணியனைக் கொன்றவன். ஆமை, பன்றி வடிவங்களை எடுத்தவன். தேசி என்னும் அரக்கனை அழித்தவன். கம்சனுடன் போர் செய்தவன். திருமகள் கணவன், இப்படிப் பல புராணத் துணுக்குகள் தமிழகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன. சிவன், திருமால் என இரண்டு தெய்வங்களிலும் வைதீகச் சார்புடன் சாட்டப்படுவது திருமால்தான்.

சிவன் ஆரம்பகாலத்திலிருந்தே நாட்டார் மரபுடன் இணைக்கப்பட்டே பேசப்படுகிறான். சாதாரண மக்களின் கடவுள் என்ற அடையாளத்தைப் பெறுவதற்குரிய கூறுகள் அவனிடம் உள்ளன. திருமாலின் நிலை வேறு. நகரமயமாக்கப்பட்ட இடத்தில் வாழும் மக்களுடன் இணைக்கப்பட்டு பேசப்படுகின்றான்.

தமிழக வழிபாட்டு மரபுச் செய்திகளில் விஞ்சி நிற்பது சிவனா, விஷ்ணுவா என்று ஒரு பட்டிமன்றம் நடப்பதாக வைத்துக் கொண்டால் அதற்குத் தலைமை தாங்குபவர் நியாயமாக முடிவு சொன்னால் அது சிவனுக்குத்தான் வந்து சேரவேண்டும்.

இதற்கான சான்றுகளைத் தமிழகத்தில் பரவலாகத் தேடமுடியும் என்றாலும் சைவ ஆச்சாரியர்களோ சித்தாந்திகளோ நாட்டார் வழிபாட்டை ஏற்றுக் கொண்டார்கள் என்று சொல்ல முடியாது. ஆறுமுக நாவலர் கண்ணகியின் வழிபாட்டை வெறுத்ததும், ‘செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள்’ என நாட்டார் தெய்வங்களை ஒரு பிரபந்த ஆசிரியர் கூறியதும் தமிழுலகம் அறியும்.

தமிழகத்தில் நாட்டார் தெய்வங்கள், நாட்டார் வழிபாடு என எல்லாவற்றையும் ஒரு சேர வைத்துப் பார்த்து ஒரு பொதுப் பண்பை உருவாக்கும் ஆய்வு நடந்ததாகத் தெரியவில்லை. நாட்டார் வழிபாட்டில் பழம் தமிழர் மதத்தையோ வைதீக சமயத் தாக்கத்தையோ தேடும் முயற்சி ஆரம்ப காலத்தில் நடந்திருக்கிறது. இத்தகு ஆய்வாளர்களில் பெரும்பாலோர் நாட்டார் மரபில் வைணவத் தாக்கம் அல்லது திருமால் வழிபாடு பற்றிய செய்திகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்று தோன்றுகிறது. இதற்கு முக்கிய காரணம் சான்றுகள் குறைவு என்பதால் இருக்கலாம்.

தென்மாவட்ட நாட்டார் மரபில் திருமால் அல்லது வைணவத் தாக்கம் குறித்த செய்திகளை 16க்கு மேற்பட்ட கதைப் பாடல்களில் தேட முடியும். ரங்கநாதன் குடிபெயர்ந்ததான கதை தொடர்பான பெருமாள்சாமி காவியம் என்ற கதைப்பாடலுக்கு மட்டும் பத்து வாய்மொழி வடிவங்கள் உள்ளன. இவற்றில் 7 வாய்மொழி வடிவிலும், ஏட்டு வடிவிலும் உள்ளன.

பெருமாள்சாமி காவியத்தில் வரும் பெருமாள் என்ற நாட்டார் தெய்வத்திற்கு தென்மாவட்டங்களில் வழிபாடு உள்ளது. நாஞ்சில் நாட்டில் மட்டும் இலந்தவிளை, புல்லுவிளை என 12 க்கு மேற்பட்ட கிராமங்களில் வழிபாடு பெறுகிறது. இலந்தவிளை கிராமத்தில் சங்கு சக்கர தாரியாக நான்கு கரங்களுடன் அமர்ந்த கோலத்தில் பெருமாள் சாமி இருக்கிறார். இது பஞ்சலோகப் படிமம். இவர் அண்மைக்காலம் வரை ஆடு பலிவாங்கிக் கொண்டிருந்தார்.

‘திருவனந்தபுரத்திற்கு திருவரங்கன் வந்த வரலாறு அல்லது பெருமாள்சாமி காவியம்’ என்ற வில்லிசைப் பாடல் தென்மாவட்டக் கோவில்களில் இன்றும் வில்லிசை நிகழ்ச்சியில் பாடப்படுகிறது.

திருவரங்கத்தில் குடிகொண்ட ரங்கன் தன் பூசகன் ஒருவனை பிற பூசகர்கள் பழித்ததால் திருவரங்கத்திலிருந்து குடிபெயர்ந்து திருவனந்தபுரத்தில் கோவில் கொண்டான் என்ற வாய்மொழிக் கதையின் அடிப்படையில் இந்த வில்லுப்பாட்டு உருவானது. இதே கதை காஞ்சி வரதராஜப் பெருமாளுடனும் சார்த்திக் கூறப்படுகிறது. இக்கதை திருமழிசை ஆழ்வாருடனும் தொடர்புடையது.

திருவரங்கம் அல்லது காந்திபுரத்திலிருந்து பெருமாள் தென் மாவட்டத்துக்கு குடிபெயர்ந்தான் என்ற வாய்மொழி மரபுக்கு திருமழிசையாழ்வார் கதைமூலமாயினும், பெருமாள்சாமி கதை அதிலிருந்து சற்று வேறுபட்டது; அதோடு தென்மாவட்ட வாய்மொழி மரபின் இணைப்பும் அதில் உண்டு.


தென் திருவிதாங்கூர் பகுதிகளில் மட்டுமல்ல, திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோவில் தொடர்பான கதைகளில் கூட ரங்கனாதனின் குடிப்பெயர்ச்சி செய்தி வருகிறது. திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவில் தொடர்பான வாய்மொழிக் கதைகளை ராணி கவுரிலட்சுமிபாய் தொகுத்திருக்கிறார் (Sree Padmanaba Swamy Temple Bharatiya Vidya Bhavan Bombay 1995).

பத்மநாபசுவாமி கோவிலில் கிடைத்த அனந்தசயனம் மகாத்மியம் என்னும் ஏடு அக்கோவில் தொடர்பான ஒரு கதையைச் கூறுகிறது. இது திவாகர முனிவருடனும் குஜராத் மாநிலத்தில் குடிபெயர்ந்த ஒரு சாதியினருடனும் தொடர்புடையது. இதே கதை இன்றைய கன்னியாகுமரி மாவட்டத்தில் வாய்மொழியாகவும் பேசப்படுகிறது.

குஜராத் (துவாரகை), காஞ்சிபுரம், ஸ்ரீரங்கம் ஆகிய இடங்களில் ஒன்றிலிருந்து தென் திருவிதாங்கூருக்கு வைஷ்ணவக் குடும்பங்கள் சில குடிபெயர்ந்தது பற்றிய 9 கதைகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி மாவட்டம் மேற்கு பகுதியில் வாழும் கிருஷ்ணவகை (குருப்பு) என்னும் சாதியினர் பற்றி டாக்டர் கே.கே.பிள்ளை ஒரு கட்டுரை எழுதி இருக்கிறார். அவர் “இச்சாதியினர் கிருஷ்ணனின் பசையினர், அதனால் இப்பெயர்; இவர்கள்

துவாரகையிலிருந்து கிருஷ்ணப் படிமத்தை சுமந்துவந்து திருவனந்தபுரத்திற்குக் கொண்டு வந்தார்கள். இந்தக் கதை 18 ஆம் நூற்றாண்டிலேயே சேகரிக்கப்பட்டிருக்கிறது என்கிறார்.




இந்த சாதியினர் தமிழ், மலையாளம் என இரு மொழிகளையும் பேசுகின்றவர்கள். இவர்களிடம் மருமக்கள் வழியினரும் உண்டு. இவர்களிடம் சேகரித்த செய்திகளின் அடிப்படையில் வைணவச் சார்பு உடைய அரச வம்சா வழியினர் என்கின்றனர்.

பிரமானந்த புராணமும் சுவாதித் திருநாள் பிரபந்தமும், திவாகர முனி என்னும் துளு பிராமணர் தொடர்பான கதையைக் கூறுகின்றன. ஒருமுறை இவர் தன் பூஜை அறையில் இருக்கும்போது குழந்தை ஒன்று சாளக்கிரமத்தை எடுத்துக் கொண்டு ஓடியதாம்; திவாகரம் குழந்தையின் பின்னே ஓடினார். குழந்தை புலையர் குடியிருப்பு இருந்த இடத்திற்கு சென்றது. சாளக்கிரமத்தை ஒரு இலுப்பை மரத்தின் அடியில் போட்டுவிட்டு மாயமாய் மறைந்தது. திவாகர் அந்த இடத்தில் ஒரு கோவில் கட்ட ஏற்பாடு செய்தார். திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவில் உருவானதற்கான கதை இது. இந்த நிகழ்ச்சி கொல்ல வருஷம் 222 இடவ மாதம் (மேய் - ஜுன் கி.பி. 1050) என்பது பழைய ஆவணக் கணக்கு.

திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவிலுடன் தொடர்புடைய இரண்டு கதைகளை நாட்டார் வழக்காற்றுச் செய்திகளில் பரவலாகக் கேட்க முடியும். ஒன்று ஸ்ரீரங்கம் அல்லது காஞ்சிபுரத்திலிருந்து கிருஷ்ணன் திருவனந்தபுரத்தில் குடியேறியது. இரண்டு அப்படிக் குடியேறும்போது முதலில் புலையர் வழியே கிருஷ்ணன் அறிமுகமாகிறான் என்ற முதல் செய்திக்குக் கதைப்பாடல் சான்று. இரண்டாவது வாய்மொழியாக வழங்குவது.

திருவனந்தபுரம் அனந்தங்காடாய் இருந்த சமயம். இலுப்பை மரங்கள் நிறையவே அடர்த்தியாக நின்றன. அந்தக் காட்டில் ஒருநாள் புலையன் புலைச்சி இரண்டு பேர் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது இலுப்பை மரத்தின் கீழ் குழந்தை ஒன்று அழுதுகொண்டு நிற்பதைக் கண்டனர்.

குழந்தை பசியால் அழுகிறது என்பதைப் புலைச்சி புரிந்து கொண்டாள். குழந்தைக்கு முலைப் பாலைக் கொடுத்தாள், குழந்தை பால் குடித்தது. சிரித்தது. புலையன் பசும்புல்லைச் சேகரித்து மெத்தை போல் ஆக்கினார். புல் மெத்தையில் குழந்தையைக் கிடத்தினாள் புலைச்சி. குழந்தை உடனே கிருஷ்ணனின் சிற்பமாக ஆனது. இலுப்பை மரம் ஐந்துதலைப் பாம்பாக மாறியது.

இதைப் பார்த்ததும் புலையனும் புலைச்சியும் பயந்து போனார்கள். அங்கிருந்து வேகமாய் ஓடிவிட்டனர். இந்த விஷயத்தை தன் எஜமானிடம் சொன்னான் புலையன். அதை அரசனும் அறிந்துவிட்டான். அங்கே ஒரு கோவில் கட்டினான் அரசன். அது பத்மநாபசுவாமி கோவில்.

அனந்தனை முதலில் கண்ட புலையனை அரசனுக்கு மறக்க முடியவில்லை. கோவில் பக்கத்திலுள்ள ஒரு வயலை புலையனுக்குக் கொடுத்தான். அந்த வயலில் விளையும் நெல்லை அரிசியாக்கி பத்மநாபனுக்கு நைவேத்தியமாகக் கொடுக்க வேண்டும் என்றும் அரசன் புலையனுக்குக் கட்டளை இட்டான். அந்த வயல் புத்தரிக் கண்டம் எனப்பட்டது.

பத்மநாபசாமி கோவிலில் கன்னிப்பூ நிறை சடங்கிற்கு இந்த வயலிலிருந்து கதிரை அறுத்துச் செல்வது வழக்கம். இருபதாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் கூட இந்த நிகழ்ச்சி நடந்தது. திருவனந்தபுரம் கிழக்கே கோட்டை எதிரே இப்போதுள்ள மைதானமே ஒரு காலத்தில் புத்தரிக் கண்டமாக இருந்தது. மகாத்மா காந்தி திருவனந்தபுரம் வந்தபோது, புத்தரிக் கண்டம் வயலில் புலையர்கள் நின்று பார்த்திருக்கிறார்கள்.

பத்மநாபசாமி கோவில் உருவான கதைகளில் வில்வமங்கலம் சாமியார் கதையும் ஒன்று. இதனுடனும் புலையர் ஒருவர் தொடர்புபடுத்தப்படுகிறார். வில்வமங்கலம் நம்பூதிரி என்பவர் ஒருவரல்லர்; இவர்கள் மூன்று கால கட்டங்களில் வாழ்ந்தவர்கள் என்று சொல்லுகிறார்கள். மலையாள மகாகவியும் இலக்கிய வரலாற்றாசிரியருமான உள்ளூர் பரமேஸ்வர அய்யர் வில்வமங்கலம் நம்பூதிரி ஒருவரே; அவர் பத்மநாபசுவாமி கோவில் தொடர்பானவர் என்கிறார். 9ஆம் நூற்றாண்டில் வில்வமங்கலம் சாமியார் ஒருவர் இருந்தார்; 1588ல் ஒருவரும் இருந்தார். இவர்களைப் பற்றிய வாய்மொழிக் கதைகளே பின்னர் தல புராணத்தில் நுழைந்தது. இவர்களின் கதை திவாகரமுனிவர் கதை போன்றது.

திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவிலும் திருவட்டாறு ஆதி கேசவர் கோவிலும் ஒரே அமைப்பை உடையது. இங்கு இருக்கின்ற அம்பாடி கிருஷ்ணன் கோவில் பற்றிய கதைகள் மகாபாரதத் தொன்மத்துடன் இணைக்கப்பட்டு பேசப்படுகிறது. இந்தக் கதைகள் தென் திருவிதாங்கூரிலும் வாய்மொழியாகப் பேசப்படுகின்றன.

அர்ஜுனன் தீர்த்தயாத்திரை சென்ற போது ராமேஸ்வரத்திற்குச் சென்றான். அங்கே ஒரு கல்பாலத்தைக் கண்டான். பாலம் அருகே ஒரு குரங்கு நின்றது. அர்ஜுனன் குரங்கிடம் "இந்தப் பாலத்தைக்

கட்டியது யார்?'' என்று கேட்டான். குரங்கு ''இராமனின் கட்டளையால் குரங்குகளும் கரடிகளும் பாலத்தைக் கட்டின'' என்றது.

அர்ஜுனன் ''கிருஷ்ணனின் பெயரைச் சொல்லி என் வில்லின் உதவியால் பாலம் கட்ட முடியும்'' என்றான். குரங்கு "செய் பார்க்கலாம்" என்றது. அர்ஜுனன் வில்லை வளைத்து அம்பைப் பொருத்தி கிருஷ்ணா என வாய்விட்டுச் சொல்லி சரத்தைச் செலுத்தினான். சரங்கள் சென்றன. பாலம் உருவானது. குரங்கு ''அப்பனே நீ யார்'' எனக் கேட்டது.'' "நான் பாண்டு மைந்தன் அர்ஜுனன்'' என்றான். இதே சமயத்தில் குரங்கு அனுமனாக உருமாறியது.

அனுமனுக்கும் அர்ஜுனனுக்கும் இடையே கிருஷ்ணன் குழந்தையாக நின்றான். இருவரும் கிருஷ்ணனை வணங்கினர். கிருஷ்ணன்''திருவரங்கத்தில் ரங்கனுக்குப் பூசை செய்வோரிடம் மாறுபாடு வரப்போகிறது; அதனால் ரங்கனாதன் அங்கிருந்து குடிபெயர்ந்து அனந்தங்காட்டுக்கு வரப்போகிறான். நானும் அவனுடன் சேர்ந்து கொள்ளுவேன்'' என்றான்.

திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி ஆலயம் உருவான கதை பெருமாள்சாமி கதையுடன் தொடர்புடையது. இராம வழிபாட்டிற்கு எதிராக அல்லது அதை அகற்றிவிட்டு கிருஷ்ண வழிபாட்டின் ஆரம்பம் இந்த வாய்மொழிச் செய்தியின் சாராம்சம். தென் மாவட்டங்களில் குறிப்பாக - தென் திருவிதாங்கூரில் கிருஷ்ண வழிபாடு நாட்டார் மரபில் நுழைந்ததற்கு இது போன்ற வேறு கதைகளும் உண்டு.

ஸ்ரீரங்கத்திலிருந்து ரங்கநாதன் திருவனந்த புரத்திற்கு வந்தபோது தனியாக வரவில்லை; மூன்று பூதங்கள், சில தெய்வங்களுடன் வந்தார். ஸ்ரீரங்கத்திலிருந்து அனந்தபுரம் வரையுள்ள ஊர்களில் உள்ள கோவில்களுக்குச் சென்றார். சிதம்பரம் நடராசன். மதுரை மீனாட்சி, நெல்லை காந்திமதி எனப் பல தெய்வங்களைக் கண்டு அளாவினார். இதெல்லாம் பெருமாள்சாமி காவியம் கூறும் செய்தி. வில்லிசைக் கலைஞர் தங்கமணி, ரங்கனாதன் ஸ்ரீரங்கத்திலிருந்து பெரும் செல்வங்களுடன் தங்க நகைகளுடன் பட்டு பீதாம்பரங்களுடன் ஆடம்பரமாக வந்தார் என வில்லிசை நிகழ்ச்சியில் பாடுவார்.

அனந்தங்காட்டில் கிருஷ்ணன் (பெருமாள்) வந்தபோது புலையன் ஒருவனே முதலில் கண்டான் என்னும் செய்திகள் வேறு வேறு வடிவங்களில் உள்ளது, ரங்கன் குடிபெயர்ச்சி மூலக்கதை; மட்டுமன்றி தென் திருவிதாங்கூரில் பெருமாள் சாமி அல்லது திருமால் குடிபெயர்ச்சி மட்டுமல்ல வைணவத்தாக்கம் உள்ள வேறு கதைகளும் வழக்கில் உள்ளன.

1. காஞ்சிபுரத்திலிருந்து கருடன் பறக்கை மதுசூதனப் பெருமாள் ஆலயத்துக்கு வந்த கதை
2. இராமாயண காவிய இராவணன் வழிபட்ட பத்திரகாளி வழிபாடு, இராவணன் பூஜா விதி என்ற நூல்.
3. இடைகரை புலை மாடசாமி கதை
4. பிணமாலை ஆடும் பெருமாள் கதை
5. திருநெல்வேலி மாவட்டம் வாகைக் குளம் உலகளந்த பெருமாள் கோவில் அருகே உள்ள வைணவ பிராமணர் குடிபெயர்ச்சி
6. தென் மாவட்டங்களில் வழக்கில் உள்ள தோல்பாவைக் கூத்து, கண்ணன் ஆட்டம் என்னும் இரு கலைகள்.
7. இச்சான்றுகள் எல்லாமே தென் மாவட்டம் - குறிப்பாக திருநெல்வேலி, கன்னியாகுமாரி மாவட்டம் தொடர்பான வைணவத் தொடர்புகளைக் கூறுவன.

ஒருமுறை காஞ்சிபுரத்து அரசன் ஒருவனின் பிறந்தநாள் சனிக்கிழமை வந்தது. சோதிடர்கள் அரசனிடம் ''இதனால் தோஷம் வரும் பரிகாரம் செய்யலாம்'' எனச் சொன்னார்கள். அரசன் "என்ன பரிகாரம்" எனக் கேட்டான். ஜோதிடன் ''மரத்தால் கருடன் செய்து அதைத் தென் திருவிதாங்கூரில் உள்ள பறக்கை மதுசூதனர் ஆலயத்திற்குக் கொடுக்க வேண்டும்'' என்றான்.

அரசனின் கட்டளைப்படி திறமையான தச்சர் ஒருவர் கருடன் செய்தார். அது தத்ரூபமாக இருந்ததால் வானில் பறக்க யத்தனித்தது. ஆசாரி தன் கை உளியை அதன் மேல் எறிந்தான். உளி கருடனின் சிறகில் பட்டது; என்றாலும் கருடன் வானில் பறந்தது. ஆசாரி அதன் பின்னே ஓடினான். அரசனும் பரிவாரங்களும் கருடன் பின்னே சென்றன. கருடன் பறக்கை கோவிலில் தஞ்சமடைந்தது; தச்சனும் அங்கே போனான். கருடன் கோவிலில் தென்மேற்கு மூலையில் அமர்ந்தது.

இந்தக் கதை மேலும் தொடருகிறது. பறக்கை மதுசூதனர் கோவில் தலபுராணத்தில் இக்கதை வருகிறது. இக்கோவில் திருவிழாவில் 5 ஆம் நாளில் கருடனுக்குக் கண் திறக்கிறது என்ற சடங்கு நடக்கிறது. இப்போதும் நடக்கும் நிகழ்ச்சியை ஆசாரி ஒருவரே செய்கிறார். இவரது குடும்பத்தினர் தங்களைக் காஞ்சிபுரத்திலிருந்து குடிபெயர்ந்ததாகச் சொல்லிக் கொள்ளுகின்றனர்.

நாஞ்சில் நாட்டில் பறக்கை, மருங்கூர், இரவிபுதூர், காடேத்தி என்னும் கிராமங்களில் காஞ் சிபுரத்திலிருந்து அரசன் ஒருவன் வந்ததான கதை வழங்குகிறது. இவன் வைஷ்ணவச் சார்பாளன். இவனுக்கு இரவிபுதூரில் வழிபாடு உள்ளது. இவன் தொடர்பான கதை வில்லிசை நிகழ்ச்சியில் பாடவும் செய்கின்றனர்.

இராமாயணக் கதையுடன் தொடர்புடைய பாத்திரங்களுக்கு வழிபாடு நிகழ்வது பொதுவானது. இவற்றில் வட்டார ரீதியான வேறுபாடு உண்டு. தென் திருவிதாங்கூரில் இப்படியான வழிபாடுகள் சிலவற்றை அடையாளம் காண முடியும். இதுவும் இப்பகுதியின் வைணவச் சார்பின் சான்று.

கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் தாலுகாவில் தெக்குறிச்சி உட்பட 14 கிராமங்களில் கோவிலூட்டம்மை வழிபாடு உள்ளது. இந்த வழிபாடு தூத்துக்குடி மாவட்டம் தட்டார் மடம் ஊரிலிருந்து குடிபெயர்ந்த வைணவர்களால் பரவியதாகச் சொல்லுகிறார்கள். தட்டார் மடம் கோவில் வடதமிழ்ப் பகுதியில் ஓர் ஊருடன் தொடர்புடையது என்ற ஒரு கதை உண்டு. அந்த ஊர் பெரும்பாலும் காஞ்சிபுரம் அல்லது ஸ்ரீரங்கமாக இருக்கலாம்.

கோவிலூட்டம் என்ற பெயர் காளியைக் குறிப்பது. இவள் இராவணனால் பூசை செய்யப்பட்ட காளி. இராமனை வெல்ல சுக்கிராச்சாரியார் கூறிய அறிவுரைப் படி இராவணன் வழிபட்ட தெய்வம். இந்த வழிபாட்டை அனுமனும் அங்கதனும் அழித்தனர் என்பது ஒரு ராமாயணக் கதை.

கோவிலூட்டம்மை வழிபாட்டினரிடம் ஒரு சிறிய கதைப்பாடல் உள்ளது. 238 வரிகள் கொண்ட இதை இவர்கள் காவியம் என்கின்றனர். இராவணன் இராமனை ஜெயிக்க காளியிடம் வாள் வேண்டி எட்டாவது கோட்டையில் யாகம் செய்கிறான். இதை விபீஷ்ணன் வழி அறிந்த அனுமன் தன் வீரர்களுடன் அந்த இடத்திற்குப் போகிறான்.

அனுமன் காளியிடம் இராம அவதாரப் பெருமையையும் திருமாலின் சிறப்பையும் விவரிக்கிறான். உடனே காளி வீரவாளை அனுமனிடம் கொடுத்து விடுகிறாள். தன்னை திருமால் அடியவனாகப் பிரகடனப் படுத்துகிறான். என்னை யார் வணங்குகிறார்களோ அவர்களுக்கு திருமாலின் அருள் கிடைக்கும் என்கிறான்.

இராமன் காளியிடம் பெற்ற வாளால் இராவணனை வெட்டுகிறான். இந்த வாள் திருமாலின் அம்சமாகக் கொள்ளப்பட்டது. இராம ராவணப் போர் முடிந்ததும் காஞ்சிபுரத்தில் உள்ள சிலர் காளியை வழிபட்டனர்; இதற்கு அடையாளமாக ஒரு வாளை நட்டனர். இது கோயிலூட்டம்மை எனப்பட்டது.

இராவணன் யாகம் செய்து காளியை வருவித்த கதை தமிழ் ராமாயணங்களிலோ வான்மீகியிலோ இல்லை. ஆழ்வார்களும் சொல்லவில்லை. வட இந்திய ராமாயணங்கள் சிலவற்றிலும் (அத்யாத்ம ராமாயணம்) தெலுங்கு இராமாயணங்களிலும் (ரங்கநாத ராமாயணம், ஆனந்த ராமாயணம்) பரோடா சமஸ்தானத்தில் கிடைத்த சமஸ்கிருத ராமாயண ஏட்டிலும் இந்தக் கதை நிகழ்ச்சி உள்ளது.

தோல் பாவைக் கூத்து நிகழ்ச்சியில் இராவணனின் தம்பி ஒருவன் இராமனைக் கொல்ல யத்தனிக்கும் கதை காட்டப்படும். இது மயில்ராவணன் கதை எனத் தனியாகவும் காட்டப்படுகிறது.

இடைகரை புலை மாடசாமி என்னும் நாட்டார் தெய்வம் தொடர்பான கதையும் அனந்தன்காட்டு கிருஷ்ணன் கோவில் பூசகருடன் தொடர்புடையதுதான். பிணமாலை ஆடிய பெருமாள் கதை மாடன் விஷ்ணு தொடர்புடையது. பெருமாள் மாடனாக மாறிய இந்தக்கதை திருநெல்வேலி மாவட்டம் தென்பகுதி கிராமங்களில் வழக்கில் உள்ளது.

இப்படியாக தென் மாவட்டங்களில் வழிபாடு பெறுவதும், வில்லிசை நிகழ்வில் பாடப்படுவதும், வாய்மொழி வடிவில் இருப்பதுமான தெய்வங்களின் கதைகள் பெருமாள் சாமி காவியத்துடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்புடையவை என்பதை மறுக்க முடியாது. இவற்றின் வழி சில விஷயங்களை ஊகிக்க முடியும்.

நாட்டார் மரபில் வைணவத் தாக்கம் முழுதும் இல்லை என்ற முந்தைய கருத்தாக்கத்திற்கு எதிரான சான்றுகள் உள்ளன. நாட்டார் தெய்வங்களில் சிவன் பார்வதி தொடர்பானவை மிக அதிகம்; என்றாலும் பெருமாளும் நாட்டார் தெய்வமாக இருக்கிறார்.

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஸ்ரீரங்கம் அல்லது காஞ்சிபுரத்திலிருந்து குடிப்பெயர்ச்சி நடந்திருக்கிறது. இப்படி வந்தது தொடர்பான திருமழிசை ஆழ்வாரின் கதையை மூலமாக வைத்து ஒரு கதைப் பாடல் உருவாகியிருக்கிறது. பெருமாள் சாமி காவியம் என்னும் இக்கதைப் பாடல் வேறு பல கிளைக்கதைகள் உருவாகவும் காரணமாயிருக்கிறது.

திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவில் உருவானதற்காகச் சொல்லப்படும் கதைகளில் ஸ்ரீரங்கம் குடிப்பெயர்ச்சி கதை முக்கியமானது. அதோடு நாட்டார் மரபின் தாக்கத்துடனேயே அனந்தன் காட்டு பத்மநாபன் உருவாயிருக்கிறான் என்று சொல்லும் அளவுக்கு கதைகள் வழக்கில் உள்ளது.


திருவனந்தபுரம் கோவில் உருவான கதைகளில் புலையர் சாதியினருக்கும் பங்குண்டு. ஸ்ரீரங்கத்திலிருந்து குடிபெயர்ந்த பெருமாள் முதலில் அனந்தன் காட்டில் புலையர் தம்பதிகளைத்தான் சந்திக்கிறான். புலையர் வாழும் குடியிருப்பில்தான் பெருமாளுக்கு வழிபாடு நடந்திருக்கிறது. அப்போது பூசை செய்த நம்பூதிரி புலைப்பெண்ணை விரும்பியதால் கொலைப்பட்டார் என்ற ஒரு கதை உண்டு


தென்மாவட்டங்களில் வைணவத் தாக்கம் உடைய கண்ணன் ஆட்டம், கிருஷ்ணனாட்டம், தாதராட்டம், தோல் பாவைக் கூத்து எனச் சில நாட்டார் கலைகளும், பெருமாள் சாமி காவியம், கோவிலூட்டம்மன் கதை, அயோத்தி கதை, இரண்யசம்ஹாரம், குகலவர்சாமி கதை என அச்சில் வந்த கதைகளும், இடைகரை புலை மாடசாமி கதை, பிணமாலை ஆடும் பெருமாள் கதை, கோமாண்டி கதை எனச் சில வாய்மொழிக் கதைகளும் உள்ளன. தோல்பாவைக் கூத்து ஆந்திர ராமாயணச் செல்வாக்குடையது.


●


கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர், நாட்டார் வழக்காற்றியல் மற்றும் சமூகப் பண்பாட்டு ஆய்வாளர்.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் இம்மாத வெளியீடுகள்



கட்டுரை



# தமிழ் – பிராகிருத மொழிகளில் புறப் பாடல்கள் ஒப்பீடு

ஆ. கார்த்திகேயன்

ஏமசந்திரர் எழுதிய அபபிரம்ச பிராகிருத இலக்கணத்தில் புறப்பாடல்கள் சில காணப்படுகின்றன. புறப்பாட்டுக்களில் பெரும்பான்மை போர் குறித்த செய்திகளாகவே உள்ளன. போர் விருப்பம் மிக்க வீரர்களையும் மன்னர்களுக்காகப் போரிடும் வீரர்களையும் களத்தில் புறமுதுகிடுதல் இழிவெனக் கருதும் மறவர்களையும் இப்பாடல்களில் காணமுடிகிறது. வீரயுகப் பாடல்களுக்கு உள்ள பண்புகளை இப்பாடல்களிலும் பார்க்கலாம். சமஸ்கிருத காவியங்களில் வரும் வீரர் *(Heros)* இயற்கை இகந்த பண்புகள் கொண்டவர்கள். கடவுளர்களின் துணையோடு போர் புரிகின்றவர்கள். அவர்களின் வலிமையும் போர்க்கருவிகளும் மனித ஆற்றலைக் கடந்த ஆற்றல் பெற்றவை. இத்தகைய கடவுள் தன்மை வாய்ந்த வீரர்களைப் பிராகிருத பாடல்களில் காணமுடியவில்லை. இதற்கு மாறாக,

‘இதோ, குதிரைகள்’ இதோ போர்க்களம், இதோ கூர்மையான வாள்கள்; இங்கேதான் புறமுதுகு காட்டாத வீரனின் மறம் சோதிக்கப்படுகிறது (பக்கம் 52) என்று உண்மையான போர்க்களம் காட்சிப் படுத்தப்படுகிறது. "பகைவர் எண்ணிக்கை அதிகம் இருந்தால் என்ன? வானத்திலா சென்று ஒளிந்து கொள்ள முடியும்? இரு கைகள் உள்ளனவே, அவற்றால் பகைவரை அழித்து நாமும் மடிவோம்" என வஞ்சினம் உரைக்கும் வீர மறவர்களைக் காணமுடிகிறது. அவ்வகையில் இவை சங்கப் புறப் பாடல்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. அத்தகைய தொடர்புகள் சிலவற்றைச் சுட்டிக்காட்டும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

### எருதே இளைய நுகம் உணராவே

வீரம் செறிந்த ஆண் மக்களோடு காளைகளை ஒப்பிடுவது தமிழர் மரபு. வாளேந்தி யானையை எதிர்த்துக் களத்தில் போரிட்டு வெற்றி பெற்று மீளுதல் (ஆண் மகனாகிய) காளைக்குக் கடமை என்று பொன்முடியார் இயற்றிய புறநானூற்றுப் பாடலால் அறிந்து கொள்ள முடிகிறது. வீரர்களைக் காளைகளாக உருவகிக்கின்ற பாடல்கள் வடமொழி இலக்கியங்களில் இருக்கலாம்.

ஒன்றிரண்டு அபபிரம்சா பிராகிருதப் பாடல்களில் அன்யோக்தியாக (அன்ய உத்தி) காளைகளை வீரர்களுக்கு ஒப்பிட்டிருப்பதைப் பார்க்க முடிகிறது. ஒரு பாடல் பின் வருமாறு அமைந்துள்ளது. "ஓ எருதே! நீ நுகத்தைத் தாங்கிக்கொள். வலிமையற்ற இக் காளைகளால் நாங்கள் ஊக்கமிழந்துள்ளோம். நீயின்றி இச்சுமையை எப்பொழுதும் இழுக்க முடியாது. (அதனைச் செய்யாமல்) ஏன் கவலைப் படுகிறாய்.

ஒரு படைத்தலைவனை அல்லது மன்னனை நோக்கிப் பாடுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. தலைவன் இல்லாமல் போர்க்களத்தில் வெற்றி இல்லை என்ற பொருள்படப் பாடல் உள்ளது. இன்னொரு பாடல் - இதுவும் அபபிரம்ச பிராகிருதப் பாடல் தான். "தலைவனின் பெருஞ்சுமையைப் பார்த்து எருது பெரிதும் துன்புற்றது. தன்னை இரு கூறுகளாகப் பிளந்து சகடத்தின் இரு பக்கங்களிலும் பிணைக்கக் கூடாதா? என்று நினைத்தது" இப்பாடலும் அன்யோக்தியாகப் பகைவர் பலரால் சூழப்பட்ட நம்பிக்கைக்குரிய வீரன் தன்னையே நொந்து கொள்வதாகப் பொருள் உணர்த்துகிறது. தான் ஒருவனாக நின்று பகைவரின் படைகளை எதிர்த்துப் போரிட இயலாமைக்கு வருந்துகிறான். தலைவனை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் அல்லது அவனை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற நம்பிக்கை சுடர்விடுவதை வீரனின் கூற்றில் காணமுடிகிறது. மேற்கண்ட பாடல்களின் கருத்தினை ஒரு புறநானூற்றுப் பாடலோடு ஒப்பிட்டுக் காணலாம்.

"எருதே இளைய நுகமுணராவே
சகடம் பண்டம் பெரிதுபெய் தன்றே
அவல் இழியினும் மிசை ஏறினும்
அவணது அறியுநர்யாரென உமணர்
கீழ்மரத்து யாத்த சேம அச்சன்ன
இசைவிளங்கு கவிகை நெடியோய்"

இச்செய்யுள் அதியமான் நெடுமானஞ்சியின் மகனான பொகுட்டெழினியை ஔவையார் பாடியது. அவனது வீரச் சிறப்பையும் தம் படைவீரர்களை ஊக்கப்படுத்தித் தலைமையேற்று போர் நடத்தும் பாங்கினையும் சுட்டுகிறது, எருதுகள் இளையவை;

இதுநாள்வரை நுகத்தில் பூட்டப் படாதவை ஆனாலோ வண்டியில் பண்டம் மிகுதியாக ஏற்றப்பட்டிருக்கிறது. பள்ளத்தில் இறங்கும் போதும் மேட்டில் ஏறும்போதும் அவ்விடத்தில் எத்தகைய இடையூறு ஏற்படுமோ என்பது தெரியாது. அவ்வாறு இடையூறு ஏற்படுங்கால் உப்பு விற்கும் வணிகர் வண்டியைக் காப்பாற்ற கூடுதலாகச் சேம அச்சு ஒன்று வைத்திருப்பர். அது வண்டியைக் காக்கும் அத்தகைய சேம அச்சுக்கு இணையானவன் பொகுட்டெழினி என்று பொருள் அமைந்துள்ளது. இதற்கு இப்படி ஒரு குறிப்பு பொருளும் கொள்ள முடியும். இது வரை போர்க்களமே கண்டிராத இளைய வீரர்கள் பெரும்படையை எதிர் கொள்கிற நேரத்திலும் துன்புற்ற நேரத்திலும் சேம் அச்சு போல தான் முன்னின்று துணை நிற்பான் என்ற பொருளையும் காணலாம். அப்பிரம்சா பிராகிருதப் பாடல்களில் உள்ளது போல் புறநானூற்றுப் பாடல்களிலும் குறிப்புப் பொருள் இருப்பதை உணரமுடிகிறது.

### தன் தோழற்கு வருமே

இன்னோரு அபபிரம்சா பாடலில் போர்க்களக் காட்சி பின்வருமாறு வர்ணிக்கப் படுகிறது "சரிந்த குடல்கள் கால்களைத் தளைத்திருந்தன. வெட்டுண்ட தலை தன் தோள் மீது சாய்ந்து வீழ்ந்து கிடந்தது. இந்நிலையிலும் கைகளில் வாளினை இறுக்கமாய்ப் பற்றிக்கொண்டு தலைவனின் இன்னுயிரைக் காப்பாற்ற போர்க்களத்தில் முன்னேறுகிறான் போர் மறவன்" இந்தச் சாயலில் புறநானூற்றுப் பாடல் ஒன்று காணப்படுகிறது. "சினங் கொண்ட பகைவர் செறிவாகச் சூழ்ந்த அவர்தம் பின்னணிப் படையைப் பிளந்து கொண்டு அவர் அஞ்சியலறிச் சிதையுமாறு ஒரு வீரன் தனது கூர்மையான வேலைப் படைமுகம் நோக்கி ஏந்தி முன்னேறுகிறான். இவ்விடத்தே இவனைத் தடுத்து நிறுத்துங்கள் தடுத்து நிறுத்துங்கள் என்று ஏனைய மறவர்கள் கூறவும் அவர் தடையைக் கடந்து வீரன் செல்கிறான். கொலையுண்டு வீழ்ந்த மறவர்களின் குடல் தன் காலைத் தளைக்கவும் தன் கன்றை நேசிக்கும் கறவை பசுவைப் போல தன் தோழனைக் காப்பாற்ற விரைந்தான் (புறம் 275). உயிரைத் துச்சமெனக் கருதிப் பகைவர்க்கும் உயிர்க்கும் அஞ்சாது போரிடும் துணிவைக் காண்கிறோம். மேலும் போர்க்களத்தில் வெட்டுண்ட வீரர்களின் குடல் சரிந்து கால்களைப் பிணிக்கும் காட்சியை இருமொழிப் பாடல்களிலும் காணமுடிகிறது. வஞ்சித் திணையின் துறைகளுள் ஒன்று 'பேராண் பக்கம்' என்பதாகும். பகைவர் படையை ஒரு பொருட்டாகக் கருதாமல் போரிடும் வீரர்களின் ஆண்மையை விளக்குதல் என்பது இதற்குப் பொருள்.

### வாளும் வேலும்

வாளும் வேலும் வில்லும் தமிழர் பயன்படுத்திய போர்க் கருவிகளாகும். தொல்காப்பியப் புறத்திணை-யியல் சூத்திரங்களில் இக்கருவிகளைக் குறித்த செய்திகளும் பயன்பாடும் அறியப்படுகின்றன. பகைவரைக் கொல்லுவதற்குக் காரணமாக விளங்கும் வாளினைப் போற்றுதல் வாள் மங்கலம் எனப்படும். இது பாடாண் திணையின் துறைகளில் ஒன்று. வேலின் சிறப்பைக் கூறலும் இத்திணையின் துறைகளுள் ஒன்று. வாகைத்திணையில் வேலினது வென்றி என்றொரு துறை உண்டு. அஃது பகைவரை வெல்லக் காரணமாக இருந்த வேலினைப் புகழ்தல் ஆகும். ஒள் வாள் வீசிய

நூழில், இங்கு ஒள் வாள் வீசுதல் போரிடுதலைக் குறிக்கும் வாள் வாய்க் கவிழ்தல் என்ற பெயரிலும் வாள் வன்மை குறிப்பிடப் படுகிறது. "கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்" என்ற சூத்திரத்தில் படைக்கருவிகளின் பெயர்கள் வழங்கப்படுகின்றன. சங்கப் பாடல்களில் சொல்லவே வேண்டாம். பல பாடல்களில் போரக்கருவிகளின் பெயர்கள் திரும்பத்திரும்ப வந்துள்ளன. தெறுவர இருபாற் படுக்கும் நின்வாள் (புறம் -50) என்ற பாடல் வரி இருகூறாக்கும் உன்னுடைய வாள் என்ற பொருளில் வருகிறது. கூரிய நுனையையுடைய வேலும் மின் போல விட்டு விளங்கும் (புறம் -42:4) என்றும் வருகிறது. போர் வீரர்களின் உடலில் அம்பு தைக்கப்பட்டிருந்தன. அக்காட்சி மடல் சேர்ந்த பனை போன்றும் ஆரம் சேர்ந்த வண்டிக்குறடு போன்றும் இருந்ததாம். (அதட்சிணாமூர்த்தி, 2016:238) சில அபபிரம்சா பாடல்கள் போரில் வாளின் சிறப்பையும் வேலின் பயன்பாட்டையும் உணர்த்துகின்றன. ஒரு பாடல், "ஓ, பிரியமானவரே வேலினைக் கரத்தில் ஏந்திக் கொள்ளுங்கள்; வாளினைக் கைவிட்டு விடுங்கள் அப்படியாயினும் உடையாத மண்டைவோடு (யாசிப்பதற்கு பரதேசிகளுக்குக் கிடைத்துவிட்டுப் போகட்டும்" இவ்வரிகள் வீரரின் வாள் வீச்சு பகைவரின் மண்டையைப் பிளந்து விடக்கூடும் என்று அவரைப் புகழ்ந்து (panegyrises) விவரிக்கிறது என்பர். இன்னொரு தலைவி தன் தலைவனின் வாள் வலிமையைப் பின் வருமாறு நயம்பட விவரிக்கிறாள். "என் தலைவனிடம் இரு குறைகளே உள்ளன. என்னிடம் பொய் சொல்லாதீர்கள்! அவர் கொடையளிக்கும் போது நான் மட்டுமே எஞ்சி இருப்பேன்; போரிடும் போது கைகளில் வாள் மட்டுமே எஞ்சி இருக்கும். "வீரனின் வலிமை வெளிப்படுத்தப்படுவதை இங்கு கவனிக்கலாம். வாள் வலிமை குறித்துத் தலைவி கூற்றாக வரும் மற்றொரு பாடல், "தம் படை புறமுதுகிடுவதையும் எதிரியின் படை முன்னேறுவதையும் கண்ணுற்ற என் காதலனின் போர்வாள் பிறைமதியைப் போல ஒளிவிட்டு சுழல்கிறது" என்று பெருமிதம் கொள்கிறாள். இவ்வாறு வாள் முதலிய போர்க் கருவிகளின் வருணனை இருமொழிப் பாடல்களிலும் காணப்படுகின்றன.

**போரெனிற் புகலும் மறவர்**

சங்ககாலத்தில் வாழ்ந்த மக்கள் போர் புரிதலை விரும்பினார்கள் போர்குணம் மிக்கவர்களாக விளங்கினர். மன்னர்களும் இதற்கு விதிவிலக்கன்று. நீர் மிகுந்தால் அதனைத் தாங்கும் அரணும் இல்லை. நெருப்பு மிகுந்தால் உயிர்களைப் பாதுகாக்கும் நிழல் செய்யும் நிழலுமில்லை. காற்று மிகுந்தால் அதனைப் பொறுக்கும் வலிமையுமில்லை. அவற்றை யொத்த சினம் பொருந்திய போரையுடையவன் வழுதி! (புறம்-51:1-4) மேற்கண்ட பாடல் பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதியை ஐயூர் முடவனார் பாடியது. வழுதி எப்பொழுதும் சினம் பொருந்திய போரையுடையவன் என்பது குறிப்பிடத்தக்கது. கோவூர்கிழார் சோழன் நலங்கிள்ளியைக் குறித்துப் பாடிய பாடலில் (புறம் -31) அவ்வரசன் வெல்லும் போரினைச் செய்யும் பாடிவீட்டின் கண்ணே இருக்க விரும்புவான் என்று கூறுவார். அவனது மறவர்கள் வீரக் கழல் அணிந்தவர்கள். போர் என்று கேட்டாலே விரும்பும் பண்புடையவர் போர் செய்யச் செல்கின்ற நாடு நனி தொலைவில் இருந்தாலும் போகமாட்டேம் என்று கருதார். அப்பாடல் வரிகள் வருமாறு:

"நல்லிசை வேட்டம் வேண்டி வெல்போர்ப் பாசறை
அல்லது நீயொல் லாயே

போரெனிற் புகலும் புனைகழல் மறவர்
காடிடைக் கடந்த நாடுநனி சேய்
செல்வேம் அல்லேம் என்னார்

புறம் - 31) போர் செய்து புகழ் பெறுதலை (நல்லிசை வேட்டம்) விரும்பினார்கள். புதிதாக மணம் செய்த ஆடவன் நெடுந்தொலைவிலுள்ள எல்லையைக் பாதுகாக்க அரசனிட்ட ஆணையைப் பரிசாக ஏற்றுக் கொள்கிறான் மனைவியின் பிரிவைக் குறித்து கவலைப் படவில்லை. இது பிராகிருதப் பாடல்

**போரும் பொருள் ஈட்டலும்**

அவ்வாறு போரிடுதல் நாட்டைக் கைப்பற்றவும், பொன்னாலான அணிகலன்களைக் கொள்ளையடிக்கவுமே ஆகும். "மாற்றாரின் மண்ணைக் கவர்தலும் அவர் செல்வத்தைக் கொள்ளையிடுதலும் அக்காலப் போரின் நோக்கங்களாக விளங்கின." எனவே புலவர் பெருமக்கள் பிறர்மண் உண்ணும் செம்மல் என்று மன்னர்களைப் பாராட்டினர் (அ.தட்சிணாமூர்த்தி,2016:229). சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் புலவர்க்குக் கொடுத்தற் பொருட்டு தன்னோடு மாறுபட்ட இரு வேந்தர்களின் நிலத்தை நோக்கினான். அவனுடைய நாடு பெரும் வீரத்தினால் புது வருவாயை உடையதாய் விளங்கிற்று. (பெருவிறல் யாணர்த்தாகி). அவன் பரிகாரமில்லாத கணிச்சி என்னும் ஆயுதத்தைச் சுழற்றி உயிர் வருத்தும் கூற்றம் போன்றவன். (புறம் -42) கிள்ளிவளவன் பகைவர்களது அரண்மனையை அழித்து அவர்களையும் கொன்று மகுடமாகச் செய்யப்பட்ட பசும்பொன்னால் தனது அடி பொலிய வீரக் கழல் செய்து புனைந்து கொண்டான்.

"நீயே பிறர் ஓம்புறுமறமன் னெயில்
ஓம்பாது கடந்தட்டவர்
முடிபுனைந்த பசும்பொன்னின்
அடிபொலி கழல் தைஇ வல்லாலனை

(புறம் –40)

பகைவர் நாட்டைச் சூறையாடுதல் போர் தொடுத்தலின் நோக்கங்களுள் ஒன்று.

அபபிரம்சா பாடல்களில் சில எடுத்துக்காட்டுகள்: "வாளின் துணையால் எங்குப் பெருஞ்செல்வம் ஈட்டமுடியுமோ, ஓ.பிரியமானவளே! அந்நாட்டிற்குக் குடியேறி விடுவோம் போர்கள் இன்றி வறுமையுற்றோம். அவையின்றி செல்வமும் வளமுமில்லை." (பக்கம் - 89). "ஊழ் நம்மை அலைக்கழிக்கலாம். கோள்கள் நம்மை இன்னலுக்கு உள்ளாக்கலாம். ஓ, பிரியமானவளே! மனம் தளர்ந்து விடாதே தகுந்த போர் வரும் வேளையில்

செல்வத்தை ஒரு விலை மாதைப் போல ஈட்டுவேன் (பக்கம் -88). செல்வம் ஈட்ட விழையும் (desire for wealth) ஒரு மறவன் தன் தலைவியை ஆற்றுவதாகப் பாடல் அமைந்துள்ளது. தலைவனின் போர் வேட்கையும் வெளிப்படுகிறது.

**கூற்று வெகுண்டன்ன வீரம்**

மறம் என்ற சொல்லுக்குச் சீற்றம், சினம் என்றெல்லாம் பொருள் உண்டு. கூற்றுவனின் சீற்றத்துக்கு வீரர்களின் சினம் ஒப்பிடப்படுவதை இருமொழி மரபிலும் காணமுடிகிறது.

> **"நீயே மருந்தில் கணிச்சி வருந்த வட்டித்துக்**
> **கூற்றுவெகுண்டன்ன முன்பொடு**
> **மாற்றிரு வேந்தர் மண்ணோக் கினையே"**

இப்புறநானூற்று வரிகளில் கணிச்சி எனும் படைகலனால் உயிர்களைப் பிணிக்கும் சினமிக்க எமனோடு வேந்தன் ஒப்பிடப்படுகிறான். வேறொரு அபபிரம்சா பாடலில், நீயும் நானும் இணைந்து களம் புகுந்தால் யார் வெற்றியைப் பெறமுடியும் எமனுடைய தலைவியின் கூந்தலைப் பற்றி இழுத்தவன் நிம்மதியாக எப்படி இருக்கமுடியும்? என்று வருகிறது. இங்கும் தமிழ்ப் பாடலில் வருவது போல் கூற்றுவனின் சீற்றம் வீரர்களுக்கு விசேடித்து வந்துள்ளது. வீரயுகப் பாடல்கள் சினத்தை (Wrath) வெளிப்படுத்தும் தன்மையின.

**களிரோடு போரிடல்**

யானைகளை எதிர்த்து அஞ்சாமல் போரிடுவது வீழ்த்துவது அதனாலே மடிவதும் ஆகிய செய்திகள் பழந்தமிழ் இலக்கியங்களில் ஏராளம் உள்ளன. பொன்னால் செய்யப்பட்ட முகப்பட்டம் அணிந்த பெருமை பொருந்திய களிறு தன் கூரிய தந்தத்தால் குத்தினாலும் அஞ்சி புறங்காட்டி ஓடாத பீடுடைய மறவர்களாய் இருந்தனர். (புறம்-287) அபபிரம்சா பாடலில் ஒரு தலைவி தன் தலைவனின் வீரம் குறித்துப் பின் வருமாறு கூறுகிறாள். "என் தலைவனின் வீரத்தைச் சிங்கத்தோடு ஒப்பிடுவதை நான் இகழ்வாகக் கருதுகிறேன். ஏனெனில் சிங்கம் காட்டில் திரியும் (பாதுகாப்பற்ற) யானைகளைக் கொல்கிறது ஆனால் என் காதலன் வீரர்கள் சூழ வரும் யானைகளை மாய்க்கிறான்" (அப்பிரம்சா இலக்கணம் பக்:115) சிங்கத்தை ஒத்த வலிமையுடையவன் என்பதைத் தன் மானத்திற்கு இழுக்காகக் கொள்கிறாள். இன்னொரு தலைவி, "நூறு களங்களில் போர் செய்து புகழ் பெற்ற தன் காதலன் அங்குசத்தால் அடக்கமுடியாத மதம் பிடித்த யானையை எதிர்த்துப் போரிடுவதைப் பாருங்கள் (பக்கம்-62) என்று பெருமையுடன் கூறுகிறாள். மற்றொரு அப்பிரம்ச பாடல், "அன்னையே எனது மார்பகங்கள் தலைவனை நோக்க தலைவனோ களத்தில் யானைகளை எதிர்த்து மத்தகத்தைப் பிளந்து கொண்டு இருக்கிறான்" (பக்கம்-97). என்று தலைவி கூறுகிறாள். களிறு எறிந்து போர் புரியும் திறத்தை இரு மரபுகளிலும் காண்கிறோம்.

**முடிவுரை**

மேற்கண்ட பிராகிருதப் பாடல்களைக் கவனித்தால் அவை நாடகப் பாங்கில் அமைந்து தனிக்கூற்றாக (dramatic monologue) விளங்குவதைக் காணலாம். கதை மாந்தர்கள் தனக்குள்ளேயோ பிறர் கேட்கப் பேசுவதைப் போலவோ கூற்றுகள் அமைந்துள்ளன. சங்க இலக்கியப் பாக்களிலும் நாடகப் பாங்கு அமைந்துள்ளதனைப் பலரும் குறிப்பிட்டுள்ளனர். (தெ.பொ.மீனாட்சி சுந்தரன், 1976; பக் 7) பிராகிருதப் பாடல்களில் மன்னர்களைப் குறித்த செய்திகள் வருகின்றன. ஆனால் மன்னர் பெயர்கள் ஏதும் பார்க்க முடியவில்லை.

தமிழ் புறப்பாடல்கள் போல வரலாற்றுச் செய்திகள் இல்லை. சங்ககாலப் பாடல்கள் வீரயுக காலத்தைச் சார்ந்தவை என்று பேரா வையாபுரி பிள்ளை, கலாநிதி கைலாசபதி போன்றோர் சுட்டிக்காட்டி ஆய்வுகள் செய்துள்ளனர். போர் செய்து புகழ் பெறுதல், போர் விருப்பம், செல்வம் ஈட்டவும் பிறர் நாட்டை அடிமைப்படுத்தவும் போர் செய்தல் உயிரைச் துச்சமாக மதித்தல், மன்னனுக்காகப் போர் புரிதல் மறக்குடி மாண்பு இவை யாவும் வீரயுகத்திற்கான பண்புகள் ஆகும். இப் பண்புகள் மேற்கண்ட அப்பிரம்சா பிராகிருதப் பாடல்களிலும் இருப்பதைக் காணலாம். ஆனால் இப்பாடல்கள் நாட்டுப்புறங்களில் இருந்து சேகரிக்கப்பட்டு இலக்கண மேற்கோள்களாகக் காணப்படுபவை. மக்கள் மொழிக்கு எழுதப்பட்ட இலக்கணத்தில் காணப்படுபவை. மேற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த இந்தோ -ஆரிய மக்கள், குறிப்பாக அடித்தட்டில் வாழ்ந்த மக்கள், திராவிட மொழிகளைத்தான் ஒரு காலத்தில் பேசினார்கள் என்று கருத்துரைக்கப் படுகிறது.

பின்னரே இந்தோ-ஆரிய மொழிகளுக்கு மாறினார்கள் (காண்க. வ. ஐ. சுப்பிரமணியம், 2007;பக் 50). அவ்வாறெனில் தமிழ் புறப் பாடல்கள் தமிழ்ப் பாணர்களால் வடமொழிக்குள் ஊடுருவிச் சென்றிருக்கலாம்.

**10) துணை நூல்கள்**


1. சுப்ரமணியம், வ.அய். (2007). மொழியும் பண்பாடும் (தொகுதி ஒன்று), தொகுப்பு ஜெயா அரிகரன், அடையாளம் வெளியீடு, புத்தாநத்தம், திருச்சி மாவட்டம்
2. தட்சிணாமூர்த்தி, அ.(2016) சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிலிமிடெட் சென்னை -98
3. வையாபுரிப்பிள்ளை, எஸ்.(2019) தமிழ் இலக்கிய சரிதத்தில் காவியகாலம் அலைகள் வெளியீட்டகம், சென்னை -89(மறுபதிப்பு)
4. *Apabhramsa of Hemacadra (1982). Prakrit Text Book Society, Ahmedabad-9.*
5. *Kailasapathy, K.(1968). Tamil Heroic Poetry Kumaran Book House, Colombo(Reprint).*
6. *Meenakshisundaram, T.P. (1974). Tamil-A Birds Eye View. Makkal Nalvaalvu Manram, Madurai.*




கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர்.


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





₹ 400




₹ 200




₹ 55




₹ 250

# மனிதகுல வரலாற்றின் நீண்ட பயணம்




ப.கு.ராஜன்

Early Indians - Tony Josoph அவர்களால் எழுதப்பட்டது. அது ஒரு பத்திரிகையாளரால், Concerned Citizen - நாட்டில் நடந்து கொண்டிருக்கும் பல்வேறு நிகழ்வுப் போக்குகள் குறித்து அக்கறை கொண்ட ஒரு குடிமகன் என்ற வகையில் எழுதப்பட்டது. அது இந்தியாவில் தமிழகத்தில் உள்ள பத்திரிகை, பதிப்பு சூழல் ஆகியவற்றின் வரம்பிற்கு உட்பட்டு அதற்கேற்றவாறு, அறிவியலை தங்கள் பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகங்களில் கற்றுக் கொள்ளாதவர்களும் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் சுவையாகவும் எளிமையாகவும், சிறப்பாக எழுதப்பட்ட நூல்தான். ஆனால், Who We are and How We Got Here - நாம் யார்? நாம் எவ்வாறு இங்கு வந்து சேர்ந்தோம்? என்ற இந்த நூல் மரபணு நிபுணர் ஒருவரால் எழுதப்பட்டது.

டேவிட் ரீச் அமெரிக்காவில் ஹார்வர்ட் மருத்துவப் பள்ளியிலும் எம்.ஐ.டியின் ப்ராட் கல்விக் கழகத்திலும் பணிபுரியும் ஒரு யூதர். அதை சற்றுப் பிறகு பார்ப்போம். அவர் அமெரிக்காவில் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் இயற்பியல் துறையில் கல்வி கற்க ஆரம்பித்தார். பின் உயிரியலுக்கு பாதை மாறி பட்டமேற்படிப்பை முடித்தார். பின் இங்கிலாந்தில் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் உயிரியலில் டாக்டர் பட்டம் பெற்றார். பின்னர் மரபணுவைக் கொண்டு, அதாவது இன்றைக்கு வாழும் மனிதர்களின் மரபணு மாதிரிகளைக் கொண்டு மனிதகுலத்தின் வரலாற்றைக் கட்டியமைக்கும் மக்கள்தொகை மரபணுவியல் *(Population Genetics)* எனும் துறையில் பணிபுரிபவராக வந்து சேர்ந்தார். அது மிக சமீபத்தில்தான் உருவான ஒரு நவீன அறிவியல் புலம். 1994 ஆம் ஆண்டு *The History & Geography of Human Genes* - மானுட மரபணுவின் வரலாறும் புவியியலும் என்ற நூலை இத்தாலிய மருத்துவரும், பின்னாளில் தனது மருத்துவப் பணிகளையெல்லாம் விட்டுவிட்டு மனிதகுல வரலாற்றை மரபணு அடிப்படையில் கட்டியமைக்கும் பணியை முழுநேரமும் செய்தவருமான லூயி லுக்கா காவேலி ஸ்ஃபோர்ஸா எழுதி வெளியிட்டார். ‘மக்கள் தொகை மரபணுவியல்’ (Population Human Genetics) எனும் புதிய அறிவியல் புலமே அதிலிருந்துதான் தொடங்கியது.

ரஷ்ய இலக்கியத்தின் மஹா ஆளுமைகளான டால்ஸ்டாய், தஸ்தாயேவ்ஸ்கி, செக்காவ், துர்க்கனேவ், புஸ்கின், மக்ஸீம் கார்க்கி ஆகிய எல்லோருக்கும் நிக்கோலாய் கோகல்தான் முன்னோடி. அவரது மேலங்கி-கோட் - எனும் சிறுகதைதான் பின்னர் வந்த மரணமற்ற ரஷ்ய இலக்கியங்களுக்கு எல்லாம் முன்னோடி. எனவே ரஷ்ய இலக்கிய மேதைகள்

எல்லாம் கோகலின் கோட்டில் இருந்து வந்தவர்கள் எனக் கூறப்படுவது உண்டு. அதுபோல மக்கள் தொகை மரபணுவியலின் பிதாமகன் காவேலி ஸ்ஃபோர்ஸா உலகின் இந்த அறிவியல் புலத்தின் வல்லுனர் குழாம் எல்லாம் காவேலி ஸ்ஃபோர்ஸாவின் மரபணு வாரிசுகள் என்று அறியப்படுகின்றனர்.

காவேலி ஸ்ஃபோர்ஸாவின் மாணாக்கர்களில் ஒருவரான பிரையன் சைக்ஸ் ஒவ்வொரு மானுட உடலின் ஒவ்வொரு செல்லிலும் உள்ள மிட்டோகோன்றியாவின் டி.என்.ஏ அடிப்படையில் மானுட குல வரலாற்றை கட்டிஅமைத்தார். மிட்டோகோன்றியா தாயின் கருமுட்டை வழியாக அவளது குழந்தைகளை வந்து சேரும். ஆண் குழந்தைக்கு வந்து சேரும் மிட்டோகோன்றியா அவனோடு நின்று விடும். பெண் குழந்தைக்கு வந்து சேரும் மிட்டோகோன்றியா அவளது குழந்தைகளுக்கு வந்து சேரும். இப்படி தாயிடம் இருந்து மகளுக்கு, மகளிடம் இருந்து அவளது மகளுக்கு என தலைமுறை தலைமுறையாய் வந்துசேரும். இந்த மிட்டோகோன்றியாவின் டி.என்.ஏக்களை அதில் ஏற்படும் மாற்றங்களை, அடையாளங்களை ஆய்வு செய்த பிரையான் சைக்ஸ் தாயின் கொடி வழியில் மனித குல வரலாற்றைக் கட்டி அமைத்தார். அதை அந்தத் துறையில் பாண்டித்யம் பெறாத சாதாரண மக்களுக்கும் புரியும் வண்ணம் ஒரு நூலாகவும் எழுதியுள்ளார். செவென் டாட்டர்ஸ் ஆஃப் ஈவ் (Seven Daughters of Eve) என்ற அந்த நூல் தமிழில் 'ஏவாளின் ஏழு மகள்கள்' என்று வந்துள்ளது. (தமிழில் - அமலன் ஸ்டான்லி; பாரதி புத்தகாலயம்).

காவேலி ஃபோர்ஸாவின் மற்றொரு மாணக்காரான ஸ்பென்ஸர் வெல்ஸ், இதேபோல மானுட குல வரலாற்றை தந்தையின் கொடி வழியில் ஆய்வு செய்து நிறுவியுள்ளார். ஒவ்வொரு மானுட உடலின் ஒவ்வொரு செல்லிலும் 23 ஜோடி குரோமோசோம்கள் உள்ளன. இரண்டு செல்களில் மட்டும் விதிவிலக்காக 23 ஜோடி என்பதற்கு மாறாக 23 குரோமோசோம்கள் மட்டுமே இருக்கின்றன. ஒன்று பெண்ணின் கரு முட்டை; மற்றது ஆணின் விந்தணு. ஒவ்வொரு ஜோடியிலிருந்தும் ஏதேனும் ஒரு குரோமோசோம் கருமுட்டையில் இருக்கும். இரண்டில் எந்த ஒன்று பெண்ணின் உடலில் உருவாகும் என்பதற்கு வழியேதுமில்லை. முற்றிலும் எதேச்சையான நிகழ்வே. அதேபோல ஆணின் உடலில் உருவாகும் விந்தணுவிலும் ஒவ்வொரு ஜோடியிலிருந்தும் ஒரு குரோமோசோமாக 23 குரோமோசோம்கள் இருக்கும். ஆணின் விந்தணு பெண்ணின் கருமுட்டையை அடைந்து இரண்டறக் கலக்கும்போது கரு உருவாகின்றது. ஒற்றைச் செல்லாக உருவாகும் அந்தக் கருவில் எல்லா செல்களிலும்போல 23 ஜோடி குரோமோசோம்கள் இருக்கும். ஒவ்வொரு ஜோடியிலும் ஒன்று தாயின் கருமுட்டையிலிருந்து வந்தது; மற்றொன்று தந்தையின் விந்தணுவிலிருந்து வந்தது. இதில் 23 ஆவது ஜோடி குரோமோசோம்கள் பால் நிர்ணயம் செய்யும். குரோமோசோம் ஜோடியில் உள்ள இரண்டும் X வகை என்றால் உருவாகும் கரு பெண் குழந்தை. நினைவிருக்கட்டும் ஒன்று தாயிடம் இருந்து வந்தது; மற்றொன்று தந்தையிடம் இருந்து வந்தது. இரண்டில் ஒன்று X மற்றது Y என்றால் கரு ஆண் குழந்தை. இதில் X தாயிடம் இருந்தும் Y தந்தையிடம் இருந்தும் வரும். தாயின் உடலில் Y குரோமோசோம் என்பதே இல்லை. எனவே தந்தையின் விந்தணுவில் இருந்துதான் Y குரோமோசோம் வர இயலும். அது இப்படி தந்தையிடமிருந்து மகனுக்கு அவனிடமிருந்து அவனது மகனுக்கு என்று தலைமுறை தலைமுறையாய் வந்து சேரும். இந்த Y குரோமோசோம்களின் டி.என்.ஏக்களை, அதில் ஏற்படும் மாற்றங்களை, அடையாளங்களை ஆய்வு செய்த ஸ்பென்ஸர் வெல்ஸ், தந்தையின் கொடி வழியில் மானுட குல வரலாற்றைக் கட்டி அமைத்தார்.

இந்த இரண்டு வெவ்வேறு ஆய்வுகளும் வரைந்தளித்த மானுட குல வரலாறும் மானுடத்தின் உலகம் தழுவிய பரவல் வரலாறும் அதன் பயணப்பாதையும் கிட்டத்தட்ட ஒன்றாகத்தான் உள்ளது. இன்று உலகெங்கும் 5 கண்டங்களிலும் பரவி வாழ்கின்ற மானுட இனம் (ஹோமோ சேப்பியன் சேப்பியன் என்பது உயிரியல் பெயர்) ஆப்பிரிக்காவில் தான் உருவாகியது என்பதை மானுட மரபணு வரலாறு



காட்டுகிறது. அவர்கள் எப்போது ஆப்பிரிக்காவை விட்டு வெளியே வந்தார்கள்? வந்தவர்கள் எங்கே தங்கியிருந்தனர்? அங்கிருந்து அவர்கள் எப்போது கிழக்கேயும் மேற்கேயுமாய் கிளை பிரிந்து பயணித்தனர்? ஒவ்வொரு கண்டத்திற்கும் அல்லது இந்தியா, சீனா, ஐரோப்பா, அமெரிக்கப் பகுதிகளுக்கு அவர்கள் வந்து சேர்ந்த பாதை எவை? எத்தனை அலைகளில் வந்து சேர்ந்தனர் என்பதை எல்லாம் பிரையன் சைக்ஸ்ஸின் மிட்டோ கோன்றியா அடிப்படையிலான ஆய்வும், ஸ்பென்ஸர் வெல்ஸின் Y குரோமோசோம் அடிப்படையிலான ஆய்வும் எடுத்துக் கூறுகின்றன.

இந்த இரண்டு ஆய்வுகளுமே இந்தியாவிற்குள் நான்கு அலைகளாக மானுடக் கூட்டம் வந்து சேர்ந்ததைக் கூறுகின்றன. இந்தியாவிற்கு வந்த முதல் கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் ஒரு பகுதியினர் இந்தியாவின் கிழக்கே மேலும் மேலும் நகர்ந்து பயணித்து சுமார் 30 ஆயிரம் ஆண்டுகள் முன்பே ஆஸ்திரேலியாவை அடைந்து விட்டனர் என்றும் இந்த ஆய்வுகள் கூறுகின்றன.

அதேபோல ஆப்பிரிக்காவிலிருந்து வெளியே வந்த கூட்டத்திலிருந்து மேற்கே திரும்பிய பிரிவு மத்திய ஆசியாவிற்கும் துருக்கி, ஐரோப்பா ஆகிய பகுதிகளுக்கும் சென்று சேர்ந்தார்கள். இவ்வாறு ஆப்பிரிக்காவிலிருந்து கிளை பிரிந்தவர்கள் பின் மீண்டும் அலைகளாக இந்தியாவிற்குள்ளும், சீனாவிற்குள்ளும், ஐரோப்பாவிற்கும் வந்து சேர்ந்தார்கள்.

சுமார் 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே 4 அலைகளில் சீனாவிற்குள் வந்து சேர்ந்தவர்கள் மேலும் வட கிழக்கே நகர்ந்து சுமார் 15 ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு அமெரிக்க கண்டங்களின் வடமேற்கு முனையான அலாஸ்காவை வந்தடைந்தனர். பின்பு அங்கிருந்து வட அமெரிக்க, தென் அமெரிக்கக் கண்டங்களின் மேற்கு கடற்கரை ஓரமாகவே நகர்ந்து சுமார் 12 ஆயிரம் ஆண்டுகள் முன்பு தென் அமெரிக்காவின் தென் கோடி முனை வரையிலும் பரவிவிட்டனர். வேறு வார்த்தைகளில் கூறினால் சுமார் 12ஆயிரம் ஆண்டுகள் முன்பே மானுடக் கூட்டங்கள் அனைத்து கண்டங்களுக்கும் பரவிவிட்டனர் என்று இந்த மரபணு அடிப்படையிலான ஆய்வுகள் கூறுகின்றன. இந்த இடங்களில் நடந்த புதைபொருள் ஆய்வுகளும் இந்த வரலாறும் பயணப் பாதையும் சரி என்பதையே உறுதி செய்கின்றன.

இந்தியாவிற்குள் அதன் வடமேற்குப் பகுதியிலிருந்து 4 அலைகளாக மானுடக் கூட்டங்கள் இந்தியாவிற்குள் வந்து சேர்ந்தனர். இதுதவிர இந்தியாவைக் கடந்து இந்தியாவின் வடகிழக்கு மற்றும் கிழக்கு பகுதிகளுக்குச் சென்றவர்கள் இரு சிறு அலைகளாக இந்தியாவிற்குள் வந்து சேர்ந்தனர். இந்தியாவிற்கு வட மேற்கேயிருந்து இந்தியாவிற்குள் வந்த முதல் அலை ஆப்பிரிக்காவிலிருந்து வெளியே வந்தபின் ஆசிய நிலப்பரப்பின் தெற்கு கடற்கரை ஓரமாகவே வந்து இந்தியாவிற்குள் நுழைந்து இந்தியாவின் மேற்கு கடற்கரை ஓரமாக வந்து இன்றைய தமிழகத்தின் தென்பகுதியில் இன்றிலிருந்து சுமார் 60 ஆயிரம் ஆண்டு முன்பே குடியேறிவிட்டனர். இப்படி குடியேறியவர்களின் மரபணு அடையாளங்களோடு உசிலம்பட்டி பகுதியில் இருந்தவர்களில் ஒருவர் தான் விருமாண்டி. ஸ்பென்ஸர் வெல்ஸ்ஸூம் அவரோடு இணைந்து ஆய்வு நடத்திய பேராசிரியர் பிட்சப்பனும் இதனை வெளியுலகு அறியச் செய்தனர்.

இதன் பிறகு இன்றிலிருந்து சுமார் 20 ஆயிரம் ஆண்டுகள் முன்பு இரண்டாவது அலையிலும் சுமார் 8 ஆயிரம் ஆண்டுகள் முன்பு 3 ஆம் அலையிலும் மக்கள் கூட்டம் இந்தியாவிற்குள் வந்தனர். இந்த மூன்றாவது அலையில் இன்றைய இரானின் தென்பகுதியிலிருந்து வந்தவர்கள் மூலம்தான் வேளாண்மை இந்தியாவில் அறிமுகம் ஆனது.

இதன்பின் இன்றிலிருந்து சுமார் 3500 ஆண்டுகள் முன்பு மத்திய ஆசியப் பகுதியில் இருந்து ஒரு அலை இந்தியாவிற்குள் வந்தது. இந்த அலையில் வந்தவர்கள்தான் ஆரியர்கள். இந்த நான்காவது அலையில் வந்தவர்கள் பெரும்பாலும் ஆண்கள். முதல் மூன்று அலைகளில் வந்தவர்கள் எல்லாம் இரண்டறக் கலந்து, 4 ஆவது அலையில் வந்தவர்களோடு வேறுபட்ட அளவுகளில் ஒன்று கலந்து உருவானதே இன்றைய இந்திய மானுடப் பரப்பு. இதுதான் மரபணு காட்டும் இந்திய மக்கட் பரப்பின் வரலாறு. இதனையெல்லாம் தனது நூலில் விளக்கும் டேவிட் ரீச் என்ன செய்தார்?

2007 ஆம் ஆண்டு அப்போது அவர் பணியாற்றிய ஹார்வர்டு மெடிகல் ஸ்கூல் சார்பாக இந்தியாவில் ஹைதராபாத் நகரில் உள்ள செல் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையம் - சென்டர் ஃபார் செல்லுலர் அண்ட் மாலிகியூலர் பயாலஜி (Centre for Cellular and Molecular Biology - CCMB) என்ற இந்திய ஒன்றிய அரசின் கீழ்வரும் அறிவியல் ஆய்வு நிறுவனத்திற்கு ஒரு ஆய்வு முன்மொழிவை அனுப்பினார். அது அந்தமான் தீவுகளில் வாழக்கூடிய பழங்குடியினரின் மரபணு மாதிரிகளின் மீதான ஆய்வு குறித்தது. சி.சி.எம்.பி மரபணு நிபுணர்களான லால்ஜி சிங், குமாரசாமி தங்கராஜ் ஆகியோர் அந்தமான் வாழ் பழங்குடியினரின் மரபணு அடையாளங்கள் குறித்து ஓர் ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டிருந்தனர். டேவிட் ரீச் கடிதம் அந்தமான் பழங்குடிகளின் மரபணுக்களை மேற்கொண்டு ஆய்வுக்கு உட்படுத்தி அதன் மூலம் ஆப்பிரிக்காவில் இருந்து நடந்த மானுட இடம்பெயர்தலை புரிந்து கொள்வதை முன் மொழிந்தது. அது அன்றைக்கு இந்தியாவில் சாத்தியமற்ற சில ஆய்வுகளை அமெரிக்காவில், பாஸ்டனில் ஹார்வர்டில் நடத்த முன்மொழிந்திருந்தது.

"மரபணு ஆய்வுகள் எப்படி மனிதகுல வரலாற்றைக் கட்டியமைக்க முடியும் என்பதையும், அந்த அறிவியல் வளர்ந்த விதத்தையும் எளிய மொழியில் விளக்குகின்றார். டாக்டர். டேவிட் ரீச்"



லால்ஜி சிங், குமாரசாமி தங்கராஜ் உள்ளிட்ட இந்திய அறிஞர்கள் ஆய்வுப் பரப்பை விரிவுபடுத்திக்கோரினர். அதன் அடிப்படையில் ஆய்வை அந்தமான் பழங்குடிகள் பற்றியதாக மட்டும் வரம்பிடுவதாக இல்லாமல் முழு இந்தியாவிற்கும் விரிவுபடுத்தக் கூறினர். அவர்கள் இந்தியா முழுவதும் உள்ள வெவ்வேறு மக்கள் தொகுதிகள் (மொழி, மதம், பிரதேசம், சாதி, பழங்குடி என வேறுபட்டவர்கள்) 18 ஆயிரம் பேரின் மாதிரிகளை வைத்திருந்தனர். இவர்கள் 300 வெவ்வேறு மக்கள் தொகுதியைச் சேர்ந்தவர்கள்.

இதிலிருந்து 25 முற்றிலும் வேறுபட்ட குழுக்களின் மரபணு மாதிரிகளோடு குமாரசாமி தங்கராஜ் அமெரிக்கா, பாஸ்டன் ஹார்வர்டு மெடிக்கல் ஸ்கூல் சென்று அவற்றை சமர்ப்பித்தார். அவற்றில் நடந்த ஆய்வு முடிவு விவரங்களோடு டேவிட் ரீச், அவரது சகா நிக் பேட்டர்ஸன் ஆகியோர் 2008 அக்டோபர் 28 அன்று இந்தியா ஹைதராபாத், சிசிஎம்பி வந்து லால்ஜித் சிங், குமாரசாமி தங்கராஜ் ஆகியோரை சந்தித்து ஆய்வு முடிவுகளை விளக்கியுள்ளனர். ஆய்வு முடிவுகளைக் கேட்ட சிங், தங்கராஜ் குழுவினர் கொதித்துப் போய்விட்டனர். டேவிட் ரீச் வார்த்தைகளில், "…அக்டோபர் 28 கூட்டத்தில் பெரும் எதிர்ப்பை நேர்கொண்டோம். சிங், தங்கராஜ் குழுவினர் இந்த ஆய்வுத் திட்டத்தையே கைவிடுவதாக அச்சமூட்டினர்…" என்று போகிறது. என்ன காரணம்? ஆய்வு முடிவுகள் இந்திய மக்கள் பரப்பு இரண்டு மூதாதைகளின் கலப்பில் உருவானது. இரண்டு மூதாதைகளில் ஒன்று 'மேற்கு யூரேசியர்கள்' மற்றவர்கள் இந்தியாவில் அதற்கு முன்பே இருந்தவர்கள் என்பதைக் காட்டுகின்றன என்பது தான். பட்டவர்த்தனமாகக் கூறினால் இந்தியாவிற்கு வெளியில் இருந்து கடைசியாக வந்த ஆரியர்களும் அதற்கு முன்பே வந்து இங்கிருந்தவர்களும் கலந்துதான் இன்றைய இந்திய மக்கட்பரப்பு என்பதே ஆய்வு முடிவு.

ஆரியர்கள் இந்தியாவிற்கு வெளியில் இருந்து வந்தார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள இயலாத காரணத்தால் சிங், தங்கராஜ் குழுவினர் ஆய்வு முடிவுகளையே முடக்க முயன்றனர். 'மேற்கு யூரேசியர்கள்' முன்பே இந்தியாவில் இருந்து வெளியே சென்றவர்கள் என்றெல்லாம் சொல்லிப் பார்த்துள்ளனர். ஆனால் மரபணு ஆய்வு முடிவுகளில் அதுபோன்று இந்தியாவிலிருந்து மக்கள் மேற்கே குடியேறியதற்கு சான்றுகள் இல்லையென்று டேவிட் ரீச், நிக் பேட்டர்ஸன் அணி மறுத்துள்ளது. இறுதியில் ஒரு சமரசத்திற்கு வந்தனர். இந்தியாவில் இரு மூதாதை மக்கள் தொகுதிகள் இருந்தன; ஒன்று தொல் வட இந்திய (Ancient North Indian - ANI) மூதாதைகள்; மற்றொன்று தொல் தென் இந்திய (Ancient South Indian - ASI) மூதாதைகள். இந்த இரு மூதாதை மக்கள் தொகுதியினரும் கலந்துதான் இந்திய மக்கள் தொகுதி உருவானது என்று கூறி அந்த ஆய்வுக் கட்டுரையை அமெரிக்க அறிவியல் சஞ்சிகையான நேச்சர் இதழிலும் பதிப்பித்தனர். *(Nature - 461, Sep 2009).*

இது நேர்மையற்ற நடவடிக்கை என்பதை அதிகம் விளக்க வேண்டியதில்லை. தொல் வட இந்திய (ANI) மூதாதை, தொல் தென் இந்திய (ASI) மூதாதை என 'இரு' மூதாதைகள் ஏன்? அவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? எப்போது வந்தார்கள்? ஏ.என்.ஐ அடையாளங்கள் அதிகமுள்ள மக்கள் பகுதியில் இந்தோ - இரானிய (சமஸ்கிருத) மொழிகளையும், ஏ.எஸ்.ஐ அடையாளங்கள் அதிகம் உள்ளவர்கள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளைப் பேசுபவர்களாக இருப்பது எப்படி? போன்ற கேள்விகளை எழுப்பக் கூடியதும் அதற்கு பதிலில்லாததுமான ஆய்வுக் கட்டுரைதான் அனுமதிக்கப்பட்டு வெளிவந்தது.

தனது நூலில் நடந்தது அனைத்தையும் வெட்ட வெளிச்சமாக்கியுள்ள டேவிட் ரீச் இன்னும் ஒரு படி மேலே போய் ஆரியப் படைஎடுப்பு எனும் கருத்து குறித்து பொதுவாக இருக்கும் 'மறுப்பு' நிலையையும் கேள்வி கேட்கும் விதமாக இரண்டு செய்திகளைக் கூறுகின்றார்.

ஒன்று இந்திய மக்கள் தொகைப் பரப்பு ஏ.என்.ஐ, ஏ.எஸ்.ஐ ஆகிய இரண்டு மூதாதைகளால் ஆனது என்றாலும், இது Y குரோமோசோம் டிஎன்ஏ அடிப்படையில் கூறப்படுவது. அதாவது ஆணின் கொடிவழியில் கூறப்படுவது. மிட்டோகோன்றியா, டிஎன்ஏ அடிப்படையில் பார்த்தால், அதாவது தாயின் கொடிவழியில் பார்த்தால் இந்திய மக்கள் தொகைப் பரப்பு முழுவதும் ஒரு மூதாதையிடம் இருந்து வந்ததே. அதாவது 4 ஆவது அலையில் வந்த மக்கள் கூட்டம் (ஆரியர்கள்) பெரும்பாலும் ஆண்களால் ஆனது! சாதாரணமான குடியேற்றம் என்றால் இதுபோல பெண்களை விட்டுவிட்டு ஆண்கள் மட்டும் நிரந்தரமாக இடம்பெயர்ந்து குடியேறுவது எதார்த்தமில்லையே! இதைக் கேள்வி கேட்கும் டேவிட் ரீச் இரண்டு எடுத்துக்காட்டுகளைக் கூறுகின்றனர். ஒன்று ஆப்பிரிக்க அமெரிக்கர்கள் மூதாதை என்று பார்த்தால், 20% ஐரோப்பியர்கள். ஆனால் அதில் ஆண், பெண் மூதாதைகள் என பார்த்தால் 4:1 என்ற விகிதத்தில் உள்ளது. ஆப்பிரிக்க அடிமைப் பெண்களும் சுதந்திரமான ஐரோப்பிய ஆண்களும் 4 மடங்கு ஆப்பிரிக்க அடிமை ஆண்களும் சுதந்திரமான ஐரோப்பியப் பெண்களும் ஒரு மடங்கு என்பதில் வியப்பேதுமில்லை. ஆப்பிரிக்கர் அமெரிக்கா வந்து சேர்ந்தது இயல்பான குடியேற்றம் இல்லையல்லவா. அவர் காட்டும் மற்றொரு எடுத்துக்காட்டு தென்னமெரிக்காவின் கொலம்பியா நாட்டின் கலப்பினம். கலப்பினத்தில் ஐரோப்பிய, ஆண்கள், ஐரோப்பிய பெண்களின் பங்கு 50:1 என்று உள்ளது. அங்கும் ஐரோப்பியர்கள் வந்தது ஒரு சாதாரணமான குடியேற்றம் இல்லை, படையெடுப்பு என்பதை அவர் தனியே கூறவில்லை.

இது ஒருபுறம், மறுபுறத்தில் ஆரியப்படை எடுப்பிற்கு தொல்பொருள் சான்றுகள் இல்லையே என்பவர்களிடம் சொல்கிறார்: இன்றிலிருந்து 1500 - 1600 ஆண்டுகளுக்குள் ஜெர்மானிய பழங்குடிகளின் படையெடுப்பால் அன்றைய மேற்கு ரோமானியப் பேரரசு நொறுங்கிச் சரிந்தது, ஜெர்மானியப் பழங்குடியினரான விசிகோத்துகளும் வண்டல்களும் ரோம் நகரையே தீக்கரையாக்கினர். ஆனால், ரோமானிய சாம்ராஜ்யத்தின் நகரங்கள் எல்லாம் தரை மட்டம் ஆனதற்கு எந்தவித தொல்பொருள், புதைபொருள் சான்றுகளும் இல்லை. அவற்றை எல்லாம் மிகவும் விளக்கமாக சமகால வரலாற்று ஆவணங்கள் மூலமே அறிந்து கொள்கின்றோம்.

இப்படி ஆரியர்கள் இந்தியாவிற்குள் வந்ததை அறிவியல்பூர்வமாக நிறுவக்கூடிய கட்டுரையையும், ஆரியர்கள் வந்தது ஒரு சாதாரணமான குடியேற்றம் என்பதையே கேள்வி கேட்கும் ஆய்வாளரின் பெயரையும் அதற்கு நேர்மாறான தங்கள் நோக்கத்திற்குப் பயன்படுத்தினார்கள். 2009 ஆம் ஆண்டு நேச்சர் இதழில் வந்த இந்தக் கட்டுரையையும் பின் 2011 ஆம் ஆண்டு 'அமெரிக்கன் ஹியூமன் ஜெனடிக்ஸ்' இதழில் (AJHG-89, Dec 9,2011) வந்த ஒரு கட்டுரையையும் பயன்படுத்தி ஆரியன் - திராவிடன் என்ற பிரிவினையை அறிவியல் தவறென நிறுவிவிட்டது; ஆரியர் குடியேற்றம், ஆரியர் - திராவிடர் என்றெல்லாம் பேசிய இடதுசாரி வரலாற்று அறிஞர்கள், பெரியார் எல்லாம் தவறு என நிருபிக்கப்பட்டது என்றெல்லாம் கூறி அவர்கள் மீது சேறு வாரி இறைக்கப்பட்டது. இந்த கோஷ்டி கானத்தில் லால்ஜி சிங், குமாரசாமி தங்கராஜ் ஆகியோரும் கலந்து கொண்டது மிகவும் வேதனைக்குரியது.

டாக்டர் டேவிட் ரீச் தனது நூலில் இதனையெல்லாம் வெட்ட வெளிச்சம் ஆக்கியுள்ளார். ஆனால் அவர் இதனை மட்டும் எழுதவில்லை. மரபணு ஆய்வுகள் எப்படி மனிதகுல வரலாற்றைக் கட்டியமைக்க முடியும் என்பதையும், அந்த அறிவியல் வளர்ந்த விதத்தையும் எளிய மொழியில் விளக்குகின்றார். இந்திய, வர்ணம், ஜாதி ஆகிய பிரிவினைகள், ஐரோப்பிய சமூகத்தில் யூதர்கள், ஃபின்லாந்தியர் ஆகியோர் என இது போன்றோரின் மரபணு ரீதியான அடிப்படைகள் ஆகியவற்றையும் விளக்குகின்றார். மரபணு அடிப்படையிலான இந்திய வரலாறும், ஐரோப்பிய வரலாறும் காட்டும் ஒற்றுமையும் வேறுபாடுகளும் குறித்தும் சீன மரபணு வேறுபாடுகள் முற்றிலும் கலந்து நிரவிவிடப்பட்டது குறித்தெல்லாம் இவர் விவரிப்பது இந்திய, சீன, ஐரோப்பிய வரலாற்றுப் போக்குகளில் உள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொள்ள உதவும் எனப்படுகின்றது. வடதென் அமெரிக்கக் கண்டங்கள், மத்திய கிழக்கு ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, ஒசியானியா என எந்தப் பகுதியையும் அவர் விட்டுவிடவில்லை.

இன்னும் மரபணுவியலின் மருத்துவ ரீதியான பயன்பாடு, நியாண்டர்தால் இனத்திற்கும், ஹேமோசேப்பியன் சேப்பியன் இனத்திற்குமான உறவு, தொன்மையான புதை படிமங்களின் டி.என்.ஏ ஆய்வு என மனித குலத்தின் மிக நீண்ட பயணத்தின் கதையையும் அதிலுள்ள சிக்கல்கள், சிடுக்குகள் ஆகியவற்றோடு விளக்கும் நூல் இது.

இந்தியா குறித்து எழுதியுள்ளது, ஏனைய பகுதிகளின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் நம்மிடம் சற்று மறைத்துவிடும் அபாயம் உள்ளது. ஆனால், அறிவியல் கல்வி ஏதும் இல்லாத சாதாரண அளவு ஆங்கிலம் வாசிக்கத் தெரிந்தவர்களுக்கும் வாசிக்கத் தக்கதாக எழுதியுள்ளது பெரும் சாதனைதான்.

**கட்டுரையாளர், மொழிபெயர்ப்பாளர், மார்க்சிய ஆய்வாளர், 'புரட்சியில் பகுத்தறிவு' நூலின் ஆசிரியர்.**

ADVT Color

ADVT Color

ADVT Color

ADVT Color

ADVT Color

ADVT Color

ADVT Color

ADVT Color




# புறக்கணிப்பு பெற்றோர்கள்

**மருத்துவர். ப. வைத்திலிங்கம்**

இவ்வுலகில் உள்ள உயிரினங்களில் எல்லாம் மேம்பட்ட உயிரினமாகக் கருதப்படும் மனித இனத்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் பிறந்த உடனேயே தன் பெற்றோரை, குறிப்பாகத் தன் தாயைச் சிக்கெனப் பிடித்துக் கொள்கிறது. காரணம் இந்தப் பிடிமானமும், பாசப்பிணைப்பும் இல்லையென்றால் அந்தக் குழந்தையினால் இந்த உலகில் பிழைத்து, வளர்ந்து வாழ முடியாது. இது இயற்கையினால் குழந்தையின் மரபணுவில் எழுதப்பட்டுள்ள அடிப்படை உள்ளுணர்வு.

இப்படித் தாய்க்கும் சேய்க்கும் உண்டாகும் பாசப்பிணைப்பு குழந்தை பிறந்த உடனேயே வந்து விடுகிறது. குழந்தை மருத்துவர்கள் இதை *MOTHER INFANT BONDING* என்று சொல்கிறார்கள். குழந்தையும் இந்த பாசக் கயிற்றைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தன் அன்புக்கும் சிரிப்புக்கும், மழலை மொழிக்கும் குடும்பத்தில் உள்ள அனைவரையும் அடிமையாக்கிக் கொண்டு, இவ்வுலகில் பிழைத்து வளர்ந்து வாழ்ந்து விட வேண்டும் என்ற ஒரே இலக்கை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்து விடுகிறது. மனித இனத்தில் மட்டும்தான் குழந்தை வளர்ப்பில் தாயும் தந்தையும் பொறுப்பேற்று குழந்தையை வளர்த்து ஆளாக்குகிறார்கள். மற்ற விலங்கினங்களில் எல்லாம் ஆண் பொறுப்பில் இருந்து கழண்டு கொள்வார்.

குழந்தை வளர்ச்சி பற்றி ஆராயும் மனவியலாளர்களும், குழந்தை மருத்துவர்களும் இந்த பாசப்பிணைப்புக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். பாசப்பிணைப்பைப் பாதுகாப்பானதாக உணரும் குழந்தை சிறுவயதிலேயே ஒரு தேடல் உணர்வுடன் வெளி உலகை ஆராய ஆரம்பித்து அதற்குத் தகுந்தவாறு தன்னையும் மாற்றிக்கொண்டு வளர்ந்து பின்னாளில் முழுதும்

பரிணமிக்கிறது. உறுதியற்ற பாசப்பிணைப்பும் பாதுகாப்பற்ற குடும்பச் சூழலும் ஒருங்கே அமைந்துள்ள இடத்தில் வளரும் குழந்தை பெரியவனாகி இந்த சமூகத்தில் சேரும்போது அவ்வளவாக பரிணமிக்க முடிவதில்லை.

குழந்தைகளின் உடல், மன வளர்ச்சியிலும் ஆரோக்கியத்திலும் முக்கிய பங்கு வகிப்பவை அவர்கள் பெற்றோர்களிடம் இருந்து பெற்ற மரபணுக்களும், வளரும் சூழலும்தான். அதிலும் அவர்களின் ஆரம்பகால வளர்ச்சிக்கு மிக முக்கியமாக உதவுவது பெற்றோர்களால் உருவாக்கப்படும் குடும்பச் சூழலும் அங்கு நிலவும் உணர்வு பூர்வமான அணுகுமுறையும் தான்.

குழந்தை வளர்ப்பு பற்றி ஆராய்ந்த மனவியலாளர்கள் முக்கியமான இரண்டு கேள்விகளை வைத்துதான் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வளர்க்கும் விதத்தை முடிவு செய்தார்கள் என்கின்றனர். 1. குழந்தைகளிடம் பெற்றோர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள்? 2. அந்த எதிர்பார்ப்புகள் நிறைவேற குழந்தைகள் வளர்ச்சியில் அவர்களின் பங்களிப்பு என்ன?

இங்கே நாம் பார்க்கப் போவது குழந்தைகளின் வளர்ச்சியில் பங்கெடுக்காமல், அவர்களைப் புறக்கணித்து வளர்க்கும் *(NEGLECTFUL PARENTING)* முறையைக் கையாளும் பெற்றோர்களைப் பற்றிதான். இவர்கள் குழந்தைகளிடம் இருந்து பெரிதாக எதையும் எதிர்பார்க்க மாட்டார்கள். தங்கள் குழந்தைகளின் எதிர்காலம் பற்றியெல்லாம் நினைக்க நேரமில்லாதவர்கள். அதேபோல் அந்தக் குழந்தைகளின் வளர்ச்சியிலும் இவர்களின் பங்களிப்பு மிகவும் குறைவாகவே இருக்கும்.

**இவ்வகைப் பெற்றோர்கள் எப்படி இருப்பார்கள்?**

இந்த வகைப் புறக்கணிப்புப் பெற்றோர்கள் ஆரம்பத்தில் இருந்தே குழந்தை மீது அக்கறையின்றி, அரிதாக சில நேரங்களில் வெறுப்பை உமிழும் தன்மையுடன் இருக்கிறார்கள். இவர்கள் உணர்வு பூர்வமாகக் குழந்தையிடம் இருந்து விலகி இருந்தாலும். அவர்களுக்கு செய்ய வேண்டிய உணவு, உடை, இருப்பிடம் போன்ற அடிப்படைத் தேவைகளைச் செய்து கொடுத்து விடுவார்கள். ஆனால் பாசமோ வழிகாட்டுதலோ இருக்காது.

குழந்தை பிறந்ததிலிருந்தே இயற்கையிலேயே பெற்றோர்களுக்கு தன்னிச்சையாக வரும் ஆசையும் பாசமும் கூட இவர்களுக்குக் குறைவாகவோ அல்லது இல்லாமலேயே கூட இருக்கும். ஒரு சில பெற்றோர்கள் வைத்திருக்கும் இயற்கைக்கும் அறிவியலுக்கும் ஒவ்வாத நம்பிக்கைகளும் பிறக்கும் குழந்தையைப் புறக்கணிக்கக் காரணமாகி விடுகிறது. சிலருக்குக் குழந்தையே கூட அவர்களால் விரும்பப்படாத நேரத்தில், விரும்பப்படாத பாலினத்தோடு பிறந்திருக்கும். வீட்டில் குழந்தை பிறப்பு என்ற நிகழ்வு நடந்ததாகவே கருதாமல் அவர்கள் வேலையில் மூழ்கி இருப்பார்கள். பச்சிளம் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சுவதோ அல்லது அதன் சிரிப்பிலும் மழலை மொழியிலும் தன்னிலை மறந்து மகிழவோ தெரியாது.

வீட்டில் குழந்தை வளர்வதற்கான அமைதியான, பாசம் மிகுந்த சூழல் எதுவும் இருக்காது. பெரும்பாலும் இம்மாதிரி பெற்றோர்கள் அவர்கள் குழந்தையாக இருந்தபோது இவ்வாறு அலட்சியமாக வளர்க்கப்பட்டிருக்கலாம். அல்லது பெற்றோர்களே கூட மனநோயினால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கலாம். அமைதியற்று கொந்தளிப்புடன் இருக்கும் குடும்பச் சூழலில் எப்போதும் சண்டை, சச்சரவுடன் இருக்கும் நபர்களுக்கு மத்தியில் குழந்தை வளரும்போது எளிதில் அவர்களால் புறக்கணிக்கப்பட்டு விடுகிறது.

போதை, வன்முறை, வறுமை, படிப்பறிவு இல்லாமை, சமூக அமைப்பில் அவர்களின் குடும்ப நிலை, சட்ட விரோதச் செயல்களில் ஈடுபாடு முதலான காரணங்களாலும் பெற்றோர்கள் குழந்தைகளைப் புறக்கணிக்கிறார்கள். ஒரு சில பெற்றோர்களுக்கு அவர்களின் அன்றாட வாழ்க்கைப் போராட்டமே பெரிதாக இருக்கும் போது குழந்தைகளைப் பற்றி நினைக்க நேரமிருப்பதில்லை.

சமூகத்தில் மேல் மட்டத்தில் வசதி வாய்ப்புகளுடன் இருக்கும் ஒரு சிலரும் கூட அவர்களின் வேலைப்பளு, வாழ்க்கைமுறை போன்ற காரணங்களால் குழந்தைகளைக் கவனிக்க நேரமின்றி இந்த வகையில் குழந்தைகளை வளர்க்க நேரிடுகிறது. இவர்களின் மனப்பான்மையே குழந்தைகள் தங்களைத் தொந்தரவு செய்யக் கூடாது என்பதுதான். இவர்கள் மிக முக்கிய பதவி மற்றும் அதிகாரத்தில் இருப்பவர்கள். எப்போதும் உர் உர், சிடுசிடு தான். குழந்தைகள் கிட்டே வந்தாலும் கண்டு கொள்ள மாட்டார்கள், அல்லது எரிந்து விழுவார்கள். நீ எது வேண்டுமானலும் செய்து கொள். ஆனால் என் கிட்டே வராதே. எனக்கு ஆயிரம் வேலை இருக்கு என்பார்கள். இவர்களுக்கு குழந்தைகள் என்ன படிக்கிறார்கள், வீட்டுப் பாடங்கள் முடித்தார்களா, நல்ல பழக்கங்கள் உள்ளதா? நல்ல நண்பர்களுடன் இருக்கிறார்களா? என்றெல்லாம் தெரிந்து கொள்ள விருப்பம் இருக்காது.

பாதுகாப்பு, காவல் போன்ற சவாலான வாழ்க்கை முறையில் இருக்கும் பெற்றோர்களுக்கு குழந்தைகளை நல்ல முறையில் வளர்த்து ஆளாக்க ஆசை இருந்தாலும் நேரடியான பங்களிப்பு அமைவதில்லை. உயர் அதிகாரிகள், நிர்வாகப் பொறுப்பில் இருப்பவர்கள், வெளியூர், வெளிநாடுகளில் இருக்கும் பெற்றோர்கள், போன்றவர்களாலும் குழந்தைகளைக் கண்காணித்து

கண்டித்து வளர்க்க நேரமில்லை. இந்தக் குறைபாட்டை ஈடு கட்டும் விதமாக வீட்டில் இருக்கும் மற்ற குடும்ப உறுப்பினர்கள் அன்பையும், அக்கறையையும் பாசத்தையும் வெளிப்படுத்தி வளர்க்கும்போது எதிர்மறையான விளைவுகளின் வீரியம் குறைந்து விடுகிறது.

**இதனால் குழந்தைகள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள்?**

பெற்றோர்களின் பாசத்திற்காக ஏங்கிக் கிடைக்காமலே வளரும் இக்குழந்தைகள் எப்போதும் சோகத்துடன் தனிமை விரும்பிகளாக இருப்பார்கள். தங்களை யாரும் நேசிக்கவில்லை என்ற எண்ணம் இவர்களுக்கு நிறைய இருக்கும். பெற்றோர்கள் மீது இவர்களும் பாசம் இல்லாமலேயே வளருவார்கள்.

பள்ளியிலும் மன முதிர்ச்சியின்றி, தனிமை விரும்பிகளாக இருப்பார்கள். தனித்துவமும் கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கும். பள்ளியில் மற்ற மாணவர்களிடம் நட்பு முறையில் எளிதில் பழகத் தெரியாததால் அடிக்கடி வீண் வம்புகளும் சண்டைகளும் வரும். பள்ளிப் படிப்பிலும் சிறக்க மாட்டார்கள். மற்ற மாணவர்களின் கிண்டலுக்கும் கேலிக்கும் ஆளாகுவார்கள்.

வீட்டில் குழந்தைகளுக்கான எந்த வரைமுறைகளோ சட்டதிட்டங்களோ இல்லையாதலால் எல்லாமும் குழந்தைகள் விருப்பப்படிதான். இம்மாதிரி வளரும் குழந்தைகள் சுய கட்டுப்பாடு இல்லாது பெரும்பாலும் உணர்ச்சி வசப்பட்டு முடிவு எடுப்பவர்களாக இருப்பார்கள். அதனால் ஆபத்தான பழக்க வழக்கங்களும், சில நேரங்களில் விபத்துக்களும் எட்டிப் பார்க்கும். இளங்குற்றவாளி என்ற நிலைக்கும் ஒரு சிலர் சென்று விடுவார்கள். இவர்களின் விடலைப் பருவமும் கல்லூரி வாழ்வும் மிகவும் கவனமாகப் பயணப்பட வேண்டிய காலமாகும்.

**இதற்கு என்ன செய்யலாம்?**

1. குழந்தைகளை முற்றிலும் புறக்கணித்து அவர்களைக் கிட்டே நெருங்க விடாதபடி வாழும் பெற்றோர்கள் முதலில் மாற வேண்டும். பெற்றோர்கள் தங்கள் முக்கிய வேலையை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமாவது (ஒரு



நாளைக்கு ஒரு மணி நேரம் என்பது உங்கள் வேலையில் குறுக்கீடு என்று கருதாமல் குழந்தைகளுக்காக நீங்கள் செய்யும் முதலீடு என்று எண்ணுங்கள்.) தங்கள் குழந்தையிடம் மனப் பூர்வமாக அன்பும் அக்கறையும் தெரியும்படி பேசிப் பழக வேண்டும். குழந்தைகளின் மனப் போக்கையும் அவர்களின் ஏக்கங்களையும் தெரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். அவர்களின் பள்ளி நிகழ்வுகள், நண்பர்கள் பற்றி அக்கறையுடன் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

2. நாமும் நம் பெற்றோர்களால் விரும்பப் படுகிறோம் என்ற முழு நம்பிக்கை குழந்தைகளுக்கு வர வேண்டும். குழந்தைகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். உங்கள் குழந்தைகளின் உலகில் நீங்களும் சேர்ந்து அவர்களை ஊக்குவித்து, பிரச்சினைகளுக்கு எப்படி முடிவு எடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுக்க வேண்டும்.

3. வேலை நிமித்தம் குழந்தைகளின் வளர்ச்சியில் நேரடியாகப் பங்கேற்க முடியாமல் இருக்கும் பெற்றோர்களும் அவர்களின் குடும்பத்தில் உள்ள மற்றவர்களின் ஒத்துழைப்புடன் இதற்கு எளிதில் தீர்வு காணலாம்.

4. அமைதியற்று கொந்தளிக்கும் குடும்பச் சூழலில் வளரும் குழந்தைகள்தான் மிகவும் அதிகமாக பாதிக்கப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். முதலில் குடும்பச் சூழல் அமைதியாக்கப்பட வேண்டும். அந்தச் சூழலுக்கான காரணிகள் நீக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால் பெற்றோர்களும் வீட்டில் உள்ளவர்களும் மனநல ஆலோசகரை நாடி சிகிச்சை பெற வேண்டும். வீட்டில் இருப்பவர்களுக்கு எவருக்கேனும் மனநோய், போதை, வன்முறை போன்ற பாதிப்புகள் இருந்தால் தகுந்த மனநல மருத்துவரையும் அணுகி சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும்.


●

கட்டுரையாளர், குழந்தைகள் நல மருத்துவர்.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 275




₹ 130




₹ 460

## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!




**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

**ஜூன் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | |
|---|---|---|
| 8952 | 1109 | 4258 |
| 8953 | 1110 | 4259 |
| 8954 | 1111 | 4260 |
| 8955 | 4257 | 6092 |

தனி இதழ் ₹ 45.00
ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00.
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

சந்தாத் தொகையை
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch, Chennai - 600 050
A/c.No. 1035249018
IFSC Code : CBIN0282161
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.



கட்டுரை

# வானவில் எழுத்து:
## தமிழ் நாவல்களின் செல்நெறி

இரா.காமராசு

தமிழ் உரைநடை வளர்ச்சி வரலாற்றின் ஒரு பகுதியாகவே தமிழ் நாவல் வரலாற்றினை நோக்கவியலும். நாவலுக்கு மட்டுமின்றி எல்லா இலக்கிய வகைமைகளுக்குமே நிரந்தர வரையறைகளை உருவாக்கிவிட முடியாது. காலம், சூழல், இடம் சார்ந்து மாறுபடத்தான் செய்யும். இருப்பினும் ஓர் உலகளாவிய இலக்கிய வடிவம் என்ற வகையில் சிலவற்றை ஏற்கத்தான் வேண்டும்.

‘நாவல் என்பது உரைநடையில் அமைந்த கதை. பாத்திரங்களும் நிகழ்ச்சிகளும் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் வண்ணம் அமைந்திருக்கும்’ என்கிறது ஆக்ஸ்போர்டு அகராதி. ‘நாவல் என்பது நிலைத்து நிற்கக் கூடிய ஒரு கதை. வரலாற்று உண்மை அல்ல. ஆனால் வரலாற்று உண்மையாக இருக்கக்கூடும். இதன் நோக்கம், ஒரு சில காட்சிகள் மூலமும் உணர்வு பூர்வமான கதைப்போக்கு மூலமும் இயற்கையைப் பிரதிபலிப்பதன் மூலம் படிப்பவர்களை மகிழ்விப்பதும்தான்’ எனப் பொருள் சொன்னது என்சைக்கிளோப்பீடியா பிரிட்டானிக்கா.

“நாவல் ஒரு கலை, கைத்திறனுள்ள ஒரு தொழில். நாவலாசிரியன் ஒரு கலைஞன், கைவினைஞன். அவன் தன் பணியைக் கவனமாகச் செய்ய வேண்டியவன், தன் தொழிலுக்குரிய விதிகளை நன்கறிய வேண்டியவன். அவனுடைய நாவலில் நல்ல வேலைப்பாடு இருந்தால் மட்டும் போதாது. அவன் கவியையும் இசைவாணர்களையும் போலப் படைக்கும் திறன் வாய்ந்ததொரு கலைஞனாகவும் திகழவேண்டியவன்” என்பார் ப.கோதண்டராமன். (உலக நாவல் இலக்கியம், ப.6)

இந்தியாவில் காலனிய ஆட்சியின் உடன்விளைவுகளாகத் தோன்றிய அச்சியந்திர வரவு, ஆங்கிலக் கல்விமுறை, எழுத்தறிவு, நவீன வாழ்க்கை முறைமை ஆகியவற்றின் ஊடே முகிழ்த்ததொரு இலக்கிய வடிவமாக நாவல் அமைகிறது.

தமிழில் முதல் நாவல் (1879) தோன்றி நூற்றி நாற்பத்திரண்டு ஆண்டுகளைக் கடந்துவிட்டோம். உருவத்திலும் உள்ளடக்கத்திலும் தமிழ் நாவல் இலக்கியம் தன்னை நிலைப்படுத்திக் கொண்டு விளங்குகிறது. உலக, இந்திய நாவல் இலக்கிய வளர்ச்சிக்குச் சற்றும் குறையாத விதத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி நிலைப்பெற்று உள்ளது எனலாம்.

தமிழ் நாவல் வளர்ச்சி வரலாற்றை மூன்று கட்டங்களாகப் பகுப்பர் (இரா.காமராசு, தமிழ் நாவல் இலக்கியப் போக்குகள், பக். 7-8).

ஒன்று - நாவல்கள் பெரிய அளவிலான வாசிப்புத் தளத்தை உருவாக்கின. பொழுதுபோக்கு என்ற அளவிலேனும் வெகுமக்களைக் குறிப்பாக பெண்களைச் சென்று சேர்ந்தன. படைப்பாளி, வாசகன் என்ற இருவேறு மனநிலைகளையும் கடந்து வாசிப்புப் பரவலாக்கம் அதில் நிகழ்ந்தேறியது.

இரண்டு - நாவல்களின் வழியே நிகழ்த்தப்பட்ட உரையாடல்கள் சமூக விமரிசனமாக முகிழ்த்தமை. விடுதலைப் போராட்டம் தொடங்கி பெண்விடுதலை, வர்க்க விடுதலை, வர்ண விடுதலை, பண்பாட்டு விடுதலை... எனச் சநாதனச் சமுதாயத்தை தோலுரித்துக் காட்டியதிலும் நாவல்களுக்குப் பெரும் பங்குண்டு.

மூன்று - மாற்றுக் கருத்தாக்கங்களை முன்வைத்து, மரபார்ந்த கெட்டித்தட்டிப்போனக் கற்பிதங்களை உடைத்து, தமிழ்ச் சமூகத்தை நவீனச் சமூகமாக மறுகட்டமைப்புச் செய்கிற பணியில் நாவல்களின் பங்கு முக்கியமானது.

தொடக்கத்தில் பொழுதுபோக்குக்காக வீட்டில் இருக்கும் பெண்கள் வாசிப்புக்காக நாவல்கள் எழுதப்பட்டன. பெரும்பாலும் பத்திரிகைகளில் தொடர்கதைகளாக அவை வெளிவந்தன. கூட்டுக்குடும்பம், நிலமானிய உறவுகள், திருமணம், குடும்பம், விழுமியங்கள் சார்ந்து நாவல்கள் எழுதப்பட்டன. தொடர்ந்து விடுதலைப் போராட்டம் கவனப்பட்டது. காந்தியச் சிந்தனைகள், திராவிட இயக்கச் சிந்தனைகள், மார்க்சியச் சிந்தனைகள் எனக் கொள்கைவழிப்பட்டும் நாவல்கள் எழுதப்பட்டன. மறுதலையில் நவீனத்துவப் பிரதிபலிப்பாக மனித அகத்தை முதன்மைப்படுத்தி அகவிடுதலை, மனித உறவுச் சிதைவுகள், கோபம், விரோதம், காமம், கொலை, தற்கொலை முதலான மனவெழுச்சிகள் இவ்வகை நாவல்களில் வெளிப்பட்டன.

நாவல்கள் ஓர் இலக்கிய வகை என்பதையும் மீறி சமூக இயக்கத்தில் அதன் தாக்குரவுகள் அதிகம் கவனப்படத் தொடங்கியது. எழுத்தாளனின் பார்வை, எழுத்துக்கும் எழுத்தாளனுக்குமான உறவுநிலை, வாசகனுக்கும் வாசிப்புக்குமான உறவுநிலை, எழுத்துக்கும் வாழ்க்கைக்கும், வாழ்க்கைக்கும் சமூகத்துக்குமான தொடர்புறவுகள் முக்கியத்துவப்பட்டன.

மானுடத்தின் செழுமைக்கு அந்த ஆசிரியரின் உலக நோக்கு எத்துனை உதவுகின்றது என்பதைக் காய்தல் உவத்தலின்றிப் பார்த்தல் நலம். மனித உறவுகள் வழியாக வரும் சிந்தனைகள், உணர்வுகள், உணர்ச்சிகள், நடத்தைகள் எந்த அளவுக்கு மனிதத்துவத்தின் இயல்புகளை அதன் வகை மாதிரிகள், அவற்றின் விகற்பங்கள் ஆகியனவற்றையும், மனிதத்துவத்தினதும், அது புலப்படும்-புலப்படா வாழ்க்கையினதும் உண்மைத் தன்மையை எவ்வாறு சித்தரிக்கின்றன என்பது எந்த இலக்கியத்துக்கும் பொதுவான உரைகல்லாக அமையும் என்பார் கா.சிவத்தம்பி (இலக்கியமும் கருத்துநிலையும், ப.146).

இப்படியான திசைவழியில் பயணித்த நாவலின் ஒன்னரை நூற்றாண்டு வரலாற்றின் சில தொடுகற்களை இனி காணலாம்.

**முதல் நாவல்கள்**

மாயூரம் வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் (1879) தமிழின் முதல் நாவல் என இலக்கிய வரலாற்றில் குறிக்கப்பெறுகிறது. “தமிழில் இம்மாதிரியான உரைநடை நவீனம் பொது மக்களுக்கு இதுவரை அளிக்கப்படவில்லை. ஆகையால் இந்நூல் வாசகர்களுக்கு ரசமாகவும், போதனை நிறைந்ததாகவும் இருக்கலாம் எனப் பெருமை கொள்கிறேன். இம்மாதிரிப் புதிய முயற்சியில் ஏதாவது குற்றங்குறைகள் இருப்பின் பொருத்தருளுமாறு பொதுமக்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்” என முகவுரையில் கூறுகிறார். மேலும், "வேடிக்கையான சில உபகதைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இறைவனிடத்தில் பக்தியும், சமூக வாழ்வுக்கு இன்றியமையாத கடமைகளும் வற்புறுத்தப்படுகின்றன" என்பார்.

ஆக, இரசனை, போதனை, கட்டுக்கதைகள், கடமை வலியுறுத்தல் - பொதுமக்களுக்கு. இவை இவரின் நோக்கமாகிறது. 350 பக்கங்கள் வாசிப்புச்சுவை அதிகம். அறிவுரைகளும் அறவுரைகளும் நிரம்ப,

கற்பனை விஞ்சிய நிலை. பெண் உயர்வு கருத்தாக்கமும், சமூக ஒழுக்க, ஒழுங்குகளை வலியுறுத்தலும் - இவைகளுக்கு ஏற்ப பல கதைகளைக் கட்டுதலும் நாவலாகப் பின்னப்பட்டுள்ளது. இது புனைவியல் பண்பு நிறைந்தது. ரொமாண்டிக் எனும் கவர்ச்சிகரமான கற்பனைப் படைப்பாக்க முறையை தொடங்கி வைத்தவராக வேதநாயகரைச் சுட்டலாம். இன்றைய வெகுஜன எழுத்தாளர்கள் பலரும் இப்பாதையில் பயணிப்பதைக் காணலாம்.

அடுத்து, ராஜமய்யர் எழுதிய கமலாம்பாள் சரித்திரம் (1896). இது வாழ்ந்து கெட்ட ஒரு பிராமணக் குடும்பத்தின் கதை. சமூகக் கோபுர உச்சிக்கலசமாக இருந்த பிராமணர்கள் கால ஓட்டத்தில் சமூகமாறுதலில் தங்கள் அதிகாரங்களை இழக்கும்போது படும்பாட்டை நாவல் சித்திரிக்கிறது. வாழ்க்கைநிலை தலைகீழாகிறது. நாவலின் நாயகர் முத்துசாமி அய்யர் தடுமாறுகிறார். திண்டாடுகிறார். வாழ்க்கையை நகர்த்த வழி தெரியாமல் விழிபிதுங்கி நிற்கிறார். புதுமையை ஏற்க முடியாமலும், பழமையை மீட்க முடியாமலும் அத்வைதத்துக்குள்ளே மன ஓர்மை கொள்கிறார். இது நவீனத்துவப் பண்பு. 'கமலாம்பாள் சரித்திரம் முற்பகுதி நாவல், பிற்பகுதி கனவு' என்பார் புதுமைப்பித்தன். 'ஜீவ பிரம்ம ஐக்கியம் வேதாந்தத்தில் அற்புதமாய் இருக்கலாம். அது கதையின் ரசனைச் சுவையைக் குறைக்கிறது' என்பார் க.கைலாசபதி. ஆக, ராஜமய்யர் தமிழ் நவீனத்துவத்தின் முன்னோடி எனலாம். இவரை அடியொற்றி இன்றுவரை பல நாவல்கள் வெளிவந்து கொண்டு உள்ளன.

அடுத்து, மாதவையாவின் - பத்மாவதி சரித்திரம். இதுவும் பிராமண சமூகத்தை மையப்படுத்திய நாவல்தான். பிராமண சமூகத்தின் வீழ்ச்சி, அதற்கான காரணங்கள், பழையன கழிந்து புதியன புகுவதை ஏற்றல் ஆகியவற்றை நாவல் பதிவு செய்கிறது. வரலாற்று வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் சமூக இயங்குதலைக் காட்டும் முயற்சி மாதவையாவிடம் உள்ளது. நடப்பியல் எனும் யதார்த்தவாதப் பண்பின் ஊடாக இந்நாவலை அணுக முடியும். பிறந்த இயற்கையில் மிருக சுபாவமே மிகுந்துள்ள மனிதன், தாயிடத்தும், தந்தையிடத்தும், உடன் பிறந்தோரிடத்தும், சுற்றுமுள்ளோரிடத்தும், முன்னோரிடத்தும், முக்கியமாக ஆசிரியரிடத்தும் கிரகிக்கும் அறிவன்றோ அவனை மேம்படுத்திப் பெருமை சேர்க்கிறது என்று நாவலாசிரியர் ஓரிடத்தில் சுட்டுவது பொருத்தமானது. தமிழ் யதார்த்தவாதத்தின் தொடக்கப் புள்ளியாக மாதவையா அமைகிறார்.

வித்துவான் சேஷையங்கார் இயற்றிய ஆதியூர் அவதானி சரிதம் (1875). இது வேதநாயகருக்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பே வெளியானதால் இதுவே தமிழின் முதல் நாவல் என்பாரும் உளர். ஆனால் இது செய்யுளில் அமைந்த ஒன்றாகையால் இதனை இலக்கிய வரலாற்றாளர் ஒத்துக்கொள்வதில்லை. சிறிய படைப்பில் பல துணைக்கதைகள் இடம் பெறுவதுடன் ஒரு பிராமணக் குடும்பத்தின் ஏற்றத்தாழ்வும் மாறுதலை ஒப்பும் மனநிலையும் படைத்துக்காட்டப்படுகின்றன. கலப்பு மணம், விதவா விவாகம் ஆகிய இரண்டும் 1875 காலக்கட்டப்படைப்பில் முன் வைக்கப்படுவதே இதன் தனிச்சிறப்பு. இவ்வகையில் இதுவே தமிழ்ச்சமூகத்தின் முதல் குரலாகப் பதிவாகியுள்ளது. 'கைம்பெண் விவாகமிந்தக் காலத்திலுண்டாச்சு' என்றும் 'சாதிவிட்ட சாதி யென்று தள்ள வினிவாய்க்காது' என்றும் இடம்பெறுகிறது. தமிழ்நாட்டின் ஒருபகுதி கிராமங்கள், பழக்கவழக்கங்கள், பாண்டிச்சேரி, சென்னைக்குச் செல்லும் வழி ஆகியன நாவலில் சித்திரிக்கப்படுகிறது. எனவே நாவலின் பண்புகள் செய்யுள் வடிவில் வெளிப்பட்டுள்ளது எனலாம். இதனை நாவலின் தொடக்க முயற்சி என்பது பொருந்தும்.

சித்திலெப்பை மரைக்கார் - அசன்பே சரித்திரம், (1885). இலங்கையின் முதல் தமிழ் நாவலாகவும் தமிழின் இரண்டாவது நாவலாகவும் அறியப்படும் இந்நாவல் 'முஸ்லிம் நேசன்' இதழில் தொடர்கதையாக வந்து பின்னர் நூலாக வெளிவந்தது. இது தமிழ் இஸ்லாமிய நாவல் என்பதைக் காட்டிலும் நவீனத்துவமும் இஸ்லாமும், மேற்குலகமும் இஸ்லாமும், கிறித்தவ வாழ்வும் இஸ்லாமிய வாழ்வும் என்பதாக அமைகிற நாவல். இதில் இஸ்லாமிய மார்க்கமும், ஒழுக்கமும் மேன்மையானவை என்கிற வகையில் படைக்கப்பட்டுள்ளது. மாறாக கிறித்தவம் போன்றவற்றை நிராகரிக்காமல், அதன் நேரியல்புகள் சுட்டப்பட்டுள்ளன. நவீன வாழ்வு, நவீனக் கல்வி, ஆங்கில அறிவு ஆகியவற்றை அரபு, தமிழ் மொழியோடும் வாழ்வோடும் கலக்கச் செய்யும் முயற்சியாகவே இது அமைகிறது.

### விடுதலைப் போராட்டமும் காந்தியமும்

கா.சி.வேங்கடரமணி - முருகன் ஓர் உழவன் (1927). காவேரிப்பட்டணம் சித்தநாதையர் வேங்கடரமணி, தென்னாட்டுத்தாகூர் என்று போற்றப்படுபவர். காந்தியடிகளின் சீடரான இவர் முருகன் ஓர் உழவன் (1927) தேசபக்தன் கந்தன் (1932) ஆகிய நாவல்களை முதலில் ஆங்கிலத்திலேயே எழுதினார். முருகன் ஓர் உழவனை கிருஷ்ணகுமாரி என்பவர் தமிழில் மொழிபெயர்த்தார். தேசபக்தன் கந்தனை, கா.சி.வே.யே மொழிபெயர்த்தார். இவை வேளாண்குடிகளை அடியொற்றி எழுதப்பட்ட நாவல்கள். காந்தியத்தையும், மனித வாழ்வு பற்றிய தத்துவத் தேடலையும் முன்வைப்பவையாக இவரது நாவல்கள் அமைந்தன. தேசபக்தன் கந்தன் நாவலில், ஊர்ப்புற மக்களின் பிரதிநிதியாய் காட்டேரி தன் கூட்டாளி மூக்கனிடம் புலம்புகிறான்:

"நாம் நாளெல்லாம் பாடுபட்டு கள்ள குடிக்கக் காலணா சேக்கறது ஆண்டவனுக்கு வெளிச்சம். கள்ளவிட்டா வேறெ சொகமேதண்ணே நம்பளுக்கு? நம் போன்றவர்களுக்குப் பாலுண்டா? பழமுண்டா?

நெய்யுண்டா தயிருண்டா? வீடுண்டா வாசலுண்டா? கட்டின பொஞ்சாதியும் பண்ணெப்பெண், பெத்த புள்ளேயும் பண்ணெ மாட்டுக்காரப்பயதானே? சேத்துலே, செகதிலே, கல்லுலே, முள்ளுலே, அலெஞ்சு திரிஞ்சு எப்பவும் பாடுபட்ற பொறப்பே நம் பொறப்பு. கள்ளெவிட்டா வேற சொகமேது நமக்கு"?.

இதுதான் அன்றைய தமிழ்ப்பெருங்குடி மக்களின் வாழ்க்கை. மிக இயல்பாகக் காட்சிப் படுத்திவிடுகிறார். அதே நேரத்தில் எத்திசையில் சென்றால் நாடு விடுதலையடைந்து மக்களுக்கு நற்கதி கிட்டும் என்பதை ரங்கன் ஐ.சி.எஸ் எனும் பாத்திரம் இப்படிக் கூறுகிறது:

"நமது நடவடிக்கை முறைகளை இந்த மாதிரியே பற்றவைத்துக் கொண்டிருந்தால் ஒட்டை அடைபடாது. உருக்கித்தான் வார்த்தாக வேண்டும். அதற்கு நெப்போலியனாவது, முஸோலினியாவது இச்சமயம் இந்தியாவுக்கு வேண்டும். இந்தக் கட்டிகள் மந்திரத்தால் தீரா ஆயுதம் போட்டுக் கீறி ஆற்ற வேண்டியதுதான். வேறு வழியில்லை. மந்திரத்தால் மாங்காய் விழுமோ? வீண் பிரயாசைதான். அருமையான நம் காலம் வீணாகிறதைத் தவிரப் பலனொன்றுமில்லை..."

நாவல் முழுக்க விவாதங்களாக அமைந்து பாத்திரங்களை நடத்திச் செல்கிறது.

விடுதலைப் போராட்டம், காந்தியச் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு பல நாவல்கள் வெளிவந்தன. கல்கி, ர.சு.நல்லபெருமாள், நா.பார்த்தசாரதி, சி.சு.செல்லப்பா போன்றோரின் நாவல்கள் முக்கியமானவை.

**சமூக விடுதலை**

நாட்டின் அரசியல் விடுதலையை அடுத்து மொழி சார்ந்த முன்னெடுப்பும், பகுத்தறிவு, சமூக நீதி, மூடநம்பிக்கை ஒழிப்பு, பெண்ணுரிமை ஆகியவற்றைப் படைப்புகளில் பரப்புரை செய்வதுமான ஒரு செல்நெறி உருவானது. தந்தை பெரியாரின் கருத்துக்களும், திராவிட இயக்கக் கருத்துகளும் இதற்குப் பின்புலமாக அமைந்தன.

அறிஞர் அண்ணா, கலைஞர் மு.கருணாநிதி, இராம.அரங்கண்ணல், தி.கோ.சீனிவாசன், எஸ்.எஸ்.தென்னரசு, ப.புகழேந்தி போன்றோரின் படைப்புகள் இவ்வகையில் அமையும். இவர்கள் மொழியை பிறமொழித் தாக்கத்தினின்று காத்து வளப்படுத்தவும் முயன்றனர் என்பது கருதத்தக்கது.

மூடநம்பிக்கையை ஒழித்துப் பகுத்தறிவை வளர்ப்பதும், சாதி சமயத்தை அகற்றி உயர்வு தாழ்வு அற்ற சமுதாயத்தை உருவாக்குவதும், தமிழரின் பழம் பெருமைகளைப் பாதுகாத்துப் போற்றுவதும் இவர்களின் படைப்பு நோக்கங்களாக அமைந்தன. கலைஞர் மு.கருணாநிதி தன்படைப்பு வளத்தால் வெகுமக்களிடம் சென்று சேர்ந்தார் எனலாம். "அடிதடிப் புரட்சி அல்ல, அடிமைப் புரட்சி, முதல்லே நம்ம வீட்டுப் பிள்ளைகளுக்கு அறிவுக்கண்ணைத் திறக்கணும். எல்லோரும் ஓர்குலம் அப்படின்னு பாடுகிற பாட்டைக் கேட்டுத் தலையை அசைச்சுக்கிட்டு இருந்தா மட்டும் போதாது. நமக்குள்ளே அந்த எண்ணம் வரணும், நமக்கு இருக்கிற தாழ்வு மனப்பான்மை ஒழியணும்" (ஒரே இரத்தம், மு.கருணாநிதி).

"ஒற்றுமை இன்மையால் உருப்படாமல் போன இனம் என்று உலகில் ஓர் இனம் உண்டென்றால் அது தமிழ் இனம் தான். எதிரிகள் கஷ்டப்பட்டு பிரித்து வைக்கத் தேவை இல்லாமலே தாங்களாகவே கசப்பு, பொறாமை, காழ்ப்பு இவற்றின் உச்சக்கட்டத்திற்குச் சென்று, பிரிந்து நிற்கும் இனமும் தமிழ் இனம்தான், அதன் விளைவுதான் இதோ உமது எதிரில் வீரபாண்டியன் கூண்டில் நிற்பதும், அதனை இத்தனை தமிழ்க்குறுநில மன்னர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்பதும்" (பாயும் புலி பண்டார வன்னியன்).

ஆடும் மாடும் போல ஆணும் பெண்ணும் வாழுகின்றனர். ஆடு புல்லைத்தான் தின்னும், மாடு புல்லையும் தின்னும், வைக்கோலையும் தின்னும். சமுதாயம் அனுமதிக்கும் ஆணோடு தான் வாழமுடிகிறது பெண்ணால். ஆனால் ஆண்... அது அனுமதிப்பவளோடும், அனுமதிக்காதவளோடும் வாழமுடியும்... (ஆடும் மாடும், டி.கே.சீனிவாசன்).

**வர்க்கப் போராட்டம்**

தொ.மு.சி.ரகுநாதன் - பஞ்சும் பசியும் (1953). இந்திய அரசியல் விடுதலைக்குப் பின்னர் சமூக விடுதலை, பொருளாதார விடுதலை ஆகியவற்றை முன்னிலைப்படுத்திய நாவல்கள் அதிக அளவில் வெளிவரத் தொடங்கின.

தமிழில் சோசலிச யதார்த்தவாதத்தை படைப்பாக்கத்தில் வெளிக்கொணர்ந்த ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்' முக்கியத் தெறிப்பு.

"சமுதாய இயக்க விதிகளையும் எதிர்காலச் சமுதாய வளர்ச்சியையும் நன்கு விளங்கிக்கொண்டு அவ்வுணர்வுடன் குறிப்பிடத்தக்க பாத்திரங்களை மெய்ம்மையுடன் சித்தரிப்பவனே யதார்த்தவாதி. இத்தகைய சிறப்புமிக்க யதார்த்த இலக்கிய நெறி தமிழ் நாவலுலகிற் பெருவழக்குப் பெற்றுள்ளதெனக் கூறமுடியாது. இந்த வகையில் தென்னகத்தில் ரகுநாதனுடைய 'பஞ்சும் பசியும்' ஒன்றுதான் விதந்து கூறத்தக்கது" (தமிழ் நாவல் இலக்கியம், க.கைலாசபதி).

ஆம் தனிமனித உணர்வுகளையும், குடும்பச் சிக்கல்களையும் பூதாகரமாகப் பெருக்கி, அவற்றையே வாழ்வின் முழுமையான உருவமாகக் காட்டும் நாவல்களே தமிழில் அநேகம். இப்படி, திசைமாறிப் போய்ப் பள்ளத்தில் விழ இருந்த தமிழ் நாவலைப் புதிய பாதைக்கு இட்டுச் சென்றது 'பஞ்சும் பசியும்'.

வாழ்வின் மேடு பள்ளங்களை இட்டு நிரப்பும் தன்மையில் வர்க்கப் போராட்டத்தை வாழ்வியல்

போராட்டமாக பல எழுத்தாளர்கள் முன் எடுத்தார்கள். விவசாயிகள், நெசவாளிகள், தொழிலாளர்கள் ஆகிய அனைத்து மக்களின் நலவாழ்வை நாவல்கள் பேசின. யதார்த்தவாத எழுத்து முறைமைக்கு புதுக் குருதி பாய்ச்சிய இந்த எழுத்தாளர்கள் தமிழ் நாவல் வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கிறார்கள்.

டி.செல்வராஜின் மலரும் சருகும், தேநீர், தோல், கு.சின்னப்பபாரதியின் சங்கம், சர்க்கரை, பொன்னீலனின் தேடல், கொள்ளைக்காரர்கள், கரிசல், தனுஷ்கோடி ராமசாமியின் தோழர், ஆர்.எஸ்.ஜேக்கப்பின் வாத்தியார் போன்ற நாவல்கள் வர்க்கப்போராட்டத்தின் பல்வேறு திசைகளைத் திறந்து காட்டின.

**வட்டார வாழ்வியல்**

ஒரே மொழி, ஒரே இனம், ஒரே நாடு, ஒரே கடவுள், ஒரே வாழ்க்கை... என்று எங்கும் எப்போதும் நிலைத்த 'ஒரே ஒரு' கருத்தாக்கம் இருந்தது இல்லை. பல பண்பாடுகள் நம் மண்ணின் மகத்துவம் அந்த வகையில், ஆர்.சண்முகசுந்தரம் - நாகம்மாள் *(1942)* தமிழின் முதல் கிராமத்து வாழ்வியலை முன்மொழிந்த நாவல். 'கடந்த கால் நூற்றாண்டுக் காலத்திய தமிழ் நாவல்களில் ஒரு தலைசிறந்த படைப்பாக மதிக்கிறேன்' என்பார் தி.க.சி. அறுவடை, சட்டி சுட்டது முதலிய நாவல்களிலும் கொங்கு வட்டார நிலவுடைமைப் பண்பாட்டை வட்டார மொழியில் வெளிப்படுத்தினார்.

அடுத்து, இந்த வட்டார மொழி இலக்கியத்தை வெகு மக்கள் தளத்தில் கொண்டு சேர்த்தவர் கி.ராஜநாராயணன். கோவில்பட்டி வட்டார கரிசல் மக்களையும், மொழியையும். பண்பாட்டையும் தன் எழுத்துக்களில் படைத்தளித்தார். கோபல்லகிராமம், கோபல்ல கிராம மக்கள், அந்தமான் நாயக்கர் முதலிய நாவல்கள் தமிழில் தனித்துவப்பாதை அமைத்தவை. தொடர்ந்து பலர் இத்தடத்தில் பயணித்தனர். ஹெப்சிபா ஜேசுதாசனின் புத்தம் வீடு, சு.சமுத்திரத்தின் நாவல்கள், நீல பத்மநாபனின் நாவல்கள், நாஞ்சில் நாடனின் நாவல்கள், பாரதி பாலனின் நாவல்கள்... என்று பலரைச் சுட்டலாம். சி.ஆர்.இரவீந்திரன் கொங்கு வட்டார மக்களைத் தம் படைப்புகளில் பதிவு செய்தவர்.

பெருமாள் முருகன் கொங்கு வட்டார விளிம்பு நிலை மக்களைப் படைப்பிலக்கியத்தில் படைத்தளித்து வருகிறார். வட தமிழ்நாட்டில் கண்மணி குணசேகரன் பெரும்பங்கு வகிக்கிறார்.

**தொண்ணூறுகளின் பேரலை**

உலக அரங்கிலும், இந்தியாவிலும் நிகழ்ந்த அரசியல் மாற்றங்கள் கலை இலக்கிய வெளிப்பாட்டிலும் தாக்கங்களை உருவாக்கின. சோவியத், கிழக்கு அய்ரோப்பிய நாடுகளில் சோசலிச அரசுகளின் சிதைவு, இந்தியாவில் ஒற்றைக் கட்சியாட்சிக்கு மாற்றாக மாநிலக்கட்சிகளின் எழுச்சி, மண்டல்குழு பரிந்துரைகள், அண்ணல் அம்பேத்கர் நூற்றாண்டு ஆகியவற்றின் பின்புலத்தில் தலித்தியம், பெண்ணியம் ஆகிய இருபெரும் படைப்பாக்கக் கொள்கைகள் உருவாயின. அதற்குமுன் மார்க்சிய, வர்க்கப்போராட்ட, சமூக மாற்றப் படைப்புகளில் வெளிப்பட்ட இக்கூறுகள் தனித்துவம் பெறத் தொடங்கின.

பாமாவின் கருக்கு, சங்கதி, சிவகாமியின் பழையன கழிதலும், ஆனந்தாயி, இமையத்தின் படைப்புகள், சோ.தர்மன், ஸ்ரீதரகணேசன் ஆகியோரின் படைப்புகள், இவைகளுக்கு முன்னோடியான பூமணியின் படைப்புகள் கவனிக்கத்தக்கன. இராஜம் கிருஷ்ணன் வர்க்கப் போராட்டத்தை முதன்மைப் படுத்தினாலும் அவரின் பெண்நிலைவாத நோக்கும் சிறப்புக்குரியது. திலகவதி, உமாமகேசுவரி, சு.தமிழ்ச்செல்வி போன்றோர் படைப்புகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. தன்வரலாற்றுப் புனைவுகள் தனித்துவமிக்கவை.

**திணைகளின் எழுச்சி**

புத்தாயிரத்தின் வருகை தமிழ்ப் படைப்புலகில் பல புதிய திறப்புகளைச் செய்தது எனலாம். அதில் முக்கியமானது தமிழனின் சங்ககால வாழ்முறை-யிலான திணைகளின் எழுச்சி மீண்டும் புத்துயிர்ப்பு பெற்றது எனலாம்.

கார்ப்பரேட் நுகர்வுக் கலாச்சாரச் சூழலில் பின்னைக் காலனியக் கூறாகிய அடையாள மீட்பு, பன்மைப் பண்பாடுகள், தம்மை எழுதுதல், விளிம்புகளின் தன்னுணர்வு ஆகிய பண்புகளின் கூட்டு மொத்தமாகவும் இதனைக் கொள்ளலாம்.

ச.பாலமுருகனின் 'சோளகர் தொட்டி' *(2004)*. டி.செல்வராஜூம், கு.சின்னப்பபாரதியும், கொ. மா.கோதண்டமும் அதுவரை காட்சிப்படுத்திய குறிஞ்சி, முல்லை மக்களின் வாழ்வியலை அடுத்தக் கட்டத்துக்கு நகர்த்திய படைப்பாக இது அமைந்தது. பழங்குடி மக்களான 'சோளகர்' வாழ்வு இன்றைய அரசதிகாரத்தால் எவ்வளவு வன்கொடுமைக்கு ஆளாகி சின்னாபின்னமாகிறது என்பதே நாவல்.

“கொம்பம்மாவின் குடிசையின் வாசலில் வெள்ளை நாகமரத்தின் ஒன்பது கவைக் குச்சிகளையும், ஒன்பது பச்சை மூங்கில்களையும் சேர்த்து ஆள் உயரத்தில் பந்தல் போடப்பட்டிருந்தது. அந்தப் பந்தலில் மேல்பரப்பு முழுவதும் நாகமரத்தின் இலைகளை நிரப்பி இருந்தார்கள். கரியன் புதுஆடை அணிந்திருந்தான். அவனது தலையைச் சுற்றிலும் மணம் பரப்பும் காட்டு மல்லிகையினை சரம் போலக் கட்டி, தோள்கள் வரை தொங்கவிட்டிருந்தார்கள். மணமகன் கரியன் மாப்பிள்ளையாகப் பெண்ணின் வீட்டிற்கு வரவேண்டி பீனாச்சியும் தப்பும் இசைக்கப்பட்டன”.

இப்படியான இயல் வாழ்வு, மனித உரிமைகள் பறிப்பாக மாறி கொடுமைகளாக, குரூரங்களாக,

அநியாயங்களாக, அக்கிரமங்களாக, இம்சைகளாக, வன்முறைகளாக, சித்ரவதைகளாக மாறிய அவலத்தின் இலக்கிய சாட்சியமாக 'சோளகர் தொட்டி' அமைகிறது. 'எங்களை வாழவிடுங்கள்' என்ற ஆதிகுடிகளின் கூக்குரல் இது.

**நெய்தல் வாழ்வு**

ஜோ டி குரூஸின் - ஆழி சூழ் உலகு (2004). அதுவரை ப.சிங்காரம், வண்ணநிலவன், வலம்புரி ஜான் போன்றவர்கள் கடல்வாழ்க்கையை எழுதியிருக்கிறார்கள். அவர்கள் கரையிலிருந்து கடலை நோக்கினர் என்றால் கடலுக்குள் இருந்து கரையைப் பார்த்தவராக ஜோ டி குரூஸ் மிளிர்கிறார். நெய்தல் வாழ்வை, கடலை, கடலோடிகளை, பரதவர்களை, தோணிகளை, புழங்கு பொருட்களை, கடல்வாழ்வை, கடலுயிரிகளை, கடல் பண்பாட்டை எழுத்தில் வார்த்தவராக குரூஸ் அடையாளப்படுகிறார்.

கொற்கை சமூக வரலாற்றைப் புனைவாக்கிய படைப்பு. இதில் தோணிகள், பாய்மரங்கள், மிதப்பான்கள், ராக்கைகள், சங்குகள், முத்துச்சிலாபம், கள், கருவாடு, பாடல்கள், வழக்காறுகள், கதைகள்... எனப் பலவும் இடம் பெறுகின்றன.

"இப்ப எவளுக்கும் ஆம்பள புள்ள பெற விருப்பமில்லை. பத்துப் பதினஞ்சி வயசு வர பொத்திப் பொத்தி வளத்திற்று தோணி, வலயும் போயிபோட்டு வேலையுமில்லாம அதுவ காடுமேடா சுத்தி எவனோ ஒருத்தர் நல்லாயிருக்க அடியாளாப் போயிருறான்வ. முன்னால கொமருவள வச்சிக்கிற்றுத்தாம் பயப்படுவாவ இப்ப பயக்கள வச்சிக்கிற்று பயப்புடுறாவ". (கொற்கை, ப.105)

இதுதான் நெய்தலின் வீழ்ச்சி. கடல் சார்ந்த வாழ்வு காயடிக்கப்பட்ட, நவீன வாழ்வு அடியாட்களாக மாற்றிவிடுவதை நுட்பமாகச் சொல்லிவிடுகிறார்.

'ஆழி சூழ் உலகு' மூன்று தலைமுறை வாழ்வை விவரிக்கிறது. சங்க கால நெய்தல் திணைப் பாடல்கள் பொருத்தமாகச் சுட்டப்படுவது திணை வாழ்வின் ஏக்கமாக வெளிப்படுகிறது.

சுறா வேட்டை, கட்டுமரத்தைத் தூக்கும் பெரிய மீன், பரதவர்கள் கிறித்துவம் தழுவுதல், மாதாவையும், கன்னியாகுமாரி அம்மனையும் தரிசிக்கும் மக்கள், சாதிகள், வளர்ச்சிகள், மதங்கள், சாதியும் மதமும் சார்ந்த வாழ்க்கைமுறை, தரகு அரசியல், போலி முகங்கள், பாலியல் மீறல்கள், மனித உறவுகளின் நெகிழ்ச்சி... என விரிகிறது நாவல். கோத்ரா, "இந்த ஒலகத்துல எல்லாத்தயும்விட மிஞ்சின சக்தி தியாகத்துக்குத்தான் உண்டு. எல்லாரும் இந்த மாய உலகுல சேக்குறாம். நீ மறு உலகுல சேக்குற. ஆசீர்வாதமா இருப்ப..."

இந்தக் குரல்தான் குரூஸின் செய்தியாகிறது. கொந்தளிப்பு மிக்க நெய்தலை தன் கைகளுக்குள் அடக்கி காகிதத்தில் பந்தி வைத்து விடுகிறார். நெய்தலங்கானம் மீள் எழுச்சி கொள்கிறது.

**மருதநில மகரந்தங்கள்**

காவிரி பாயும் தஞ்சை மண்டலம் நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடியது. இசையும் கலையும் விளைந்தது. நெல்லோடு தமிழ் நவீனத்துவம் இலக்கியத்தில் கால்கொண்டதும் இங்கேதான்.

தஞ்சை என்றால் எழுத்தாளர்கள் வரிசை கட்டி நினைவுக்கு வருவார்கள். தி.ஜானகிராமன், க.நா.சு, எம்.வி.வெங்கட்ராம், கு.ப.ரா, ந.பிச்சமூர்த்தி, ப்ரகாஷ் என்ற வரிசை செவ்வியல் தன்மையை மீட்டி நின்றது. சா.கந்தசாமி, பாவை சந்திரன், சோலை. சுந்தரபெருமாள், சி.எம்.முத்து, பாட்டாளி, சு.தமிழ்ச்செல்வி, ச.சுபாஷ்சந்திரபோஸ், வாய்மை, நாதன், உத்தமசோழன், ஷக்தி, ஜி.கார்ல்மார்க்ஸ் என்று பெரிய எழுத்துப்பட்டாளம் இயங்கி வண்டல் மண்ணை, வேளாண் வாழ்வை, மருதத்திணையின் மென்மை, வன்மைகளைப் படைப்புகளில் வெளிப்படுத்தி வரக் காணலாம். பின்னைப் பட்டியல் மண்ணிலிருந்து கிளம்பிய மக்கள் மைய எழுத்து என்பது முக்கியம்.

**வரலாற்றில் வாழ்தல்**

கல்கி, சாண்டில்யன், கோவி.மணிசேகரன், விக்ரமன், பாலகுமாரன் போன்ற எழுத்து சாம்ராட்கள் இராஜா ராணிக்குதிரைகளில் ஏறி இலக்கியப் பரப்பில் வரலாற்றை நினைவூட்டினர்.

இதன் மறுதலையாக சமூக வரலாற்றை சமூக வளர்ச்சி நிலைமைகளுக்குள் வைத்து வரலாற்றை வாசித்து இலக்கியப் படைப்பாக்கத்தை உருவாக்கும் போக்கு முகிழ்த்தது.

அந்த வகையில் பிரபஞ்சன் முன்னோடி ஆகிறார். 'மானுடம் வெல்லும்' தொடங்கி வைத்த பாதையும் பயணமும் வரலாற்று, ஆவண நாவல்கள் தமிழில் எழுதப்பட காரணமாக அமைந்தது.

'தமிழில் தக்க வரலாற்றுப் புதினம் தோன்றவில்லையே என்கிற வசை என்னால் ஒழிந்தது' என்ற பிரபஞ்சனின் கூற்று மிகை அல்ல. "முறுக்கு மீசையும், வஜ்ரம் போல் மேனியும் கொண்ட இளவரசன், கச்சைக்குள் அடங்காப்பெரும் ஸ்தனங்களைக் கொண்ட மஞ்சளழகியைக் கட்டிலில் சேர்த்த வீர சாகசம், இந்த தமிழ் தேசத்தில் வரலாற்றுப் புதினம் என்ற பெயரால் அழைக்கப்படுவது, தமிழர்க்குத் தலைக்குனிவு தரும் செயலாகும்" என்று அவர் குறிப்பிடுவது தவறு இல்லை.

மானுடம் வெல்லும், மகாநதி ஆகிய அவரின் புதினங்கள், நெருக்கடி நிலைக்காலக்கட்ட அரசியல் வரலாற்றை ஆய்வு செய்யும் பொன்னீலனின் புதிய தரிசனங்கள், குரூஸின் நாவல்கள், தோப்பில் முகமது மீரானின் கடலோர கிராமத்தின் கதை மற்றும் நாவல்கள், தமிழ்மகனின் நாவல்கள், எஸ். இராமகிருஷ்ணன், ஜெயமோகனின் பல நாவல்கள், சு.வெங்கடேசனின் மதுரை நாயக்கர், கள்ளர் வரலாறு

சார்ந்த காவல் கோட்டம், எம்.கோபாலகிருஷ்ணனின் மணல் கடிகை, முத்து நாகுவின் சுளுந்தீ... என்று வரலாற்று, ஆவண நாவல்கள் தொடர்ந்து வெளிவந்து கொண்டே உள்ளன.

**வானவில் எழுத்து**

இலக்கியக் கொள்கைகள் கோட்பாடுகள் பலவற்றின் வருகை படைப்புத் தளத்திலும் புதிய எழுத்து முறைமையை உருவாக்கிற்று எனலாம். பின்நவீனத்தும், பின்காலனியம், நான் லீனியர் எழுத்துக்கள், மாந்திரீக யதார்த்தவாதம் போன்றவற்றினைக் கருவிகளாக்கி எடுத்துரைப்பில் மட்டுமின்றி நாவல் பொருளிலும் பல்வேறு சோதனை- புதிய முயற்சிகள் வெளிப்பட்டுவரக் காணலாம்.

ஜெயமோகன், எஸ். இராமகிருஷ்ணன், கோணங்கி, தமிழவன், சாருநிவேதிதா, ரமேஷ் - பிரேம், எம்.ஜி.சுரேஷ், பா.வெங்கடேசன், ஜி.முருகன், யூமாவாசுகி, யுவன் சந்திரசேகர், சுரேஷ்குமார இந்திரஜித், கரிகாலன், ஜனகப்ரியா, சுதேசமித்திரன், எஸ்.செந்தில்குமார்... என்று அதிகம் பேர் நாளைய நாவல் செல்நெறிகளைத் தீர்மானிப்பவர்களாக அனுமானிக்கலாம்.

சல்மா, கீரனூர் ஜாகிர்ராஜா, மீரான்மைதீன், தீன் போன்ற இஸ்லாம் வட்டார வாழ்வையும் வலிகளையும் பண்பாட்டு முறைமைகளையும் அழகியலோடு படைப்பவர்கள்.

யதார்த்த வாழ்வின் பன்முனைகளை யதார்த்த எழுத்தின் பன்முகங்களோடு படைத்துவரும் பெருமாள் முருகன், நகர, பெருநகர, கார்ப்பரேட் வாழ்வைத் தொடர்ந்து எழுதிவரும் சுப்ரபாரதிமணியன், சமகால வரலாற்றை விவாதித்து யதார்த்த எழுத்தின் வீச்சை வெளிப்படுத்தும் முருகவேல், ச.பாலமுருகன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்க படைப்புகளை உருவாக்கி உள்ளனர்.

அதிகம் பெண் படைப்பாளிகள் நாவல் களத்தைக் கவனப்படுத்த முடியாத வாழ்க்கைச் சூழலில் இளைய தலைமுறையில் உமாமகேசுவரி, சல்மாவைத் தொடர்ந்து கலைச்செல்வி, புதிய மாதவி, ஜீவா, ஜெயந்தி கார்த்திக், அன்னி பாத்திமா, மலர்வதி போன்றோர் பெண்பாடுகளை மட்டுமின்றி ஒட்டுமொத்த வாழ்வு குறித்த விசாரணைகளையும் தன் நாவல்களில் முன்வைப்பது கவனிக்கத்தக்கது.

புலம்பெயர் வாழ்நிலை, அறிவியல் தொழில்நுட்ப பணிச்சூழல், இருபாலரும் பணிக்குச் செல்லும் நிலைமை, காதல் - காமம் - குடும்பம் - வாழ்க்கை பற்றிய இன்றைய தலைமுறையினரின் அவதானிப்புகள், நுகர்வுக்கலாச்சாரம், கார்ப்பரேட் வாழ்க்கை முறைகள் ஆகியவற்றின் நெருக்கடிகள் ஆகிய இன்றைய வாழ்வை எழுதும் இளம் எழுத்தாளர்கள் இவர்களில் பெரும்பாலோர் இணையத்தில் எழுதக்கூடியவர்கள். ஆர்.அபிலாஷ், சுனில் கிருஷ்ணன், எஸ்.செந்தில்குமார், ஜி.கார்ல்மார்க்ஸ், ஜீவகரிகாலன், லஷ்மி சரவணகுமார், ராம் தங்கம், ஜா.தீபா, சுஷீல்குமார், சரவண கார்த்திகேயன், ஜீ.சின்னப்பன், ராம் சந்தோஷ், அகரமுதல்வன், கோகுல் பிரசாத், காளி, சுரேஷ்பிரதீப், வேல்கண்ணன்... என்று ஒரு பட்டியலில் அடக்கமுடியாதபடிக்கு எழுதி வருகின்றனர்.

பல வண்ணங்கள், வடிவங்கள், சிந்தனை முறைகள், பலவித வாசக மட்டங்கள், வட்டாரங்கள் என்று விரியும் இந்த இளையவர்கள் நம்பிக்கை அளிக்கிறார்கள். விமரிசனத் தடிகளைப் போட்டுவிட்டு தோள் தொட்டு தட்டிக் கொடுக்கலாம். காலம் சலித்துக் கொள்ளப்படும்.

பாமாவின் கருக்கு, சங்கதி, அழகிய நாயகி அம்மாளின் கவலை, முத்துமீனாளின் முள், ராஜ்கவுதமனின் சிலுவைராஜ் சரித்திரம், கே.ஏ.குணசேகரனின் வடு போன்ற தன்வரலாற்றுப் புதினங்கள் தமிழில் தனித்தடம் பதித்தன.

மூன்றாம் பாலினமாக அறியப்படும் திருநங்கைகளின் வாழ்வியலைப் பேசிய சு.சமுத்திரத்தின் வாடாமல்லி, எஸ்.பாலபாரதியின் அவன், அவள், அது தொடங்கி, திருநங்கையரே எழுதிய லிவிங்ஸ்மைல் வித்யாவின் நான் வித்யா, ரேவதியின் வெள்ளை மொழி... என்று படைப்புகள் வந்த வண்ணம் உள்ளன.

தமிழின் நாவல் போக்குகள் தற்கால உலக அளவிலான கலை இலக்கிய வெளிப்பாட்டின் ஒரு பகுதியாகவே அமைகின்றது. பேசப்படாத பகுதியினர் தங்களைப் பேசத் தொடங்கியுள்ளனர். பின்காலனிய கூறாகிய பன்மைப் பண்பாடுகளின் எழுச்சியும், அடையாள மீட்பும் அழகிய கூறுகளுடன் மேலெழுந்து வருகின்றன. வர்க்கம், சாதி, பால், நிலம் சார்ந்த அதிகாரக்குவிப்புகளுக்கு எதிரான உரிமைக்கோரல்கள் படைப்புகளில் வெளிப்படுத்தப்படுகின்றன. எதார்த்த எழுத்தின் நெகிழ்ச்சியையும், நீட்சியையும் காணமுடிகிறது. கதையல்லாக் கதைகளும், இலக்கண வரையறைகள் தாண்டிய எழுத்து முயற்சிகளும், வண்ணமயக் கலவையாக அமையும் வடிவ ஓர்மையும் தமிழ் நாவலை 'இன்றையத் தன்மைப்'படுத்துகின்றன. இளைய ஆண்கள், பெண்கள், திருநங்கையர் எழுத்து முன்வைப்புகள் நம்பிக்கை அளிக்கின்றன.

இவை கொள்கை, கோட்பாடுகள் வழி மதிப்பிடப்பெற்றவை அல்ல. சராசரி தமிழ் வாசக மனநிலையில் உருவானது இந்த ஆக்கம். யாரையும் சுட்டி, யாரையும் புறக்கணிக்கும் எண்ணமில்லை. வகைமாதிரிக்கு சிலர் பெயர்கள் சுட்டப்பட்டுள்ளன. நாவல்கள் குறித்த திறனாய்வுகள் தேக்க நிலையிலேயே இருப்பது குறையே.


●

கட்டுரையாளர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக
நாட்டுப்புறவியல்துறைத் தலைவர், தஞ்சாவூர்

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





₹ 80




₹ 270




₹ 200




₹ 230




நூல் அறிமுகம்

# எக்காலத்திற்குமான நீதியின் போக்கு

**சுப்ரபாரதிமணியன்**

தீவாந்தரம் நாவலின் வடிவத்தைக் கூர்ந்து பார்க்கிறபோது என் நாவல் 1098 ஞாபகத்திற்கு வந்தது. ஒரு சிறுமி சார்ந்த கைதும் நடவடிக்கையும் பின்னால் அது சார்ந்த நீதிமன்ற விசாரணைகளும் பிறகு முடிவான தீர்ப்புகளும் அந்தச் சிறுமியின் வாழ்வுப் போக்குகளும் கொண்டதாக அந்த நாவலின் வடிவம் இருக்கும். அதுபோன்ற ஒரு வடிவத்தைத் தீவாந்தரம் நாவலில் கண்டேன். இதில் வ.உ.சி அவர்களின் கைது நடவடிக்கை, அதன்பிறகு அவர் சார்ந்த விசாரணைகள், இறுதியாக அவர் மீது எடுக்கப்பட்ட இறுதி நடவடிக்கைகள், தீர்ப்பின் விளக்கங்கள் என்று நாவலின் போக்கு அமைந்து, என் நாவலின் வடிவ அம்சங்களைத் தீவாந்தரம் ஞாபகத்தில் கொண்டு வந்து நிறுத்தியது.

வ.உ.சி அவர்களின் வாழ்க்கையின் ஒரு முக்கியமான காலகட்டத்தைப் பிரதிபலிக்கிறது நாவல். தீவாந்தரம் என்ற தலைப்பே ஒரு வகையான தண்டனையை காண்பித்துவிடுகிறது. அந்தத் தண்டனை கைதுக்குப் பின்னால் அவர் மீது அமல்படுத்தப்படும் போதும் அதன் இடையில் ஏற்பட்ட இந்த நாவலில் முக்கியக் கதாபாத்திரங்கள் உரையாடலும் அல்லது நீதிமன்றங்கள் ஏற்படுத்தும் உரையாடலுமாக நாவல் நின்று பேசுகிறது.


சமீபத்தில் நடைபெற்ற தூத்துக்குடி வழக்கு விசாரணை அம்சங்கள் இந்த நாவலில் பல இடங்களில் ஒத்துப்போய் இந்த நாவலின் போக்கை ஒரு சமகாலத் தன்மை உள்ளதாகக் கூட மாற்றி விடுகிறது அல்லது நூற்றைம்பது வருடங்களுக்கு முற்பட்ட ஒரு சரித்திர விஷயத்தைச் சமீபத்திய சரித்திர அம்சங்களுடன் கலந்து தருவதில் நம்பகத்தன்மை என்பது பற்றிய ஒரு குழப்பமும் ஏற்படுகிறது. முந்தைய சரித்திர விஷயத்தை இது தேவையில்லாமல் குறுக்கிடுகிறது என்று நினைக்கத் தோன்றுகிறது. ஆனால் புனைவில் எல்லாவற்றையும் முயற்சி செய்து பார்க்கலாம் என்பது விதியாக இருக்கிறது.

சமீபத்திய தூத்துக்குடி வழக்கு விசாரணையின் அம்சங்கள் பல இடங்களில் இழையோடியிருப்பதை அடையாளம் கண்டுகொள்ள முடிகிறது. அப்படியாக கண்டுகொள்ள முயலும்போது இந்த நாவல் ஒரு சமகாலத் தன்மையுடன் செல்ல முயலும் அக்கறையைத் தருகிறது. ஆனால் 150 ஆண்டுகளுக்கு முன்னால் நிகழ்ந்த அந்தச் சம்பவங்களை மனதில் கொண்டு பார்க்கிறபோது ஒருவகையில் அதை நிறுவுவதுமாகவும் அமைந்துவிடுகிறது. இவ்வகை விஷயங்களை அதாவது பழைய சரித்திர விஷயங்களையும் சமீப விஷயங்களையும் ஒன்றிணைக்கும் வடிவத்தை

இவரின் அப்பல்லோ போன்ற நாவல்களிலும் பார்க்க முடிகிறது. இந்த வகையான வடிவத்தைச் சரித்திர சம்பவமும் சமகாலச் சமூகமும் இணைந்த போராட்டத்தைக் கொண்ட வடிவத்தை அவர் பல படைப்புகளில் கைக்கொண்டு இருக்கிறார். அது அவரின் தனித்துவமான போக்காக நின்றுவிடாமல் இந்த வகை விஷயத்திலிருந்து மாறுபட்டு வேறு வடிவங்களுக்குள் புகுவதன் மூலம் எதார்த்தத்தின் பல சிறப்புகளைக் கொள்ள வைக்கும்.

அந்த வகையில் தூத்துக்குடியில் முன்பு நடந்த துப்பாக்கிச்சூட்டையும் இப்போது நடந்த துப்பாக்கிச்சூட்டையும் நினைவு கொள்ளும் விதமாய் அமைந்துள்ள விசாரணைக் காட்சிகள் இந்த நாவலில் முக்கிய பங்காற்றுகின்றன. இது நாவலின் சுவாரஸ்யமான தளமாகவும் அமைந்து விடுகிறது. வ.உ.சி அவர்களின் குடும்ப நண்பர்களுடன் உரையாடல் மற்றும் நீதி விசாரணை பதில்கள் போன்றவை கூர்மையாக சொல்லப்பட்டிருக்கின்றன. இரண்டு சிறுவர்-சிறுமியர் சார்ந்த விசாரணை குறுக்கீடுகள் மட்டும் புனைவுத் தன்மையுடன் வார்க்கப்பட்டிருப்பது தெரிகிறது. மற்ற கதாபாத்திரங்கள் வ.உ.சியின் குடும்ப நண்பர்களோடும் அரசியல் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த ஒன்றாக இருக்கிறார்கள்.

இந்த நாவலை கதையாகச் சொல்லுகிற அம்சங்களில் பல இடங்கள் கவித்துவ அம்சங்களாக நிறைந்திருக்கின்றன. தூய்மைப்படுத்திய குடிநீரைப் போல நீதி இருக்க வேண்டும் என்ற அக்கறையில் கொடுக்கப்படும் செய்திகளில் தரம் உயர்ந்ததாக இருக்கிறது. முகத்தில் சிலந்திகள் மீசையாகத் துருத்தி இருப்பது போல இந்த நாவலில் வ.உ.சி படும் துன்பங்கள் நம்மைத் துன்புறுத்திக் கொண்டே இருக்கின்றன. அந்தத் துன்பங்களுக்கு அடிப்படையாக இருக்கிற நீதிமன்றத் தீர்ப்பு சாதிகளின் அடிப்படையில் அமைந்திருப்பதை நாவல் முழுக்க பல இடங்களில் அவர் அலசுகிறார். வ.உ.சி குடும்பத்தினர் மிகுந்த சிரமங்களுக்கு உண்டாகி இருப்பது அறத்தோடு சொல்லப்பட்டிருக்கிறது. மனுநீதிதான் தீர்ப்பாக வழங்கப்படுகிறது, அந்தத் தீர்ப்பு இன்று சாதி ரீதியான தீர்ப்பாக அளக்கப்படுகிறது என்பதை நாவல் குறிப்பிடுகிறது.




தீவாந்தரம் (நாவல்) | அண்டனூர் சுரா
சந்தியா பதிப்பகம் | சென்னை |ரூபாய் 230

மனுநீதியின் தாக்கங்கள் எந்தக் காலத்திலும் இந்திய சமூகத்தில் இருந்து கொண்டிருப்பதில் அத்தாட்சியாக அந்த வகைக் கூற்றுகள் அமைந்துவிடுகின்றன. வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா போன்றோர் திருநெல்வேலி பொதுக்கூட்டத்தில் பேசியதாக தேசத்துரோக வழக்கு பதிவு செய்யப்படுகிறது. அதையொட்டி அவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். அதன் பின்னால் திருநெல்வேலியில் கலவரம் நடக்கிறது. துப்பாக்கிச்சூடு தொடர்கிறது. அதன் பின்னால் வருகிற வழக்கு விசாரணை ஆகியவை இந்த நாவலில் விரிவாக சொல்லப்பட்ட போதிலும் சமகாலத் தன்மையையும் ஞாபகத்தில் கொண்டு எழுதப்பட்டிருப்பது தெரிகிறது. ஆரம்பத்தில் நீதிபதிகள் வழங்கும் தீர்ப்பும் பின்னால் மேல்முறையீட்டு காரணமாக உயர் நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பும் விரிவாக உள்ளன. அவற்றின் இடையில் நடக்கும் விசாரணை சார்ந்த விஷயங்களும் வ.உ.சி குடும்பத்தினரின் சிரமங்களும் விரிவாக சொல்லப்பட்டிருக்கின்றன.

ஒரு காலகட்டத்திய சரித்திரச் சம்பவங்களை, சமகாலத் தன்மையை இணைத்து சொல்லப்பட்டிருப்பதை தமிழக அரசியலைக் கூர்ந்து பார்க்கிறவர்கள் உணர்வார்கள். இந்தவகையில் எப்படியோ அவருடைய படைப்புகளில் அரசியல் தன்மை இடம் பெற்றுவிடும். அதை இந்த நாவலிலும் காட்டியிருக்கிறார். தொடர்ந்து இவர் அரசியல் தன்மையைத் தன்னுடைய படைப்புகளில் அடையாளம் காணத் தகுந்த வகையில் எழுதி வருகிறார். இந்த அரசியல் தன்மை வேறு படைப்பாளிகளிடம் அபூர்வமாகவே காணக் கிடைக்கும். ஆனால் அண்டனூர் சுரா தொடர்ந்து சிறுகதைகளிலும் நாவல்களிலும் இந்த அம்சங்கள் ஊடாகவும் படிமமாகவும் நிறைந்திருப்பதை தேர்ந்த வாசகன் உணர்வான். இந்த அரசியல் தன்மையைப் படைப்புகள் கொண்டிருப்பது வேறுவகை படைப்பாளிகள் கைக்கொள்ள வேண்டிய மாதிரிப் படைப்புக்கு உதாரணமாக சுராவின் படைப்புகளை சொல்ல வைப்பது அவரின் தொடர்ந்த முயற்சிகளில் அழுத்தமாக பதிவாகியிருக்கிறது. எக்காலத்திற்குமான நீதியின் போக்கு, தீவாந்தரம்.

●

கட்டுரையாளர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர்




# கலை இலக்கியப் பெருமன்ற வைரவிழா மாநாடு

தொகுப்பு: **இசைக்கும் மணி**

வன்மம் இல்லாத வாழ்வும் பன்மயமும் பூத்துக் குலுங்கும் சாத்தூர் கரிசல் மண்ணில், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் 12வது மாநாடு 60 ஆம் ஆண்டு வைரவிழா மாநாடாக சீரும் சிறப்புமாக நடந்தேறியுள்ளது.

விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் மே 20, 21, 22 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற்ற 12வது மாநாட்டின் தனுஷ்கோடி ராமசாமி நினைவு அரங்கில், மே 20 அன்று முதல் நாளில், பறை இசை, கோலாட்டம், சிலம்பாட்டம் ஆகியவற்றோடு மாநாடு சிறப்பாகத் தொடங்கியது.

பெருமன்ற கொடியை பேராசிரியர் எஸ்.தோத்தாத்திரி ஏற்றி வைத்தார். ஜீவா, நா.வா நுழைவு வாயிலில், பெருமன்ற முன்னோடிகள் மற்றும் ஆளுமைகளின் 60 நிழற்படங்களை மாநாட்டில் பங்கேற்ற 60 பேர் திறந்து வைத்து மலர் அஞ்சலி செலுத்தி சிறப்பித்தனர்.

விருதுநகர், தூத்துக்குடி மாவட்டத்தின் முன்னோடி ஆளுமைகளான எட்டயபுரம் பாரதி, தூத்துக்குடி வ.உ.சிதம்பரம், விருதுநகர் தனுஷ்கோடி ராமசாமி ஆகியோரின் படங்களும் மாநாட்டு கலை அரங்க மேடையில் திறந்து வைக்கப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஓவியம், தொல்லியல், நிழற் படம், சூழலியல் மற்றும் நியூ செஞ்சுரி புத்தகக் கண்காட்சிகளை குறிஞ்சி செல்வர் கோ.மா.கோதண்டம் மற்றும் எஸ்.ஆர்.என்.எம் கல்லூரியின் முதல்வர் முனைவர் சே.கணேஷ்ராம் உள்ளிட்டோர் திறந்துவைத்து சிறப்பித்தனர். தொல்லியல் அறிஞர்கள் மேடையில் பாராட்டப்பட்டு சிறப்பிக்கப்பட்டனர்.

மருத்துவர் த.அறம் தலைமையேற்க, திருமதி சரஸ்வதி குத்துவிளக்கு ஏற்றி வைத்து மாநாட்டை தொடங்கி வைத்தார். எம்.ஏ.சி.எஸ். ரவீந்திரன் முன்னிலையில், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வெ.அழகிரிசாமி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், தமிழ்நாடு சிறு பான்மையினர் ஆணையத்தின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர் இராமச்சந்திரன், விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினர் மாணிக்கம் தாகூர், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.ரகுராமன் உள்ளிட்டோர் மாநாட்டை வாழ்த்திப் பேசினர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொ.லிங்கம் நன்றியுரைத்துப் பேசினார்.

சிறப்பு மாநாட்டின் இறுதியில் இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டன. நூல்களை கல்லூரி முதல்வர் கணேஷ்ராம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் ஜி.பழனிசாமி உள்ளிட்டோர் வெளியிட, பீட்டர் அல்போன்ஸ் மற்றும் நெல்லை மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் காசி.விஸ்வநாதன் உள்ளிட்டோர் முதல் பிரதிகளை பெற்றுக் கொண்டனர்.

பெருமன்ற அமைப்பு குறித்த மாநாடு பிற்பகல் அமர்வாக அமைந்திருந்தது. பெருமன்றத்தின் மாநிலத்

தலைவர் சி.சொக்கலிங்கம் தலைமை ஏற்க, மாநில செயலாளர் கவிஞர் கண்மணி ராசா வரவேற்றுப் பேசினார். தமிழ்நாடு கலை இலக்கிய பெரு மன்றத்தின் 60 ஆம் ஆண்டு வைர விழா மாநாட்டு மலரை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் வெளியிட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் இரா. முத்தரசன் முதல் பிரதியை பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன் மற்றும் எழுத்தாளர் ஆதவன் தீட்சண்யா, எழுத்தாளர் பொன்னீலன், டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத், இந்திய கலாச்சார நட்புறவு கழகத்தின் பொதுச் செயலாளர் இராதாகிருஷ்ணன், ஒடுக்கப் பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மு.வீரபாண்டியன், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் க.பாரதி, அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் தினேஷ் சீரங்கராஜ், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் ஜி. மஞ்சுளா உள்ளிட்டவர்கள் மாநாட்டை வாழ்த்திப் பேசினர்.

பெருமன்றத்தின் தலைமைக்குழு உறுப்பினர் கவிஞர் பத்மஸ்ரீ சிற்பி பாலசுப்ரமணியன், இலங்கை தேசிய கல்வியியல் கல்லூரியின் மேனாள் பேராசிரியர் கலாநிதி ந.இரவீந்திரன் உள்ளிட்டோர் சிறப்புரை ஆற்றினர். மாநில செயலாளர் கவிஞர் நாணற்காடன் தொகுப்புரை வழங்கினர். மாநில துணைத் தலைவர் டி.எஸ்.நடராஜன் நன்றியுரைத்துப் பேசினார்.

முதல்நாள் மாலை நடைபெற்ற மக்கள் கலைவிழாவின் வெளிப்புற மேடையில், தஞ்சை சின்னபொண்ணுவின் கிராமிய பாடல் இசை, பறைஇசைக் குழுவினரின் கூட்டிசை, நாடகம், தெருக்கூத்து, கட்டைக்கால் மனிதர்கள் ஆட்டம், புரவியாட்டம், இடையிடையே கவிதை வாசிப்பு, திருச்சி பாரதி குழுவினர், அறந்தை பாவா, புதுவை ஆதிராமன் உள்ளிட்டோரின் கருத்தாழமிக்க பாடல்கள் என சிறப்பு நிகழ்ச்சிகள் நடந்தேறின. நிகழ்ச்சிகளை துணைப் பொதுச்செயலாளர் ஹெச். ஹாமீம் முஸ்தபா மற்றும் மாநிலச் செயலாளர் மு.சி. இராதா கிருஷ்ணன் ஒருங்கிணைத் திட்டனர்.

மே 21 இல் இரண்டாம் நாள் நிகழ்வு பெருமன்றத்தின் வரைவுக் கொள்கை அறிக்கையை முன் வைத்து உரையாடல் நிகழ்வாக நடந்தேறியது. பெருமன்ற செயலாளர் பெ.அன்பு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாநிலக் குழு உறுப்பினர் எஸ். கே. கங்கா அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றினார். புதுச்சேரி கலை இலக்கிய பெருமன்றத்தின் மாநிலத் தலைவர் எல்லை. சிவக்குமார், பெருமன்ற மாநில துணைத்தலைவர் கோ.கலியமூர்த்தி மாநில செயலாளர் பிரபாகரன் உள்ளிட்டோர் நிகழ்வை ஒருங்கிணைத்தனர். சென்னை முதல் குமரி வரை 25 மாவட்டங்களின் பிரதிநிதிகள் கொள்கை அறிக்கை விவாதத்தில் பங்கேற்று கருத்துகளைப் பதிவு செய்தனர். பெருமன்ற பொதுச்செயலாளர் இரா.காமராசு விவாதங்களுக்கு பதிலளித்துப் பேசினார்.

பிற்பகல் நடந்த பண்பாட்டு அரங்கில் தற்காலத் தமிழ் அசைவுகள்: இலக்கியத்தில், பண்பாட்டில், அரசியலில், பாலின சமத்துவத்தில், ஊடகத்தில், சுற்றுச்சூழலியலில் என ஒவ்வொரு பிரிவிலும் ஏற்பட்ட, ஏற்பட்டுவரும், ஏற்படப்போகும் மாற்றங்கள் குறித்து, சென்னை பல்கலைக்கழகத்தின் மேனாள் துறைத் தலைவர் வீ.அரசு, தாமரை இதழ் ஆசிரியர் சி.மகேந்திரன், சமூகநீதி கண்காணிப்பு குழுவின் மருத்துவர் சாந்தி, இலக்கிய விமர்சகர் ந. முருகேசபாண்டியன், சூழலியலாளர் நக்கீரன் உள்ளிட்டோர் விரிவாகப் பேசினர்.

இந்தப் பண்பாட்டு அரங்கு அமர்வுகளுக்கு பேராசிரியர் தி.சு.நடராஜன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மேலாண்மை இயக்குநர் சண்முகம் சரவணன், பேராசிரியர் பா.ஆனந்தகுமார், வி.சுப்பிரமணியன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். முனைவர் நா.இராமச்சந்திரன் வரவேற்புரை வழங்கினார். அ.கி. அரசு நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தமிழ்செல்வன், ஜனசக்தி பத்திரிகை ஆசிரியர் குழுவின் பொறுப்பாளரும் ஊடக விமர்சகப் பேச்சாளருமான த.லெனின் உள்ளிட்டோர் மாநாட்டை வாழ்த்திப் பேசினர்.

மே 22-ல் மூன்றாம் நாள் இறுதி நிகழ்ச்சியாக பொதுச்செயலாளர் அறிக்கை முன்வைத்தல், அதன் மீதான வாதங்கள் நடைபெற்றன. பெருமன்றத்தின் துணைத் தலைவர் வை.செல்வராஜ் தலைமை யில், தலைமைக்குழு உறுப்பினர் பெ.நா. கமலாம்பாள் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்வில், மாநில பொதுச் செயலாளர் இரா காமராசு அறிக்கையை முன் வைத்து விவாதங்களுக்கு பதிலளித்துப் பேசினார். 26 மாவட்ட பிரதிநிதிகளின் முன்மொழிவுகள் கவனப்படுத்தப்பட்டு பதிலளிக்கப்பட்டது. நிதி-நிலை அறிக்கையை சமர்ப்பித்து மாநில பொருளாளர் ப.பா.ரமணி விளக்கவுரை வழங்கினார். பெருமன்றத்தின் மாநில செயலாளர் இரணியன் ஒருங்கிணைத்தார்.

புதிய தலைமைக்குழு மாநில குழு மற்றும் நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. சி.சொக்கலிங்கம் மாநிலத் தலைவராகவும், மருத்துவர் த.அறம் பொதுச்செயலாளராகவும், ப.பா.ரமணி பொருளாளராகவும் புதிய நிர்வாகிகளாக தேர்ந்தெடுக் கப்பட்டு அறிவிக்கப்பட்டனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன், புதிய நிர்வாகிகளை வாழ்த்தி சிறப்புரைத்து பேசினார். மூன்று நாள் நிகழ்வுகள் அனைத்தையும் ஹாமீம் முஸ்தபா ஒருங்கிணைத்து சிறப்பு சேர்த்திட்டார். விருதுநகர் மாவட்ட குழு சார்பில் மருத்துவர் த.அறம் தலைமையிலான மாநாட்டு வரவேற்புக் குழுவினர் வைர விழா மாநாட்டை சீரும் சிறப்புமாக நடத்திமுடித்தனர்.

●


கட்டுரையாளர், இதழாளர், எழுத்தாளர்,

Nestling

# நெஸ்லிங் வெளியீடாக
# உலகப் புகழ்பெற்ற சிறார் கதைகள்

(ஒவ்வொன்றும் தலா ரூ.70)


































கட்டுரை

# நாம் தேடும் புது அரசியல்

க. பழனித்துரை



சமீபத்தில் வெளிவந்துள்ள இரண்டு ஆய்வு அறிக்கைகள் பொதுச்சிந்தனை உடையோரை பதைபதைக்க வைக்கும் செய்திகளைக் கொண்டுவந்து தந்துள்ளன. ஒன்று ஐ.நாவின் மானுட மேம்பாட்டு அறிக்கை. இரண்டு ஆக்ஸ்பார்மின் உலக ஏற்றத்தாழ்வு அறிக்கை. இரண்டு அறிக்கைகளும் மானுட சமூகம் பற்றியதுதான். இந்தியாவின் நிலைமையையும் அந்த அறிக்கைகளை வைத்து நாம் புரிந்துகொள்ளலாம். பொருளாதார வளர்ச்சி, மக்கள் வாழ்க்கைத்தரம் உயர்த்தல், சமூக மேம்பாடு என மக்களின் நலனுக்காக செயல்படுவதாக அரசாங்கங்கள் கூறி ஒரு 40 ஆண்டு காலத்தில் இயற்கைச் சூழலை உலகம் தோற்றிய காலத்திலிருந்து இப்படிச் சீர்கேடு அடையச் செய்தது கிடையாது. இந்த 40 ஆண்டு காலத்தில் புவி படைக்கப்பட்டது மானுடத்திற்காக என்ற சிந்தனையில் இயற்கைச் சூழலை சிதிலமடைய வைத்துவிட்டோம். அண்டம் அனைத்தும், அண்டத்தில் இருக்கும் அனைத்து உயிரினங்களுக்கானது என்பதை மறந்து பொருள் சேகரிக்கும் நோக்குடன் அண்டத்தையே நாம் நிலைகுலைய வைத்துவிட்டோம். அதன் விளைவு தொடர்ந்து மானுடம் பேரிடர்களைச் சந்தித்து வருகிறது. மானுடம் இன்று ஒரு புதிய புரிதலுடன் செயல்பட்டாக வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளது. மானுடத்திற்கும் அண்டத்திற்கும் உள்ள உறவுமுறை பற்றிய புரிதல், மானுடத்திற்கும் இயற்கைக்கும் உள்ள உறவுமுறை பற்றிய புரிதல் ஏற்பட்டு விரைந்து செயல்படவில்லை என்றால் மிகப்பெரிய பேரழிவை உலகம் சந்திக்கப்போகிறது என்ற அபாயச் சங்கை இந்த அறிக்கை ஊதிவைத்துள்ளது. இதற்கான பொது விவாதம்

ஆளுகைத் தளங்களில் நடைபெறுகிறதா என்று ஊர்ந்து கவனித்துப்பார்த்தால் எங்குமே அந்தப் புரிதலுடன் செயல்படுவதாகத் தெரியவில்லை. நம் தலைவர்கள் அனைவரின் உரைகளிலும் ட்ரில்யன் டாலர் பொருளாதார வளர்ச்சியை நோக்கி செயல் திட்டம் வகுக்க வேண்டும் என்ற கருத்தைத்தான் முன் வைத்துக் கொண்டுள்ளனர். இந்த ஐ.நா. அறிக்கையை உள்வாங்கிப் படித்துவிட்டு இப்படிப்பட்ட உரைகளைக் கேட்கும்போது அடிவயிற்றில் நமக்கு பயம் ஏற்படுகிறது. இரட்டை இலக்க வளர்ச்சி என்று நம் தலைவர்கள் பேசுகின்றார்கள். இரட்டை இலக்க வளர்ச்சியில் தான் வறுமையை குறைக்க முடியும் என்று வாதிடுகிறார்கள். எந்தக் கோட்பாடு வறுமையை ஒழிக்க இரட்டை இலக்க வளர்ச்சி தேவை என்று கூறுகிறது? 3% பொருளாதார வளர்ச்சியில் நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து மானுட வாழ்வு எப்படி வாழ வேண்டுமோ அப்படி மரியாதையான வாழ்க்கையை வாழ வைக்கும் பல நாடுகள் நம் கண்ணுக்கு ஏன் தெரியவில்லை. இந்த இடத்தில்தான் அந்த அறிக்கையை நாம் பரிசீலனை செய்ய வேண்டி உள்ளது. அதாவது 8 சதவிகிதம் 8.5 சதவிகிதம் பொருளாதாரம் வளர்ந்தபோது வளர்ந்த பொருளாதாரம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி விட்டதா? வறுமையைச் சற்று குறைத்தது என்பது உண்மைதான், அதை மீண்டும் இந்த கொடிய தொற்று தகர்த்து விட்டது. ஆகையால்தான் இந்தியாவில் 80 கோடி மக்கள் அரசு தரும் இலவச உணவு தானியங்களை நம்பி உணவுப் பாதுகாப்பை பெற்றுக் கொண்டுள்ளனர். இந்தப் புள்ளி விபரம் கூறும் செய்தி என்ன? அடைந்த பொருளாதார வளர்ச்சி அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படவில்லை என்ற உண்மையைத்தான் அந்த புள்ளி விபரம் கூறுகின்றது.

இந்த உலக ஏற்றத்தாழ்வு அறிக்கை இதுவரை உலகம் கண்டிராத ஏற்றத்தாழ்வுகளை சந்திக்கிறது என்றும் அடைந்த வளர்ச்சியில் வளர்ந்தவர்கள் ஒரு சிலரே, வளங்கள் சூறையாடப்பட்டது மட்டுமின்றி, சொத்துக்களை தனிமனிதர்கள் கைக்கும் பெருமளவு கொண்டு வந்து விட்டனர். இதன் விளைவு பெரும்பான்மை மக்கள் அடிப்படைத் தேவைகளுக்கு அரசாங்கம் தரும் இலவசங்களை நோக்கிக் காத்திருக்கும் சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்பதைத்தான் படம் பிடித்து காட்டுகின்றது இந்த அறிக்கை. அது மட்டுமல்ல அடிமைத் தளையிலிருந்து விடுபட்டு சுதந்திரம் பெற்று மக்களாட்சி கைக்கொண்டு செயல்பட்டு வரும் நாடுகளும் என்ன செய்கிறது என்றால் குடிமக்களுக்குத் தேவையான வாய்ப்புக்களையும் வசதிகளையும் உருவாக்கி அவர்களை செயல்பட வைத்து சுயமரியாதையுடன் கூடிய மானுட வாழ்க்கையை வாழ வழி செய்ய இயலாமல் மக்களை பயனாளிகளாகவே வைத்து இலவசங்களுக்கு ஏங்கும் நிலையில் அவர்களை வாழ வைத்து, அரசாங்கத்தை தன் எஜமானன் எனவும், தங்கள் குடிபடைகள் எனவும் சிந்திக்கும் சூழலிலேயே வைத்து விட்டனர். இந்த இடத்தில் உலக ஊழல் அறிக்கையை சற்றுப் புரட்டினால் ஓர் உண்மை நமக்குப் புலப்படும். இந்த 40 ஆண்டு காலத்தில்தான் ஊழல் பற்றி பெருவிவாதம் முன்னெடுக்கப்பட்டு, சில நாடுகளில் நாட்டின் அதிபர்களும், அமைச்சர்களும், முதல்வர்களும் சிறைச்சாலை சென்று வருவதை நம்மால் பார்க்க முடிகிறது.

இந்தப் பொருளாதார வளர்ச்சி வந்தபோது எது விவாதப் பொருளாக இருந்திருக்க வேண்டும் என்றால் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதைப் பற்றித்தான். ஆனால் அந்த இடத்தில் எது இருந்தது என்றால் பொருளாதார வளர்ச்சிக்கான சீர்திருத்தம் மற்றும் ஊழல் என்ற இரண்டு மேலோங்கி இருந்தது பொதுத்தள விவாதங்களில். இந்த இடத்தில் நாம் எங்கு தோற்றோம், எங்கு நாம் தவறு இழைத்து விட்டோம் என்று ஆராய வேண்டும். இந்த இடத்தில் இன்னொரு அதிர்ச்சி தரும் கருத்தை நாம் கவனிக்கத் தவறக்கூடாது. 2012 ஆம் ஆண்டு என்.சி.ஏ.இ.ஆர் (NCAER) என்ற அகில இந்திய ஆராய்ச்சி நிறுவனம் மக்கள் கருத்தறியும் ஓர் சர்வே நடத்தியிருக்கிறார்கள். 2005 ஆம் ஆண்டும் இந்த நிறுவனமே அப்படிப்பட்ட ஒரு சர்வே நடத்தி புள்ளி விபரங்களை வைத்துள்ளனர். அதேபோல் மக்கள் கருத்தறியும் சர்வே இரண்டை அதாவது 1971லும் 1996லும் சி.எஸ்.டி.எஸ் (சிஷிஞிஷி) என்ற ஆய்வு நிறுவனம் நடத்தியுள்ளது. கடைசியாக 2012 ஆம் ஆண்டு நடத்தி 2015ம் ஆண்டு வெளியிட்ட சர்வே அறிக்கையில் மக்கள் கூறிய கருத்து நம்மை ஆழ்ந்து சிந்திக்க வைக்கிறது மக்களாட்சி பற்றி.

முன்பெல்லாம் பொதுமக்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இருக்கிறது, நீதி மன்றத்தின் மீது நம்பிக்கை இருக்கிறது, அரசுத் துறைகள் மீது நம்பிக்கை இருக்கிறது என்று ஓரளவுக்குக் கூறிய மக்கள் தற்போது 2012ல் எங்களுக்கு இவை அனைத்தின் மீதும் நம்பிக்கை எங்களுக்கு இல்லை. அரசியல்வாதிகள் குறிப்பாக நாங்கள் தேர்ந்தெடுத்த சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர் ஏழைகளுக்காக செயல்படுவதில்லை. அவர்கள் வசதியானவர்களுக்கு, கம்பெனிகளுக்கு செயல்பட்டு ஊழல் செய்வதில் கவனமாக இருக்கின்றார்கள் அது மட்டுமல்ல, ஊரில் உள்ள குற்றப் பின்னணி கொண்டவர்களை அரசியலுக்குள் கொண்டுவந்து மக்களை அடக்க

முயற்சிக்கின்றார்கள் என்ற கருத்தை தெரிவித்துள்ளனர். உங்களுக்கு என்ன வேண்டும் என்றால் எங்களுக்கு ஒரு வலிமையான, மக்களை நேசிக்கும், துணிவுள்ள தலைவன் வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் படிக்கும்போது, நமக்கு என்ன தோன்றுகிறது என்றால், நாம் பெற்ற கல்வி, நம் தலைவர்கள் செய்த தியாகம், நாம் அடைந்த வளர்ச்சி யாருக்கானது நம் அரசியல் கட்சிகள் ஏன் இந்த அவப்பெயரை தாங்கி நிற்க வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளன. நம் இன்றைய தலைவர்கள், அரசியல்வாதிகள் அனைவரும் ஊழல்வாதிகளா, நம் அதிகாரிகளும் ஊழியர்களும் மோசமான ஊழல் புரிகின்றனரா, நம் மக்கள் ஊழலை சகிக்கப் பழகிவிட்டனரா என்று கேட்கத் தோன்றும். நம் கட்சிகளில் இன்றும் தியாகி நல்லக்கண்ணு போன்றவர்கள் இருக்கின்றார்கள். சமீபத்தில் இறந்த மதுரை சட்டமன்ற உறுப்பினர் எப்படிப்பட்ட தியாக வாழ்வு வாழ்ந்தார் என்பது அனைவருக்கும் தெரியும். ஆளும் கட்சியில் இருந்தும் தங்கள் குழந்தைகளுக்கு திருமணம் முடிக்க முடியாமல் கட்சிக்காக உழைக்கும் அரசியல்வாதிகளையும் இன்று பார்க்க முடிகிறது. அதேபோல் செயலர் பதவிவரை வந்தவர்கள் சிலர் கடனுடன் வாழ்வதையும், சொந்த வீடு கட்டுவதை கனவாக வைத்து வாழ்வதையும் டப்பிச் சோறு தங்கள் வீடுகளிலிருந்து எடுத்து வந்து சாப்பிடுவதையும் நாம் பார்த்து வருகிறோம். இருந்தும் ஏன் இந்த நிலை என்பதுதான் பலருக்கு புரியாத புதிர். நீண்ட நாட்களுக்கு முன் நேரு பிரதமராக இருநத்போது உலகப் புகழ் பெற்ற பொது நிர்வாகவியல் வல்லுனர் பால் ஆப்பில்பி இந்தியா வந்திருந்தார். அவரிடம் நேரு ஒரு வேண்டுகோள் வைத்தார். எங்கள் நிர்வாகக் கட்டமைப்பை ஆய்வு செய்து எனக்கு ஒரு பரிந்துரை வழங்குங்கள் என்பதுதான் அந்த வேண்டுகோள். அவரும் அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு ஒரு ஆய்வு அறிக்கையை தயார் செய்து சமர்ப்பித்தார். அது மிகப்பெரிய அறிக்கை அல்ல. அது ஒரு சிறிய அறிக்கை. ஆனால் அந்த அறிக்கையில் பிரச்சினையுடன் மூலத்தைத் தொட்டுவிட்டார்.

அவர் கூறியதன் சாரம் "உங்கள் நிர்வாகக் கட்டமைப்பு காலனியாதிக்க காலத்தில் கட்டப் பட்டவை. அது சுரண்டலுக்காக கட்டப்பட்டவை. அது மக்களுக்கு வெகுதூரத்தில் இருந்து மக்களை மேய்த்து சுரண்டி, பதவியில் இருந்தவர்களும் பதவியைத் தந்தவர்களுக்கும் செயல்பட்ட ஒரு அமைப்பை சுதந்திரம் அடைந்த நாட்டில் தொடரச் செய்வது சுரண்டலை வேறு ஒரு வடிவத்தில் செயல்பட வைக்கும். எனவே உங்களுக்கான ஒரு நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கிக் கொள்ளுங்கள்" என்பதுதான். அது மட்டுமல்ல கூடிய விரைவில் அதை உணர்வீர்கள் என்றும் எச்சரித்தார். ஆனால் அன்று நம் நாட்டை இந்தியா என்ற ஒன்றாக உருவாக்குவதே மிகப்பெரிய சவாலாக இருந்தது. நாட்டு உருவாக்கத்திற்காக கொஞ்சநாள் அந்த நிர்வாகத்தை பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற தொடர்ந்த அந்த நிர்வாகம் இன்று வரை தொடர்கிறது. இதில் புதிய பொருளாதாரக் கொள்கையால் வந்த வாய்ப்பு அனைவரையும் சிக்க வைத்து விட்டது. கார்ப்பரேட், தரகர்கள், ஒப்பந்தக்காரர்கள், அரசியல்வாதிகள், உயர்நிலை அதிகாரிகள் இவர்களில் ஒரு பிரிவினர் லாபம் பார்க்கும் வலைப்பின்னலில் இயங்குகின்றனர். இவர்களின் பலம் அரசு பலம், இவர்களை நல்லவர்கள் மட்டும் எதுவும் செய்துவிட முடியாது. இதற்கு மிகப்பெரிய மக்கள் திரட்டு காந்தி காலத்தில் நிகழ்ந்தது போல் நிகழ வேண்டி இருக்கிறது. இன்றைக்கு இயங்கும் அரசியல் கட்சித் தலைவர்களால் இந்தப் பணியை செய்ய முடியும் என்று நான் கருதவில்லை. நம் அரசுக் கட்டமைப்பும் அரசியல் கட்டமைப்பும் அந்த அளவுக்கு பின்னப்பட்டுள்ளது. அரசியலுக்கும் கார்ப்பரேட் வணிகத்திற்கும் அப்படியொரு பின்னல் பின்னப்பட்டுள்ளது. ஒரு அரசியல் கட்சியில் உள்ள தனி நபர்கள் நடத்தும் பெரு வணிகத்தில் பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பங்குதாரராக இருக்கின்றார்கள். நடக்கும் அரசியல் நகர்வுகள் நமக்குத் தரும் செய்தி கட்சியை தாங்கள் நடத்தும் வணிகத்திற்கு பாதுகாப்பு ஏற்படுத்திக் கொள்வதற்காகத்தான் பலர் கட்சியில் முக்கியப் பதவிகளை பிடித்து செயல்படுகின்றனர் என்பதைத்தான். நீதிமன்றத்தில் கூட இவர்களை ஒன்றும் செய்ய இயலாத அளவிற்கு தங்கள் வழக்கை மறக்கச் செய்து விடுகின்றனர். அந்த அளவிற்கு நிலைமை பரிதாபகரச் சூழலை அடைந்துள்ளது. இந்தச் சூழலை மாற்ற முதல் பொது நிர்வாகச் சீர்திருத்தக் குழு தந்த அறிக்கையை முற்றிலுமாக நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை. குறைந்த பட்சம் இரண்டாவது நிர்வாகச் சீர்திருத்த ஆணையத்தின் அறிக்கைகள் மீதாவது விரைந்து நடவடிக்கை எடுத்து செயல்பட்டிருந்தால். குறைந்தபட்ச மாற்றங்களை நம் ஆளுகையிலும் நிர்வாகத்திலும் கொண்டு வந்திருக்க முடியும். இந்த நிர்வாக சீர்திருத்த அறிக்கைகளை நம் அரசியல் மற்றும் அதிகார வர்க்கம் இணைந்து பாதாளத்தில் தள்ளிப் புதைத்து விட்டன என்பது தான் நாம் பார்க்கும் எதார்த்தமான உண்மை. அது மட்டுமல்ல இன்றைய நம் நிர்வாகம் மக்களை நோக்கியதாக மாற்றப்பட வேண்டும். அதற்கு அதிகாரப் பரவல் என்பது மிக முக்கியமானது. இந்த அதிகாரப் பரவல் என்பது எதோ மாநில அரசிடமிருந்து உள்ளாட்சிக்குச் செல்லும் அதிகாரம்

மட்டுமல்ல, மைய அரசிடமிருந்து மாநில அரசுக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அப்போது தான் மக்கள் அதிகாரப்படுத்தப்படுவார்கள். மக்கள் அரசாங்கத்துடன் இணைந்து ஆளுகையிலும் மேம்பாட்டுச் செயல்பாடுகளிலும் ஈடுபடுவார்கள். அதிகாரப்பரவல் என்று கூறி மாநில அரசுகளை உள்ளாட்சிகளுக்கு அதிகாரங்களை கொடுங்கள் என்று கூறி விட்டு மாநில அரசிடமிருந்து அதிகாரங்களை தொடர்ந்து எடுத்துக் கொண்டேயிருந்தால் மாநில அரசுகள் எப்படி உள்ளாட்சியை வலுப்படுத்தும் அதிகாரங்கள் கொடுத்து. இன்று மாநில அரசுக்கு அதிக அதிகாரங்கள் என்று வாதிடுவோர் பழைய அறிக்கைகளை வைத்து விவாதம் புரிகின்றனர். அந்த அறிக்கைகள் ஓரளவு உதவ முடியுமேயன்றி இன்றைய உலகமயமான பொருளாதாரச் சூழலில் புதிய பார்வை தேவைப்படுகிறது, நார்வே நாட்டில் உலகமய பொருளாதாரம் உலகில் அறிவிக்கப்பட்ட நேரத்தில் ஒரு வெள்ளை அறிக்கையினை அந்தப் பாராளுமன்றததில் சமர்ப்பித்து, மேல்நிலை அரசு குறைந்த அதிகாரங்களை வைத்து புதிய பொருளாதார வாய்ப்புக்களை பயன்படுத்த முனைய வேண்டும். அதிக அதிகாரங்களை கீழ்நிலையில் இயங்கும் உள்ளாட்சிக்குத் தந்து மக்கள் நலன் சார்ந்து முடிவுகள் எடுத்துச் செயல்பட அனுமதிக்க வேண்டும் என முன்மொழிந்து முடிவு எடுத்தனர்.

தற்போது நாம் மைய மாநில உறவுகள் மட்டுமல்ல மைய மாநில உள்ளாட்சி உறவுகளை மேம்படுத்த ஆய்வு செய்து அறிக்கை தயார் செய்ய அரசியலை தயார் செய்ய வேண்டும். அதேபோல் அரசியல் சாசனத்தையும் இந்த பொருளாதாரப் பின்புலத்தில் மறுபரிசீலனை செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது. அதேபோல் இன்று பொதுத் தளத்தில் இருக்கும் மக்கள் நலப் பயன்கள் என்ற விவாதத்தை மாற்றி கடமைகளும் உரிமைகளும் என்ற விவாதத்தை தொடங்க வேண்டும். எனவே அடிப்படை மாற்றத்திற்கு செயல்பட நம் அரசியலை திருப்ப வேண்டுமே தவிர பிரச்சினையற்றவைகளை பிரச்சினையாக்கி செயல்பட்டு நாட்களைக் கழிக்க முயலக்கூடாது. பொதுத்தளத்தில் இன்னொரு விவாதமும் தொடர்ந்து வைக்கப்படுகிறது. ஆட்சியில் இருந்த தேசிய மற்றும் மாநிலக் கட்சிகள் ஊழலில் சிக்கி அதன் சுயதன்மையை இழந்து ஒரு கார்பரேட் போல் லாபப் பங்கீடு செய்து அரசியல் நடத்துகின்றன. இதன் விளைவு இந்தக் கட்சிகளால் வாக்குகள் வாங்க முடிகிறதே தவிர மக்களின் நம்பிக்கையைப் பெற முடியவில்லை. ஆகையால்தான் பல மாநிலக் கட்சிகளுக்கு மக்கள் பிரச்சினைகளில் பார்வை இருந்தும் அவர்களால் மக்களின் நம்பிக்கையை பெற இயலவில்லை. அரசியலில் மக்களை இணைப்பதற்குப் பதிலாக, அரசியலை மக்களிடமிருந்து விலக்கி சந்தையுடன் நெருங்கிச் செயல்பட ஆரம்பித்து விட்டன அரசியல் கட்சிகள்.

இன்று அரசியல் என்பது வித்தை காட்டும் செயலாக மாறி தேர்தலுடன் நின்று விடுகிறது. இந்த நிலைதான் மக்களாட்சிக்கு ஆபத்தைக் கொண்டு வருகிறது. எனவே ஒரு புதிய மக்களாட்சி படைக்க கட்சி அரசியலைத் தாண்டி, ஒரு மக்கள் அரசியலைக் கட்டி அடிப்படை மாற்றத்திற்கு வித்திட முடியுமா என்பதுதான் இன்றைய தேடுதலாக இருக்கிறது. அதற்கான தலைவர்கள் ஆத்ம சக்தியுடன் யாராவது கிடைப்பார்களா என்பதுதான் பலரின் ஏக்கம். ஒரு சூழலில் நடைபெறும் என்ற நல்லெண்ணத்துடன் நாம் மாற்றத்தை நோக்கி செயல்பட இன்று உள்ள வாய்ப்பினை நாம் பயன்படுத்த முனைய வேண்டும். அந்த வாய்ப்பு உள்ளாட்சியில் உள்ளது, அதற்கான புரிதலை ஏற்படுத்திக் கொண்டு செயல்பட்டால் ஒரு மாற்று முறையை நம்மால் உருவாக்கிட முடியும். அதற்கான தலைவர்களைத்தான் நாம் பஞ்சாயத்துக்களில் தேடுகிறோம்.

கட்டுரையாளர், காந்திகிராமிய பல்கலைக்கழக ராஜீவ் காந்தி
பஞ்சாயத்துராஜ் ஆராய்ச்சி இருக்கைத் தலைவர் (ஓய்வு)

**புத்தகங்கள் அச்சிட**
**அற்புதத் தீர்வு**
**குறைந்த செலவு**
**அதிகபட்ச தரம்**

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**

கட்டுரை



# கானகன் நாவல் கட்டமைக்கும் பளியர்களின் வாழ்வியல்

ந. இரத்தினக்குமார்

பழனி தொடங்கி செங்கோட்டை வரை இருக்கும் மேற்கு மலைத்தொடர்களில் பளியர், மூப்பர், முதுவான், காணிக்காரர், மன்னான், ஊராளி, மலைக்குறவர், மலைப்புலையர், மலை வேடர், குன்னுவர், மன்னாடி எனப் பல்வேறு பழங்குடிகள் வாழ்கின்றனர். இவர்களில் ‘பளியர்கள்’ பிரதான பழங்குடிகளாகத் தென்மாவட்டங்களில் விரவிக் காணப்படுகின்றனர். ‘பளியர்கள்’ குறித்து வந்த நாவல், சிறுகதைகள் குறைவு என்றாலும் சில படைப்புகள்(கானகன், தாவரங்களின் உரையாடல்) இவர்களின் வாழ்வியலை நுட்பமாகப் பதிவு செய்துள்ளன. பளியர்களின் வாழ்வியலைப் பேசும் லஷ்மி சரவணக்குமாரின் ‘கானகன்’ நாவலை, இனவரைவியல் பின்புலத்தில் வாசிக்க முற்படுகிறது இக்கட்டுரை.

**லஷ்மி சரவணகுமாரின் கானகன் நாவலில் பளியர்கள்**

இளம் படைப்பாளியான லஷ்மி சரவண குமாரின் மூன்றாவது நாவல் கானகன். வேட்டைக்காரன் ஒருவன் தாய்ப்புலியை வேட்டையாடிக் கொல்வதில் தொடங்கும் நாவல், குட்டிப்புலி பழிக்குப்பழியாக அதே, வேட்டைக்காரனைக் கொல்வதில் நாவல் முடிகிறது. புலி என்பது ‘பளிச்சியம்மனின்’ ஆன்மா. பளிச்சி, தாய்ப் புலியைக் கொன்ற தங்கப்பனைக்

குட்டிப்புலி வடிவில் வந்து கொல்லும் எனும் பளியர்களின் நம்பிக்கைதான் நாவலின் 'கரு'. முதலாளிகளுக்காக மலைவாழ்ப் பழங்குடிகள் காட்டிலிருந்து வெளியேற்றப்படுவது, மலைசார் பண்பாட்டியலை விட்டு நிலத்திற்கு வர மறுக்கும் பளியர்களின் நெருக்கடிகள் நாவலின் இன்னொரு பரிமாணம். தங்கப்பன் எனும் வேட்டைக்காரனின் சாகசங்களும் வீழ்ச்சியும் நாவலின் மையவோட்டம். தங்கப்பன் ஒரு கருமாண்டி. "காட்டை நன்கு தெரிந்து வைத்திருப்பவனை கருமாண்டி என்பார்கள்"(கானகன்,ப.25). அவனுக்கு மாரி, சகாயராணி, செல்லாயி என மூன்று மனைவிகள்.

பளிச்சி செல்லாயிக்கும் அவளது முன்னாள் கணவன் பளியன் சடையனுக்கும் பிறந்தவன் வாசி. தங்கப்பனைத் தந்தையாகக் கருதி வாழ வேண்டிய நிர்பந்தம் வாசிக்கு; அவன் தந்தையின் மீது கொள்ளும் முரண், விலக்கம் இன்னொரு இழை. வாசி, தங்கப்பனை அப்பனென்று சொல்லமுடியாது(கானகன், ப.74)என்கிறான். வாசி, வனத்தின் எச்சம். பளியக்குடியின் வாரிசு. காட்டைக் காப்பாற்ற வந்த பழங்குடியின் வருங்காலத் தலைவன். தங்கப்பன் காட்டை அழிக்க வந்தவன். இருவருக்குமான முரண், மோதல் ஒரு கட்டத்தில் கதையின் மையமாகிவிடுகிறது. பளியன் வாசி, செய்யும் சாதுர்யத்தால்/உதவியால் தனது தாயைக் கொன்றவனை (தங்கப்பனை) அதன் வாரிசான குட்டிப்புலி வேட்டையாடுகிறது. முன்னர் குறிப்பிட்டது மாதிரி 'புலி பாட்டா, பழி எடுக்கும்' (மேலது, ப.76) என்ற பளியர்களின் நம்பிக்கை நாவலில் நிறைவேறுகிறது. வனஅதிகாரிகள், நிலக்கிழார்கள், ஜமீன், வேட்டைக்காரர்கள் என ஆளும் சக்திகளால் உருவாக்கப்பட்ட தங்கப்பனை யாரும் எதுவும் செய்ய முடியாதபோது பளியன் வாசியும் பளியர்களின் குடிச்சாமியின் வடிவான பாட்டாவும்(புலி) தங்கப்பனை வேட்டையாடுகின்றனர். தங்கப்பன் கொடுத்த துப்பாக்கியை "ஆற்றில் வீசி எறிந்த வாசி, பரணிலிருந்து இறங்கி முழுமையானதொரு பளியனாய்க் குடியை நோக்கி நடக்க" (ப.264) நாவல் முடிகிறது. வாசிப் பளியனின் வெற்றி என்பது வனம், பறவைகள், விலங்குகள், பழங்குடிகள் ஆகியோரின் வெற்றியாக நாவல் கதையாடலைக் கட்டமைக்கிறது.

தங்கப்பனின் மூன்று மனைவிகளுக்கிடையே நடக்கும் பிணைப்பும் மனத்தாங்கல்களும் கதையில் சிறப்பாக வந்துள்ளன. நாவலின் பல பகுதிகளைப் பெண்களே நகர்த்துகிறார்கள். சகாயராணி அன்சாரியுடனான காதலைச் சொல்லும்போது செல்லாயி அவளை ஆற்றுப்படுத்துவதும், மாரியோடு தங்கப்பன் உறவு கொள்வதைப் பிற பெண்கள் அவளின் உரிமை என அங்கீகரிப்பதும் பழங்குடிப் பெண்களின் தாய்வழிச் சமூகப் பண்புகளைக் காட்டுகின்றன. பெண்களின் சுதந்திரம் குறிப்பாகப் பளியர் பெண்களின் தனித்துவம் நாவலின் பலம். "பளியக்குடி பொம்பளைகள்தான் காட்டின் ஜீவன். எத்தனை பதட்டத்திலும் செய்ய வேண்டிய காரியங்களை கவனமாக செய்கிறார்கள்"(ப.39) என்கிறது நாவல். மலைவாழ் மக்களின் கட்டற்ற காதலை நாவல் எடுத்துரைத்துள்ளது. ஜமின்தாரின் மனைவிக்கும் வாசிக்குமான கூடல்(ப.122), சகாயராணிக்கும் அன்சாரிக்குமான காதல் உறவு(ப.223), செல்லாயி தனது கணவன் சடையனை விலக்கித் தங்கப்பனோடு இணைவது, கட்டையன், குயிலம்மா காதல், தங்கப்பன் இடுகாட்டில் வாழும் பெண்ணிடம்(சுப்பு) காதல் கொள்வது என நாவல் குறிஞ்சித்திணைக்கான உரிப்பொருளை மீட்டெடுத்துள்ளது. மலை வாழ்க் குடிகளின் கூடல் இயல்பானது, இயற்கைப் புணர்ச்சியில் அமைவது என்பதை நாவல் பல இடங்களில் பதிவு செய்துள்ளது. அங்கு கட்டுப்பாடுகள், வரையறைகள் இயல்பாக மீறப்படுகின்றன.

நான்கு பெரும்பொழுதுகள் அடிப்படையில் நாவல் கட்டமைக்கப்பட்டுள்ளது. கதை பனிக்காலத்தில் தொடங்கி, இளவேனில், கோடைக்காலம் என நகர்ந்து பெருமழைக்காலத்தில் முடிகிறது. இறந்துபோன பளியர்களின் ஆவி மரங்களில் வாழும். அதனாலே பளியர்கள் மரங்களை அழிப்பதில்லை. காய்ந்த பகுதிகளை வெட்ட மட்டுமே செய்கிறார்கள். பளியர்களின் பாரம்பரிய மருத்துவ முறைகள் நாவலில் பேசப்படுகின்றன. சிறுத்தை அடித்து காயப்பட்ட, தங்கப்பனுக்கு காட்டின் மூலிகைகளைக் கொண்டே 'பூசணி' காயத்தைப் போக்கிவிடுகிறார்(ப.217).

பூசணி தோப்படியானாக இருந்து பளியர்குடிக்கு வழிகாட்டியாகச் செயல்படுகிறார். குலத்திற்கு ஆபத்து வரும்போது குடிச்சாமியான பளிச்சி இறங்குவாள் என்பது பளியர்களின் நம்பிக்கை. நாவலில் மாதையன் மனைவி வேம்புவிற்கு பளிச்சி இறங்கிக் காட்டைக் காப்பாற்ற வேண்டியதன் அவசியத்தைக் குறியாகச் சொல்கிறாள்(ப.71). 'புலிக்கு வாய் கட்டுதல், புலியாக மாறுதல்' என்பது பல்வேறு பழங்குடிகளிடம் காணப்படும் காப்புப் பண்பாடு. அதாவது புலி வரும் நான்கு திசைகளிலும் நரியின் வாலைக்கட்டினால் புலி விலகிவிடும், இதைப் புலியைக் கட்டுதல் என்பர். பழங்குடிகளில் ஒருவர் புலியாகவே மாறி ஆடு, மாடுகளை அடித்து, உண்பார். அதைச் சக பழங்குடிகள் பார்த்து உறுதிப்படுத்துவர். பின்பு அவரே புலியாக மாறிவிடுவதாக நம்புகின்றனர். காட்டில் வாழும் புலி அவருக்குக் கட்டுப்படும்.

இது பழங்குடிகளின் நம்பிக்கை என்கிறார் அமித்குமார் நாக்(தமிழகப் பழங்குடிகள்,ப.119). பூசணி பளியர் குடியிருப்புகளுக்குள் புலி, யானை வராமல் காப்புக் கட்டுகிறார். கானகன் நாவலில் பளியன் வாசியைப் புலி முகர்ந்து பார்த்து, அவனை அங்கீகரிக்கும் இடம் உண்டு. வாசி சொல்வதைக் குட்டிப்புலி கேட்கும் இடமும் உண்டு. ஆகப் பழங்குடிகளின் இனவரைவியல் கூறுகளை நாவல் பயன்படுத்தியிருக்கிறது.

தேனி மாவட்டத்தில் உள்ள கம்பம் மெட்டு, போடி அகமலை, வருசநாடு ஆகிய பகுதிகளில் வாழும் பளியர்களின் வாழ்வியலைக் களமாக நாவல் வரித்துக்கொண்டுள்ளது. மொக்கநிலைப் பளியக்குடிதான் அகமலை வட்டத்தில் பெரிய பளியக்குடி(ப.32) எனும் காட்டுப் பளியர்கள், புதர்ப் பளியர்கள் என்ற இரு புலத்தாரையும் இணைத்துக்கொண்டு கதைக் கட்டமைப்பை நிகழ்த்தியுள்ளார் ஆசிரியர். பளியர்களின் மலைவாழ்க்கை, குடிசை வீடுகள், பெண்களின் தனித்துவம், குடிகளின் தொடர்ச்சி, பழங்குடிகளின் வேட்டை நுட்பங்கள் என நாவல் இனவரைவியல் (Ethnography) தன்மையில் அமைந்துள்ளது. மலைவாழ்ப் பளியர்களின் உணவிற்கான வேட்டை தடைசெய்யப்பட்டு, நிலவாழ்க் குடிகளுக்கான சாகச வேட்டைக்கு, நிர்வாகம் அனுமதி அளித்திருப்பதை நாவல் விமர்சித்துள்ளது.

பளியர்களின் வேட்டை என்பது உணவிற்காக நிகழ்த்தப்படுவது. அதற்கு எல்லை, கட்டுப்பாடு உண்டு. நிலக்குடிகளின் வேட்டை என்பது சாகசம் நிறைந்தது. வணிகத்திற்கானது. கட்டுப்பாடற்றது. பெரும் அழிவை அரங்கேற்றுவது. ஜமீன் தனது பெரும்படைபலத்துடன் காட்டிற்குள் செய்யும் வேட்டைகள் கொடூரமானவை(ப.106). தோப்படியான் பூசணி பெரும் வேட்டையைத் தடுத்துப் பார்க்கிறார். ‘எல்லா மிருகத்துக்கும் இனவிருத்தி ஆகுற நேரம், இப்ப வேட்டைக்குப் போறது சுத்தமா நல்லா இல்ல’(ப.115) என்கிறார். காட்டின் உபரியையே பளியர்கள் பயன்படுத்துவர். விலங்குகளை விரட்ட மலைக்குடி மேளம் அடிக்கிறது. (ப.251) ஆனால், நிலக்குடியினர் வெடியை வெடிக்கச் செய்கின்றனர். வேட்டைக்குக் கருமாண்டிகளே வழிகாட்டி என்பதால் முதலாளிகள் கருமாண்டிகளை அடுத்தடுத்து உருவாக்கிக் கொண்டே இருக்கிறார்கள். தங்கப்பனின் தந்தை பெரிய கருமாண்டியின் மறைவிற்குப் பின், தங்கப்பனைச் சின்னக் கருமாண்டியாக உருவாக்குகிறார்கள். பிறகு வாசியைக் கருமாண்டியாக்கத் திட்டமிடுகிறார்கள். கருமாண்டிகளை வைத்தே வனத்தை அழிப்பதுதான் பெருங்குடிகளின் வாடிக்கை. ஆனால், வாசியை, சின்னக் கருமாண்டியாக ஜமீன் உருவாக்க முயற்சித்தாலும் அவன் அதை மறுத்து, தனது குலத்தைக் காக்கப் போராடுகிறான்.

வாசி, வேட்டைக்குத் தப்பிய மான்குட்டியை வளர்ப்பதிலிருந்து அவனிடம் மாற்றம் நடைபெறுகிறது. கட்டையனோடு கொண்ட நட்பு, பாட்டா பூசணியின் அறிவுரை ஆகியவற்றின் மூலம் தன்னைக் காட்டாளனாக மீட்டுக்கொள்கிறான். வாசி, கருமாண்டி இல்லை, அவன் ஒரு பளியன் என்பதை, வனமும் மானின் மரணமும் அவனுக்கு உணர்த்துகின்றன. பூசணிக்குப் பிறகு ‘தோப்படியானாக’ வாசி வருவான் என்று பளியக்குடி, நம்புகிறது. பூசணியால் உருவாக்கப்பட்டவன் வாசி. தன்னுடைய ‘பாட்டா’ தலைமையைப் பெற்றுக்கொள்ளும் தகுதி வாசிக்கு மட்டுமே உண்டு என நம்புகிறார், பூசணி. வாசியின் தந்தை சடையன் விலங்குகளோடு விலங்காகவே மாறிவிடுகிறான். அவன் விலங்கின் மொழியைக் கற்றுக்கொள்கிறான். அவனது பேச்சை விலங்குகள் கேட்கின்றன. பளியர் குடியைத் தாக்க வரும் யானைக் கூட்டத்தை பெருங்களிறின் மீதேறி அடக்குகிறான். குடிகள் அனைத்தும் தரையில் விழுந்து அவனையும் பெருங்களிறையும் வணங்குகின்றன(ப.253). சடையன் கண்களால் தன்னுடைய மகன் வாசியிடம் வனத்தைக் காக்கக் கட்டளையிட்டு மறைகிறான்.

அன்சாரி, தமீம், இஸ்மாயில் ஆகியோர் மலைக் காட்டில் மாட்டுக்கிடை போட்டு வாழும் இடையர். இவர்களது வாழ்க்கை நாவலில் யதார்த்தமாக இடம்பெற்றுள்ளது. இஸ்லாமியர்களுக்கும் பழங்குடிகளுக்குமான உறவு நுட்பமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அன்சாரி, தன்னை விட வயதில் மூத்த பளிச்சி சகாயராணியைத் திருமணம் செய்து கொள்கிறான். திண்டுக்கல் சிறுமலைப் பளியர்கள் இஸ்லாமியர்களோடு தொடர்பு வைத்துக்கொள்வதை கள ஆய்வில் அறிந்து கொள்ள முடிந்தது. போடி குரங்கணி, அகமலை வாழ் பளியர்களுக்கும் போடி வாழ் இஸ்லாமியர்களுக்கும் நல்ல உறவு உண்டு. எஸ். செந்தில்குமாரின் ‘கழுதைப்பாதை’ நாவல் இதனைப் பதிவு செய்துள்ளது. சிறுமலை, அடுக்கம், திருவில்லிபுத்தூர் பளியர்கள் உள்ளூர் நகரவாசிகளிடம் தொடர்புகொண்டு தங்கள் தொழிலை விஸ்தரித்துக் கொண்டு வாழ்கின்றனர். பக்தவத்சல பாரதி, ‘பழங்குடியினர் சமவெளியில் வாழும் மையநீரோட்ட மக்களோடு ஒரு தொடர்ச்சியைக் (tribe-peasant continuum) கொண்டுள்ளனர்’ என்பது (பண்பாட்டு உரையாடல், ப.108) இங்கு கவனிக்கத்தக்கது. நாவலில் வரும் பூசணி, தங்கப்பன் இருவரும்

கொடுவிலார்பட்டி குடிகளுடன் கொள்ளும் நட்பு இயங்கியல் தன்மையுடையது. தனது மனைவி சகாயராணி, அன்சாரியின் பரணில் இருப்பதைப் பார்த்து தங்கப்பன் மகிழ்சியடைகிறான். தனது வீழ்ச்சியிலிருந்து அவள் பாதுகாப்பாகத் தன்னைத் தகவமைத்துக்கொண்டது அவனுக்கு ஒரு வகையில் ஏற்புடையதே. அதுவும் இஸ்லாமியரின் உறவு பழங்குடிகளுக்குப் பாதுகாப்பான ஒன்றுதான். சமூக மாற்றத்தையும் மற்றமையுடனான (others) நட்பையும் பழங்குடிகள் எப்போதும் விரும்புகிறார்கள். பளியர் செயல்பாட்டாளர் மல்லிகா கல்வி, வீடு, இட ஒதுக்கீடு, வேலைவாய்ப்பு என்பவை பிற சமூகங்களுக்குக் கிடைப்பது போன்று எங்களுக்கும் வழங்க வேண்டும் என்கிறார் (பார்க்க-https://www.youtube.com/watch?v=U9vWvX6D8fI). அது உரிமை அடிப்படையில் மட்டுமல்ல மாற்றத்தின் பேரிலும் அமைவது. ஆனால், மையநீரோட்ட மக்களாகத் தங்களை வலிந்து மாற்றுவதையே மறுக்கிறார்கள் பழங்குடிகள். பளியர்களைச் சந்தித்து திரட்டிய தகவல்களின் அடிப்படையில் இந்த நாவல் எழுதப்பட்டுள்ளது எனும் நாவலாசிரியரின் கூற்று (முன்னுரையில் ஆசிரியர்) நாவலிற்கு நம்பகத்தன்மையைத் தந்துள்ளது.

பளியர்களின் நம்பிக்கைகளான பளிச்சி வழிபாடு, பிரசவத்திற்கு மருத்துவச்சி வைத்துக் கொள்ளும் பழக்கமின்மை, அதிகாலையில் குழந்தைப் பிறப்பை விரும்புவது(வனம் உயிர்ப்புடன் இருக்கும் நேரம்)தேனும் தினை மாவும் பிரதான உணவாக இருப்பது(ப.137) புலியை, வேங்கை மரத்தை வழிபடுவது, பறவை, மரம், விலங்குகளோடு யதார்த்தமாகப் பேசிக்கொள்வது(சடையன்), கோடையில் வரும் சித்ரா பௌர்ணமியில் நடக்கும் பளிச்சி வழிபாடு(ப.168), இனப்பெருக்க காலத்தில் விலங்குகளை வேட்டையாடுவதில்லை ; தீப்பெட்டியை மலைக்குக் கொண்டு செல்வதில்லை; தன்னைப் பார்க்க வந்த மருமகளுக்குத் தங்கப்பன், யானைத் தந்தத்தைப் பரிசாகக் கொடுப்பது(கானகன்,ப.248) எனப் பளியர்களின் பண்பாட்டியல் கூறுகள் நாவலில் இயல்பாக இடம்பெற்றுள்ளன. வேங்கை மரத்தையும் புலியையும் பளியர்குடிகள் வழிபடுவது சங்க காலப் பண்பாட்டின் தொடர்ச்சி எனலாம்.

கண்ணகி, சேர நாட்டின் அடர் வனத்தில் தெய்வமானதைக் கண்டறிந்து உயிர்ப்பித்தவர்கள் பளியர்களே. பேரியாற்றங்கரையில் அடிகளாருக்கும் சாத்தனாருக்கும் கண்ணகியின் கதையைச் சொன்னவர்கள் பழங்குடிகளே என்கிறது சிலப்பதிகாரம். கண்ணகியைத் தெய்வமாக முதலில் வணங்கி கோவிலைப் பாதுகாத்தவர்களும் பளியர்களே என்பது வரலாறு. நாவல் வட்டார வரலாற்றை கவனத்தில் கொண்டுள்ளது. நாவலாக்கம் வட்டாரச் சூழல்களை (local Situations) மையப்படுத்தியுள்ளது. ''தவளை நாட்டு பளியக்குடியின் கட்டுப்பாட்டிலிருக்கும் முப்பது பளியக்குடிக்கும் குலசாமி கோயில், கம்பத்திற்கு மேலாக காட்டிற்குள்ளிருக்கிறது, பளிச்சியின் வீடு. கண்ணகியை வணங்க வரும் அத்தனை பேரும் பளிச்சியைத் தாண்டித்தான் போக வேண்டும். எங்கும் ஆதரவின்றி திக்கற்றுப் போனவளை வனமகள் பளிச்சி அரவணைத்துக் கொண்டாளென பளியர்களின் கதைகள் சொல்கின்றன"(ப.33).

துப்பாக்கி ஒரு வனத்தையே அழிக்கும் ஆயுதமாக இருக்கிறது. தங்கப்பன் துப்பாக்கியைத் தன் உடலின் ஒரு பகுதியாகவே நினைக்கிறான். சுப்புவிடம் துப்பாக்கியைக் கொடுத்து அதை இயக்குவதைக் கற்றுக்கொடுக்கும்போது அவளோடு இணைகிறான். ''என் உடம்புல ஒரு பாதி துப்பாக்கி" (ப.68)என்கிறான். எளிய குடிகளிடம் ஆயுதம் ஏற்படுத்தும் பதற்றம் கடுமையானது. செல்லாயி, வில், அம்பு வைத்த வேட்டைதான் நம் பளியருடையது என்கிறாள். ஆனால், ஜமீன், முதலாளிகள், வேட்டையின் ஆயுதமாகத் துப்பாக்கியைப் பயன்படுத்துகின்றனர். துப்பாக்கிகள் பளியர்களை மலையிலிருந்து வெளியேற்றுகின்றன. மாதையன் மனைவி வேம்பு சாமியாடும்போது ஊரைப்பார்த்து மண்ணை வாரித் தூற்றுவது(ப.72) பொருள் பொதிந்த ஒன்று. பளியர்களும் காடும் ஒன்றை மற்றொன்று சார்ந்திருக்கின்றனர். ''பளியனும் இந்த வனமும் தனிஉலகம். இரண்டில் ஒன்று பிரிந்தால் இன்னொன்று வெகு காலத்திற்கு ஜீவித்திருக்காது''(கானகன், ப.72) என்கிறார் பூசணி. ''மலைமக்களின் பாதுகாப்பில் காடுகள் இருந்தபோது அவை அழிக்கப்படவில்லை. குறிப்பாக வனச் சட்டத்திற்குப் பிறகுதான் ஜவ்வாது மலையில் இருந்த 90% சந்தனமரங்கள் அழிக்கப்பட்டுள்ளன" என்கின்றன ஆய்வுகள் (பக்தவத்சலபாரதி, மலைவாசம், ப.83). தோப்படியான் பூசணி ''காட்டில் எல்லாம் இடம் மாறும், துரத்தப்படும், அல்லது கொல்லப்படும்''(ப.74) எனச் சொல்வது வெற்று வார்த்தைகள் அல்ல.

கஞ்சாத் தோட்டங்களுக்கு வேலைக்குச் செல்லவேண்டிய பளியர்களின் அடையாள நெருக்கடிகளையும் நாவல் பதிவு செய்துள்ளது. தேன் எடுத்து உண்பதும் அவற்றை விற்பனை செய்வதும் அவர்களின் உணவு அடையாளம். ''மரப்பொந்து ஒன்றில் தேன் கூட்டினைக் காண நேர்ந்தால் அது இவர்களுக்குச் சிறந்த சுவை விருந்தாகும். புகையூட்டித் தேனீக்களை ஓட்டிய உடனே அவர்கள் வெறி கொண்டவர்களாகத் தேன் கூட்டினைப் பறித்து அவ்விடத்திலேயே மெழுகு முதலியவற்றோடு கூட விழுங்கத் தொடங்குவர்''(ப.60) என்கிறது நாவல். நாவலின் பிற்பகுதியில் நோய்வாய்ப்பட்ட நிலையில் தங்கப்பன் தேன் கிடைத்தால் மகிழ்ச்சியாக இருக்கும் என்கிறான். பணப்பயிர்களில் போடப்படும்

நச்சுக்கொல்லியால் தேனீக்கள் இடம் பெயர்கின்றன. பளியர்களின் தேனெடுக்கும் தொழில் இன்று கேள்விக்குறியாகி வருகிறது. வேர்கள், கொட்டைகள், மரப்பிசின், மூலிகை போன்றவற்றை எடுத்துக் குறைந்த விலையில் விற்பனை செய்து வாழும் இனக்குழு, கஞ்சாத் தோட்டங்களில் வாழும் நிர்பந்தம். போடி அகமலை, அண்ணா நகர் போன்ற இடங்களுக்கு பெரியகுளத்திலிருந்து தார்ச்சாலை போடப்பட்ட பிறகு நகர மக்கள் அதிகமாக வரத்தொடங்கியுள்ளனர். பளியர்கள் இரண்டாம் நிலையினராக மாறி வருகின்றனர். போடி அகமலைப்பகுதிகளில் பணப்பயிர்களான காபி, மிளகு, போடப்பட்டதால் பளியர்கள் சுமை கூலிகளாக மாறிப்போனதை போடி அகமலை வாழ் சுப்ரமணி (59) நம்மிடம் பகிர்ந்து கொண்டார். மலைவாழ் இனக்குழு கொஞ்சம் கொஞ்சமாகத் தனது மலை வாழ் உரிமையை இழக்கும் அபாயத்தை நாவல் காட்டுகிறது. நிர்வாகங்கள் நிலத்தில் ஒதுக்கிய காலனியில், பளியர்குடிகள் வாழ இயலவில்லை. இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர்களுக்குப் புதிய குடியிருப்புகள் அந்நியமாக இருக்கிறது. பூசணி வனஅதிகாரியிடம் “ இந்தக் காடுதாங்க எங்க ஆசான், இங்க படிக்க முடியாததையா ஊர் உலகம் எங்களுக்குச் சொல்லிக் குடுத்துடப் போகுது?" என்கிறார்.

தாங்கள் வாழும் பாறைப் புடவுகளில் பல்வேறு தாவரங்களைச் சுதைமண்ணுடன் கலந்து பாறை ஓவியங்களாக வரைந்து வைப்பது பளியர், குறும்பர்களின் வழக்கம். குயிலம்மா விரும்புவது தன்னை அல்ல வாசியைத்தான் என்பதை அறிந்த கட்டையன் பொடவுக்குள் சென்று ‘தனக்கேயான தன்விருப்பங்களையெல்லாம் பொடவின் உள்பக்கமாய்ச் சித்திரங்களாய்த் தீட்டி வைத்திருக்கிறான். பொடவு இருட்டில் உட்கார்ந்து அதையே பார்த்துக் கொண்டிருந்தான்’ (ப.230). “மழை வரும்போது பொடவுக்கு ஓடுவதும் மழை இல்லாத நாட்களில் குடிசையில் படுத்துக் கொள்வதுமாய் அவர்களின் இரவுகள் கழிந்து கொண்டிருந்தன“(ப.67) எனும் நாவல் பகுதிகள் பளியர்களுக்கும் பொடவிற்கும் உள்ள பண்பாட்டுத் தொடர்பைக் காட்டுகின்றன.

பணக்கட்டுகள், டிராக்டர், ரேடியோ என்பன பளியர் குடிகளுக்குள் நுழைகின்றன. தினைஅரிசி மறைந்து காய்கறி உணவாக மாறுகிறது. மலையாளிகளும் தேனி முதலாளிகளும் கஞ்சாப் பயிரிட்டு வனத்தை வணிகமாக மாற்றுகின்றனர். ஜீப்கள் செல்வதற்கு ஏற்ப சாலை வசதிகள் செய்யப்படுகின்றன. மலைவாழ் நல அமைப்பு, மருத்துவ முகாம் எனத் தொண்டு நிறுவனங்கள் செய்யும் அரசியலில் பளியர்களின் வாழ்வில் நிலக் குடிகள் தங்களின் தொழில்சார்ப் பண்பாட்டியலைத் திணிக்கின்றனர். ஆகக் கானகன், பளியர்கள் நடைமுறையில் படும் அவலங்களை வீழ்ச்சிகளாகக் காட்டி, அவர்களின் கடந்த கால வாழ்வை உன்னதமாக விஸ்தரித்துப் பேசுகிறது. காணாமல் போகும் ஜமின்தார், குற்ற உணர்விற்கு உள்ளாகும் தங்கப்பன், புலியால் தனது உயிர் போவதைத் தங்கப்பன் ஏற்றுக்கொள்வது என அநீதியின் வீழ்ச்சிகளைக் காட்டியிருப்பது நாவலின் பலம்.

போடி மெட்டு, அகமலை, கம்பம் மெட்டு, குமுளி ஆகிய பகுதிகளில் வாழ்ந்துவரும் பளியர்களின் நாற்பது ஆண்டு வரலாற்றில் நடந்த அகப்புற மாற்றங்களை நாவல் கவனத்தில் கொண்டுள்ளது. பழங்குடிகள் கூட்டு வாழ்வியல் சிதைக்கப்பட்டு ‘தனிநபர் நிலைக்கு’ தள்ளப்பட்டுக்கொண்டிருப்பதை வாசி, சடையன் எனும் கதை மாந்தர்கள் வழி நாவல் நிகழ்த்தியுள்ளது சிறப்பு. பூசணி முன்வைத்த பாதீடு, கூட்டுவாழ்க்கை, சமத்துவம் வாசியால் தொடரலாம்.

பளியர்களின் மொழி நாவலில் கைகூடவில்லை. தேனி வட்டாரப் பிரமலைக் கள்ளர்கள் மொழியே (சூதானமா, பெரியாம்பிள, இருக்காப்ள) பயன்படுத்தப்பட்டிருக்கிறது. உரையாடல் குறைவு. பெண்களுக்கிடையேயான உரையாடல் கூடிவந்திருந்தாலும் இனவரைவியல் உரையாடல் தனித்து அமைந்து நிகழ்த்துதல் பனுவலாக நாவல் மாறவில்லை. பளியர்களுக்கும் பிற பழங்குடிகளான ஊராளி, புலையர், மண்ணாடி, முதுவான், போன்றவர்களுக்குமான தொடர்புகள் நாவலில் பேசப்படவில்லை. பழங்குடிகளிடையேயான பண்பாட்டிடைத் தொடர்பு முதன்மையானது, நாவல் அவற்றைக் கண்டுகொள்ளவில்லை. இவற்றை நாவலின் பின்னடைவுகளாகக் கருதமுடியும்.

பளியர்களின் வாழிடம், உணவுப் பண்பாடு, வழிபாட்டு முறைகள், சடங்குகள், உறவுநிலைகள், தொன்மங்கள், இடப்பெயர்ச்சிக் கதைகள், பழமொழிகள், அடையாள நெருக்கடிகள் எனப் பளியர்களின் வாழ்வியலை முதன்மையானதாகக் கொண்டு கானகன் அமைந்திருப்பது வரவேற்கத்தக்கது.

**பயன்பட்ட பிரதிகள்**


- லஷ்மி சரவணகுமார், 2016, கானகன், மலைச்சொல் பதிப்பகம், ஊட்டி - 643 001.
- பக்தவத்சல பாரதி, 2017, தமிழகப் பழங்குடிகள், அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம், திருச்சி - 621 310.
- 2017, பண்பாட்டு உரையாடல், அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம், திருச்சி - 621 310.
- 2019, மலைவாசம், பாரதி புத்தகாலயம், சென்னை - 600 018.



கட்டுரையாளர், உதவிப்பேராசிரியர்,

மதுரைக்கல்லூரி, மதுரை.



கட்டுரை

# நன்னூல் ஓர் இன்னூல்

மு.சத்யா

இலக்கிய இலக்கண வளப்பங்களால் உலகிற்கே பண்பாடுகளைப் பரப்பிப் பறைசாற்றிய மொழி தமிழ். விழியாக மொழியைக் கொள்ளுவோமானால் இமைகளாக இலக்கண நூல்களைக் கருதவேண்டும். விழிகளுக்கு இமைகள் பாதுகாப்பாக இல்லையென்றால் கண்களின் பாதுகாப்பு காணாமல் போய்விடும். இமைக்காப்பைப் போல மொழிவளர்ச்சிக்கு இலக்கணக் காப்பு இன்றியமையாததாகிறது. ஆனால் உலகம் இலக்கணத்தை வேம்பின் பைங்காய் என இக்காலத்தில் கருதுகின்றது. மேலும் மகளிர்க்கு நிறைகாப்பைப் போல மொழிக்கு இலக்கணக் காப்பின் தேவையை அறிந்து இன்றைய தமிழகத்தில் பலரும் இலக்கண ஆய்வுத்துறையில் பெரிதும் ஈடுபட்டு வருகின்றனர்.

**நன்னூல்**

தொல்காப்பியத்தினை முதல் நூலாய் ஏற்று நன்னூல் என்னும் தமிழ் இலக்கண நூலைச் சமண சமயத்துறவி பவணந்தி எழுதியுள்ளார். எழுத்துகள் தோன்ற முதற்காரணம் அணுத்திரளே என்று கூறியமையாலும் அசோகமரத்தின் நிழலில் அமர்ந்த அருகக்கடவுளை வணங்குவதாலும் இவர் சமணம் சார்ந்த ஒரு துறவி என்பது புலப்படும். மைசூரில் நாசபுரம் தாலுக்காவிலுள்ள சனகை என்னும் சனநாதபுரத்தில் தோன்றியவர் பவணந்திமுனிவர். பவணந்தியாரை ஆதரித்தவன் கங்க நாட்டினை ஆண்ட சீயகங்கன் என்னும் குறுநிலமன்னன். இவருடைய காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டின் இறுதியும். 13ஆம் நூற்றாண்டின் தொடக்கமும் (கி.பி. 1178-1218) ஆகும். மூன்றாம் குலோத்துங்கச் சோழனுடைய ஆட்சியில் சிற்றரசனாக இருந்தவன் சீயகங்கன். இவனுடைய வேண்டுகோளுக்கிணங்கிப் பவணந்தி முனிவர் நன்னூலை இயற்றிப் புகழ்பெற்றார். இவர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திற்கும் இலக்கணம் எழுதியிருக்கலாம் என்ற ஐயம், இவர் பாயிரத்தில் ‘‘அரும்பொருள் ஐந்தையும் யாவரும் உணர’’ எனச் சுட்டியிருப்பதால் இது தெரிகிறது. ஆனால் எழுத்து, சொல், என்னும் இரண்டிற்கு மட்டுமே நன்னூலில் இலக்கணம் எழுதப்பட்டுள்ளது.

நன்னூல் பாயிரத்தில் 55 நூற்பாக்களும், எழுத்ததிகாரத்தில் 202 நூற்பாக்களும், சொல்லதிகாரத்தில் 205 நூற்பாக்களும் என 462 நூற்பாக்களைக் கொண்டும் எழுத்ததிகாரம் ஐந்தியல்களையும் சொல்லதிகாரம் ஐந்தியல்களையும் கொண்டும் உள்ளது. இந்நூல் சிறப்புப் பாயிரமாக ஏழு மதம், பத்து குற்றம், பத்து அழகு, ஆசிரியர் வகை, மாணாக்கர் வகை ஆகியன கூறப்பட்டுள்ளன.

> “ஆயிரம் முகத்தான் அகன்றதாயினும்
> பாயிரமில்லாபனுவலன்றே” (நன்னூல் - 54)

என்பர். ஒரு நூல் பலவேறு வகையான பொருள்களில் எழுதப்பட்டிருந்தாலும் பாயிரம் என ஒன்று கூறப்பெறாவிட்டால் அதனைச் சிறந்த நூலாக ஏற்றுக்கொள்ள இயலாது.

**எழுத்து**

மொழியைப் பிழையின்றிப் பேசவும், எழுதவும், படிக்கவும் இலக்கணத்தைக் கற்க வேண்டும். இதற்குப் பேருதவியாக இன்றைய தமிழர்களுக்குக் கிடைத்த பெரும்சொத்துதான் நன்னூலாகும். எழுத்திலக்கணப்

பகுதிகளாக எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதல், ஈறு, இடைநிலை, போலி, பதம், புணர்ச்சி எனப் பன்னிரண்டு கூறுவார்.

"உயிரும் உடம்புமாம் முப்பதுமுதலே"
(நன்னூல் -59)

என்று முதலெழுத்துக்கு இலக்கணம் கூறும் ஆசிரியர் உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் எனப் பத்து வகை சார்பெழுத்துகளையும் சுட்டி நம்மைத் தெளிவுபடுத்துகிறார்.

"உயர்திணை என்பனார் மக்கட் சுட்டே" *(தொல்-பொருள்-நூற்பா-1)*

எனும் நூற்பாவால் உயர்திணை என்று சொல்லப்படுபவர்கள் மக்களைச் சுட்டும் பெயர்களுக்குரியவர்கள் என்ற தொல்காப்பியரின் கருத்தை நாம் அறிந்துள்ளோம். ஆனால் பவணந்தியார்

"மக்கள் தேவர் நரகர் உயர்திணை

மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை" *(நன்னூல் - 261)*

எனக் குறிப்பிடுகிறார். மக்களையும் தேவர்களுக்குரிய பெயர்களையும் உயர்ந்த ஒழுக்க முடையவர்களெனக் கொள்ள நேரும்போது, நரகர் என்பவர்களை உயர்ந்த பண்பாளர்கள் பட்டியலில் சேர்த்து உயர்திணையாய்க் கொள்வது எங்ஙனமாகும் எனப்பலர் ஐயுறும் நிலை ஏற்படுகிறது. இருந்த போதிலும் பவணந்தி முனிவர் துணிந்து பகரும் பாங்கு அன்றிருந்த சமணசமயத்தின் வலிமைப் போக்கைக் காட்டுகிறது.

பெயர்ச்சொற்களைப் பொதுவாகச் சுட்டும்போது தொன்றுதொட்டு வழங்கப்படும் பெயர்களை இடுகுறிப்பெயர் என்றும் ஏதேனும் காரணத்தால் பெயராக வருவது காரணப்பெயர் என்றும் சொல்வர்.

இதனை மரம், கல், மண், நீர், இடுகுறிப்பெயர். உழவர், அழகர், தொழிலாளர், திருடர் - காரணப்பெயர்கள்.

"இடுகுறிகாரணப் பெயர்ப்பொதுச் சிறப்பின" *(நன்னூல் - 62)*

என்று நன்னூலார் கூறுகிறார். ஓசையளவால் குறைந்து ஒலிப்பதைக் குறிலென்றும், நீண்டு ஒலிப்பதை நெடில் என்றும் பகுத்துரைத்துத் தமிழிசை உலகிற்குப் பேருதவி புரிந்துள்ளார். குறுக்கங்களும், அளபெடைகளும் மொழியாராய்ச்சி மற்றும் இசையாராய்ச்சி செய்வோருக்குப் பெரிதும் பயனளிக்கின்றன.

உலக மொழிகளிலேயே எழுத்துகளின் பிறப்பிடங்களைக் கண்டறிந்து இலக்கணம் கூறியுள்ளது தமிழ்மொழியே. தொல்காப்பியமும் நன்னூலும் எழுத்துகளின் பிறப்புப் பற்றி இறுமாந்து கூறியுள்ளன.

**சான்றாக**

"முயற்சியுள் அ ஆ அங்காப் புடைய"
(நன்னூல் -76)

எனும் நூற்பாவால் அ ஆ எனும் ஈரெழுத்துப் வாயின் அங்காப்பில் தோன்றும் என நன்னூல் இயம்புகிறது.

ஏன நன்னூல் இயம்புகிறது.

நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் புணர்ச்சியின்போது அடையும் மாற்றங்கள் பல நூற்பாக்களால் கூறப்பட்டுள்ளன. பத வகைகளுள் பகுபதத்தின் உறுப்புகளான பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் முதலியவற்றின் பணிபற்றி மிகச் சிறப்பாக இங்குக் கூறப்பட்டிருப்பது மொழிவளர்ச்சிக்கு வழிவகுக்கிறது. வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல் முதலான செய்யுள் விகாரங்களும் எடுத்தாளப்பெறுகின்றன. இருமொழி இணைவில் உயிரெழுத்துகள் இருக்கும்போது ஆங்கு உடம்படுமெய் தோன்றும் எனவும் கூறுகிறார்.

" இஈஐவழியவ்வுமேனை
உயிர்வழி வவ்வு மேமுனிவ் விருமையும்
உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்"
(நன்னூல் - 162)

இகர, ஈகார, ஐகார, ஏகாரங்கள் நிலைமொழி ஈற்றில் நிற்க வருமொழி முதலில் உயிர்எழுத்து வரின் 'யகர' மெய் உடம்படுமெய்யாகத் தோன்றும். ஏனைய உயிரெழுத்துகளும் ஏகாரமும் நிலைமொழிஈற்றில் நிற்க 'வகர' மெய் உடம்படுமெய்யாகத் தோன்றும் என்று இயம்புகிறார்.

**சான்றுகள்;**

| | | |
|---|---|---|
| மணி | + அழகு | = மணியழகு |
| பூ | + அழகு | = பூவழகு |
| சே | + அடி | = சேவடி |
| சே | + அடி | = சேயடி |

நன்னூல் சொல்லதிகாரத்தில் பெயரியல் முதலாக ஐந்து இயல்களும் பின் அணியிலக்கணமும் கூறப்பட்டுள்ளன. தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழியும் திணை, பால், எண், இடம், காலம் பற்றியும் கூறியிருப்பது தமிழின் சிறப்பைத் தரணிக்குக் காட்டுவதாகும்.

இலக்கணமுடையது, இலக்கணப்போலி மரூஉ என்னும் மூன்று இயல்பு வழக்குகளும்

இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என்னும் மூன்று தகுதிவழக்குகளும் பேசப்படுவதோடு,

"செந்தமி ழாகித் திரயாதுயார்க்கும்

தம்பொருள் விளக்கும் தன்னை இயற்சொல்"
*(நன்னூல் -271)*

என்றும் கூறிச் சொற்களின் பாகுபாட்டைத் தெளிவுபடுத்துகிறார். பெயர்ச்சொற்களின் வகைகள், வினைமுற்றுகள், எச்சங்கள், வேற்றுமைகள் பற்றி எல்லாம் நன்னூல் திறம்படப் பேசுகிறது. வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை முதலான தொகைநிலைத் தொடர்கள் ஈண்டுக் கூறப்பட்டு மேலும்,

"எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே"

(நன்னூல் - 388)

என்றெல்லாம் இலக்கணக் கோட்பாடுகளை வகுத்துச் சான்றோர்களால் இயற்றப்பெற்ற செய்யுள்களுக்குப் பொருள் கொள்ளுகின்ற பொருள்கோள்களின் வகைகளாகிய யாற்றுநீர், மொழிமாற்று, நிரல்நிரை, பூட்டுவில், தாப்பிசை, கொண்டுகூட்டு, அளைமறிபாப்பு, அடிமறிமாற்று என்பனவற்றால் உணர்த்துகிறார் பவணந்தி.

உயிராகிய பொருளையும் உயிரற்ற பொருள்களையும் உலகத்துள்ள பொருள்களின் இருவகைகளாகப் பிரித்தறிந்து அவற்றின் குணங்களையே பண்புகளாக உரைப்பார்கள். இவற்றுள்ள நிலையில் உயிர்ப்பொருள்களின் வகைகளை

"மெய்ந்நா மூக்குநாட்டம் செவிகளின்
ஒன்று முதலாக்கீழ்க் கொண்டுமேல் உணர்தலின்
ஓரறிவு ஆதியா உயிர் ஐந்தாகும்"


உற்றறியும் மெய்யும், சுவைத்தறியும் நாவும், நுகர்த்தறியும் மூக்கும், கன்டறியும் கண்ணும், கேட்டறியும் செவியும் முறையே ஊறு, சுவை, நாற்றம், ஒளி, ஓசை என்னும் ஐந்தும் அறியும் புலன்களாகும். நிரல்நிரையாக ஒவ்வோர் அறிவையும் பெற்று ஓரறிவுயிர் முதலாக ஐந்துயிர்கள் என நன்னூல் சிறப்பாகக் கூறுகிறது. இன்று நாம் நன்மை தீமைகளைப் பகுத்தறியும் சிந்தனைத் திறனை ஆறாம் அறிவாகக் கொண்டு பகுத்தறிவு என்கிறோம்.

**முடிவுரை**

இவ்வாறு எளிமையும், இனிமையும் அமைய இலக்கண நூல் வடித்துத் தந்த பவணந்தி முனிவர் உயிர்களுக்கு நன்மையை வழங்குகின்ற சமயமாகிய சமணத்தைச் சார்ந்தவர். எவ்வுயிர்க்கும் தீங்கு நேராதவாறு நன்மையையும் இன்பத்தையும் வழங்குகின்ற சமண மதத்தின் உயரிய கோட்பாடுகளை உள்ளத்தில் கொண்டு வாழ்ந்த முனிவராகிய பவணந்தி படைத்த இலக்கண நூலாகிய நன்னூல் ஓர் இனிமைபயக்கும் இன்னூலாகும். மொழியறிவு பெற்றுச் சிறக்க விழைவோர் யாவரும் நன்னூலார் தந்துள்ள எளிய இலக்கண நூலைக் கற்றிட வேண்டும். இந்த இனிய நூலின் பயனை எல்லாரும் துய்க்க வேண்டும் என்பதே நோக்கமாகும்.

கட்டுரையாளர், முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயாராய்வுத் துறை, மருதுபாண்டியார் கல்லூரி, தஞ்சாவூர்.

நியூ செஞ்சுரி புத்தக நிறுவன
புதிய வெளியீடு




₹ 200

**திருநெல்வேலி நினைவுகள்**

**சௌந்தர மகாதேவன்**

ஒரு வரிசையற்ற வரிசையில் நினைவின் ஊற்றுக் கண் திறந்து, இன்றைய தினத்தின் தோட்டத்தில் சுனை நீர் பெருக்கும். அப்படித் திறந்திருக்கும் ஊற்றுக் கண், அப்படிப் பெருகும் தாமிரபரணி இந்தத் தொகுப்பு.

- *வண்ணதாசன்*

கட்டுரை



# கவி கா.மு.ஷெரீபின் களப்பாட்டு

பேராசிரியர் உ. அலிபாவா

தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் மிகுந்த ஈடுபாட்டுடன் தொடக்கத்தில் செயல்பட்ட கவி கா.மு. ஷெரீப் 1942 ஆம் ஆண்டு இந்திய தேசியக் காங்கிரஸில் இணைந்தார். இந்திய விடுதலைப் போரில் பங்குபெற்றார். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்துகொண்டு சிறை சென்றார். சுதந்திர தாகம் கொண்ட கவிஞர் பின்னாளில் 21.11.1946 இல் தொடங்கப்பட்ட தமிழரசுக் கழகத்தில் இணைந்தார். ம.பொ.சியைத் தலைவராகக் கொண்டு இயங்கிய தமிழரசுக் கழகம் புதிய தமிழக அமைப்பையும் தமிழக எல்லை மீட்பையும் முழுமூச்சாகக் கொண்டு செயல்பட்டது. ம.பொ.சிக்கு அடுத்த நிலையில் கழகத்தின் பொதுச் செயலாளராகவும் தமிழரசுக் கழகத்தின் போர்ப்படைத் தளபதியாகவும் தமிழரசுக் கழகத்தின் கவிஞராகவும் தமிழக எல்லை மீட்புப் போராளியாகவும் கவி கா.மு. ஷெரீப் செயல்பட்டார்.

தமிழரசுக்கழகம் நடத்திய தமிழக எல்லை மீட்புப் போராட்டங்களில் கலந்துக் கொண்ட தொண்டர்களுக்கு உற்சாக மூட்டிப் போராட்டத்தில் தீவிரமாகக் ஈடுபட வைப்பதற்காகப் பாடப்பட்ட பாடல்களைத் தொகுத்துக் கவிஞர் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ‘களப்பாட்டு’ எனும் நூலை வெளியிட்டுள்ளார். இந்நூலில் எல்லை மீட்புப் போராட்டக் களங்கள் பலவற்றில் பாடப்பெற்ற பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த நூலின் முன்னுரையிலேயே தமிழக எல்லை மீட்புப் போராட்டங்களையும் இந்நூலில் இடம்பெற்றுள்ள பாடல்கள் தோன்றிய பின்னணியினையும் கவிஞர் குறிப்பிடுகிறார்.

சுதந்திரத்திற்கு முந்திய இந்தியாவில் எந்த மாநிலமும் தனி ஒரு மொழியினைக் கொண்டதாயில்லை. எல்லா மாநிலங்களிலுமே ஆங்கிலம்தான் ஆட்சிமொழி, பயிற்சி மொழி, நீதிமொழி, நிர்வாக மொழி!

இன்றைய இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மாநிலமொழியே ஆட்சிமொழி. மாநிலங்களின் பெயர்களும்கூட மாநில மொழிகளின் பெயராலேயே உள்ளன. இவ்வாறாக அமைந்திட வேண்டும் என்பதே பழைய காங்கிரஸ் கொள்கை. காந்திஜி வகுத்தளித்த திட்டம். ஏனைய தேசியத் தலைவர்களெல்லாம் ஏற்றுக்கொண்டதுமாகும்.

சுதந்திரம் கிட்டியவுடன் மாநிலங்களின் புனரமைப்பிற்கான செயற்பாடுகளைத் தொடங்கினர்.

தமிழகத்தின் நிலைமட்டும் வேறுவிதமாயிருந்தது. இங்கேயுள்ள கட்சிகள் எது ஒன்றும் இப்பிரச்சினையில் அக்கறை காட்டிடவில்லை!

‘மதராஸ் மனதே’ என்றனர் ஆந்திரர். “காசர்க் கோடு முதல் கன்னியாகுமரி வரை தமதென்றனர் கேரளியர். ‘நீலகிரி மட்டுமின்றி கோயமுத்தூரும் தங்கட்கே” என்றார்கள் கன்னட நாட்டினர்.

தமிழர்க்குரிய பகுதிகளைக் காத்திடவோ கேட்டிடவோ எவரும் முன்வரவில்லை. ''மதராஸ் மனதே'' எனச் சென்னை நகரின் தெருக்களில் பேரணி நடத்தினர் ஆந்திரர். 'தஞ்சை மாவட்டமும் மதுரை மாவட்டமும் எங்களவையே, அவை தெலுங்கர் ஆண்ட பகுதிகள் எனவும் பேசத் தொடங்கினர்.

ஆந்திர - கேரள - கன்னடக்காரர்களிடமிருந்து தமிழ் நாட்டை, தமிழ் நிலத்தைக் காத்திடவும், பறிபோய்விட்ட எல்லைகளை மீட்டிடவும் தமிழர்கட்கு ஓர் அமைப்பு தேவைப்பட்டது. தமிழரசுக் கழகம் துவக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம், திருவிதாங்கூர் ராஜ்ஜியத்தில் இணைக்கப்பட்டிருந்தது. நூற்றுக்கு நூறெனத் தமிழர்கள் வாழுகின்ற அப்பகுதியைத் தமிழகத்துடன் இணைத்திட வேண்டும் என அங்குள்ள தமிழர்கள் கொதித்தெழுந்து கூறினர். அதற்கென அவர்கள் கண்ட அமைப்பு, 'திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ்!'. அதன் செயற்பாட்டினர் ''தாய்த் தமிழகத்துடன் கன்னியாகுமரி மாவட்டத்தை இணைத்திட வேண்டும்'' என இயக்கம் கண்டனர்.

திருப்பதி முதல் சித்தூர் மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்துடன் இணைத்திட வேண்டும் என்பதற்கு அங்குள்ள தமிழர்கள் இயக்கம் துவக்கினர். அந்த இயக்கத்தின் பெயர், 'வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டி'. தெற்கிலும் வடக்கிலும் உள்ள இந்த இரு அமைப்புகளுடனும் தொடர்புகொண்டு தமிழரசுக் கழகம் செயல்படத் தொடங்கிற்று. விளக்கக் கூட்டங்கள் வேகமாக நடந்தன. பல இளைஞர்கள் தமிழ் மாநிலம் அமைத்திடத் தங்களின் உயிரையும் பொருட்டாக மதிக்காமல் உழைத்திட முன் வந்தனர். நாடு முற்றிலும் தமிழரசுக் கிளைக்கழகங்கள் ஆரம்பமாயின. பல ஆயிரம் தொண்டர்கள் சேர்ந்தனர். பலமான அமைப்பாகத் தமிழரசுக் கழகம் வளர்ந்தது.

பத்திரிகைகளின் ஆதரவில்லை. கட்சிகளின் ஒத்துழைப்பில்லை. பணபலமும் இல்லை. ஆனால் மக்களின் ஆதரவு நாளுக்கு நாள் பெருகிற்று. மும்முனைகளிலும் போராட்டம் வலுவாக திருவிதாங்கூர் கொச்சி ராஜ்ஜியம் (கேரளத்திற்கு அன்றுள்ள பெயர்) மட்டுமல்ல, மதராஸ் ராஜ்ஜிய அரசும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது. பல்லாயிரம் பேர் சிறைப்பட்டனர். இருவர் துப்பாக்கிச் சூட்டினால் இறந்தனர். இருவர் சிறைச்சாலையில் உயிர்துறந்தார்கள்.

சென்னை நகரை ஆந்திரர்கட்கும் தமிழர்கட்கும் சரிபாதியாகப் பிரித்தளிப்பதென்ற மத்திய அரசின் திட்டம் முறியடிக்கப்பட்டது.

சென்னையை சி.ஸ்டேட்டாக டில்லியின் கீழ் வைப்பதென்கின்ற திட்டம் உடைத்தெறியப்பட்டது. சென்னை தமிழர்கட்கே என ஆக்கப்பட்டது.

கன்னியாகுமாரி மாவட்டம் தாய்த் தமிழகத்துடன் இணைக்கப்பட்டது; 1957 நவம்பர் முதல் நாளன்று.

சித்தூர் மாவட்டம் முழுமையுமாக ஆந்திர்கட்கென ஆக்கப்பட்டதை எதிர்த்துப் போராடி, திருத்தணி தாலுகா மீட்கப்பட்டது; 1960 ஏப்ரல் முதல் நாள்.

திருத்தணி மீட்சியில் வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டியின் செயற்பாடு மிக அதிகம். இதற்கெனவே உழைத்து உயிர் துறந்தவர் மங்களம் கிழார் எனும் மாமனிதர். மற்றும் திருத்தணி சுப்பிரமணியம், விநாயம் எம்.எல்.ஏ. போன்றோரும் குறிப்பிடத்தக்கவராவர்.

கன்னியாகுமரி மாவட்ட மீட்சியின் பெரும் பங்கு தி.த.நா. காங்கிரஸ் அமைப்பினரையே சாரும். அதில் அங்கம் வகித்த பெரிய மனிதர்கள் பலர். செல்வாக்கு மிகுந்த அவர்களைச் செயற்படச் செய்த செயலாளர் தெற்கெல்லைத் தளபதி எனப் பெயர் பெற்ற திரு. 'பி.எஸ்.மணி. இவர் சுதந்திரப் போராட்டத் தியாகியுமாவார்.




''இப்போராட்டங்களில் என் பங்கும் குறைந்ததன்று. திங்கள் இரு முறை ஏடுகள் இரண்டும் கிழமை ஏடு ஒன்றுமாக மூன்று ஏடுகளை நடத்தினேன். தமிழகமெங்கும் சுற்றி சொற்பொழிவுகள் ஆற்றினேன். பொதுச் செயலாளனாகப் பொறுப் பேற்றுச் செயல்பட்டது மட்டுமின்றி, பல போராட்டங்களையும் முன்னின்று நடத்தினேன்; சிறைப்பறவையுமானேன்.

நானும் தலைவர் ம.பொ.சி. அவர்களும் இணைந்து செயல்பட்டது. சமயம் கடந்த இனவழி ஒருமைப்பாட்டிற்கு ஒரு எடுத்துக்காட்டு.

தமிழக எல்லைப் போராட்டத்தையும் அதன் எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் நான் எழுதிய பாடல்கள் அனைத்தும் அச்சிடற்கெனத் தேடியபோது இந்நூலில் உள்ள அளவே; கிட்டியதும் முழுவதுமாக வெளிவரும்.

இந்திய மாநிலங்களின் சீரமைப்பு பற்றியும், அந்த அடிப்படையில் புதிய தமிழகம் அமைந்தது பற்றியும் ஒரு நூல் வருமானால் ஆய்வாளர்கட்கு மிகவும் பயன்தரும். எழுதிட எண்ணம், இறையருள் துணை நிற்குமாக!

இந்நூல் அளவில் சிறியதேயாயினும் வரலாற்றுச் சிறப்புடையது. 1947க்குப் பின்னர் 1960 வரையிலுமான சில நல்ல தகவல்களை இந்நூல் தருகின்றது'' என்று கவிஞரே குறிப்பிடுகிறார்.

தமிழக எல்லைகள் பறிபோய்க் கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டு கவிஞரால் பொறுத்துக்கொண்டு இருக்க முடியவில்லை. சித்தூர் மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பகுதிகளை அமையவுள்ள ஆந்திரத்துடன்

இணைத்திடுவதென இந்திய அரசு முடிவெடுத்தது. முடிவை மாற்றிடற்கு எழுகவெனத் தமிழர்கட்கு அழைப்பு விடுத்து கவிஞர் 1.4.1953 அன்று தமிழ் முழக்கம் ஏட்டில், 'தமிழனே துள்ளி எழு!' என்று தலைப்பிட்டு எழுதினார். அதில்,

"தமிழகத்தின் எல்லைதன்னை வெட்டி
யெடுத்துத்
தருவதுவாம் ஆந்திரருக்(கு) என்ன நியதி!
அமிழ்தென்னும் தமிழ்மொழிதான் தோன்றி
நாளாய்
யாரும்இது போல்கொடுமை செய்திட வில்லை
தெற்குமுனை முற்றும் மலையாளி யிடத்தில்
சேர்ந்திருகப் பதைத்திருக்கும் தமிழர் உடைய
வெற்புயர்ந்த வேங்கடத்தை ஆந்திரத் தார்க்கு
விட்டுவிட டில்லிசொன்னால் ஏற்க வேண்டுமோ?

என்று கவிஞர் வினாத் தொடுக்கிறார். தொடர்ந்து,

கடல்வந்து கொண்டதுண்டு தமிழர் பூமியைக்
காத்திடற்(கு) அன்றுநாம் இருந்திட வில்லை!
மடல்விரிந்த பாளையென மீசை இருக்க
வேங்கடத்தைக் காத்திடாமல் சும்மா இருந்தால்
சிலைநாட்டிக் காரிஉமிழ்ந்(து) ஏழனம் செய்வார்
சிந்தனைசெய் வாய்தமிழா வேங்கடம் மீட்க
அலைஅலையாய் எழுந்தார்தமிழ் நாட்டவர்
என்ற
அரியவர லாறெழுதத் துள்ளி யெழுவாய்!

என்று உணர்வூட்டி அழைப்பு விடுக்கிறார்.

திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸின் செயற்பாடு குறைந்தபோது அதை ஊக்குவிக்கத் தமிழரசுக் கழக மாநாட்டை நாகர்கோவிலில் கூட்டவேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த மாநாட்டிற்கு வருவதற்குத் தமிழரசுக் கழகத் தொண்டர்களுக்கு அழைப்பு விடுத்து தமிழ் முழக்கம் இதழில் கவிஞர் 'கூப்பாடு கேக்குது!' எனத் தலைப்பிட்டு,

வளமார் தமிழக வாழ்வைப் புதுக்க
களம்புகத் துடிக்கும் கன்னித் தமிழனே
நலஞ்சேர் நாஞ்சில் தமிழகந் தன்னில்
நடக்குது மாநாடு புறப்படு நீயே!"

என்று எழுதினார்.

காங்கிரஸ் அமைச்சர்கள் தமிழ் மாநில அமைப்பில் அக்கறை காட்டிடாததைக் கண்டித்து கவிஞர் தமிழ் முழக்கம் ஏட்டில் 'தமிழ்த்தாய் ஓலம்!' எனத் தலைப்பிட்டு எழுதுகிறார். அதில் கவிஞர் மலையாவிலும் சிங்களத்திலும் பிற இடங்களிலும் தோட்டத் தொழிலாளிகள் வெளியேற்றம் நடந்ததையும் சுட்டிக்காட்டி டில்லி அரசை,

"அனியாயக் காரர்களா, ஆளுகின்ற பாவிகளா!
கனியாதோ உங்கள் மனம்? கல்லோதான் சொல்லிடுவீர்
மலையாவில் சிங்களத்தில் மற்றுமுள்ள தேசங்களில்
உலையாய்ப் பெருமூச்சில் உயிர்போகும் வேதனையில்
சாகின்றார் தமிழ்மக்கள் சற்றும்நீர் காண்ப தில்லை
வேகின்றார் வேதனையால் விழிதிறந்தும் பார்ப்பதில்லை
வெளிநாட்டின் உறவுக்காய் வேற்றுவரின் நட்புக்காய்ப்
பழியேற்றீர் எனவிருந்தேன் படுமோசம் செய்துவிட்டீர்!
அன்னியரின் நாட்டைவிட அருகிருக்கும் இனவழியார்
கன்னித் தமிழர்களின் கருவறுக்கத் துணிந்துவிட்டார்!

என்று சாடுகிறார்.

'தமிழரசினைக் கண்டு தமிழா நீ வாழ்க வென்றே கொடி பறந்தாடுது பார்' என்று தமிழனை உற்சாகப்படுத்தப் பாடும் கவிஞர், தமிழ் மாநிலம் அமைவதால் ஏற்படும் நன்மைகளைப் பட்டியலிடுகிறார். மாநிலங்களின் சுயாட்சி என்றால் என்ன என்பதை விளக்குகிறார். 'எல்லை திருடியே தொல்லை தருகின்ற எத்தரை வெல்வோம் வா!' என எல்லைப் போருக்கு அழைப்பு விடுக்கிறார். 'தட்சிண மென்னுமோர் ராஜ்ஜியம் அமைக்கச் சதி பல புரிகின்றார் சிலபேர், ஏமாற மாட்டோம்' எனப் பாடுகிறார்.

ஆந்திரம், கன்னடம், கேரளம் அகன்று 11.11.1956 அன்று தமிழகம் தனி மாநிலம் ஆனபோது, 'தமிழகம் தனியாட்சி ஏற்றதுபார் நமது சங்கடம் யாவுமே ஓடுதுபார்' என்கிறார். 'எந்தாய் நாடு செந்தமிழ் நாடு என்றென்றும் வாழியவே! எல்லைகள் மீண்டு தொல்லைகள் தீர்ந்து இன்பமாய் வாழியவே!' என்று திருத்தணி மீட்சிக்காகப் போராடிச் சிறைப்பட்டு சென்னைச் சிறைச்சாலைக்குள் தமிழரசுக் கழகப் போராட்ட வீரர்கள் இருந்தபோது, அவர்கள் காலையிலும் மாலையிலும் ஒன்றுகூடி நாட்டு வாழ்த்துப் பாடலாகப் பாடுவதற்காக இப்பாடலை இயற்றத்தூண்டிக் கவிஞர் இயற்றினார்.

ஆந்திரத்தில் இணைக்கப்பட்ட திருத்தணி தாலுகாவைத் திரும்பப் பெற்று தமிழகத்துடன் இணைத்திடும் வெற்றி விழா 1.4.1960 அன்று திருத்தணியில் நடந்தது. அவ்விழாவின் வரலாற்று விளக்கமாகவும் கவிஞர் ஒரு பாடலை இயற்றியுள்ளார்.

இப்படிக் கவிஞர் களப்பாட்டு நெடுகிலும் தொட்ட இடமெல்லாம் தமிழக வரலாறும் இந்திய வரலாறும் கொட்டிக் கிடக்கும் வகையில் பாடியுள்ளார். அந்த வகையில் இந்த நூல் ஓர் அரிய வரலாற்று ஆவணமாகவும் தமிழக வரலாற்றின் காலக் கண்ணாடியாகவும் திகழ்கிறது. இத்தகைய அரிய பணிகளைச் செய்த கவிஞரையும் அவருடைய படைப்புகளையும் காலம் மறந்துவிட்டது. குறிப்பாகத் தமிழகமும் தமிழர்களும் மறந்துவிட்டார்கள். இத்தகைய களப்போராளிகளை நாளும் எண்ணி எண்ணிப் போற்றுவது நம் கடன் என்பதையும் உணராத சமூகமாகத் தமிழ்ச் சமூகம் இருக்கிறது என்பது வேதனைக்குரியது.

கட்டுரையாளர், தமிழியல்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி